ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# ॥ நித்யாநுஸந்தாநம் ॥
# (வடகலை ஸம்ப்ரதாயம்)

*This document* has been prepared by*


ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***


*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

www.prapatti.com

# பொருள் அடக்கம்

| | | |
|---|---|---|
| 1 | பெரியாழ்வார் திருமொழித் தனியன்கள் | 5 |
| 2 | திருப்பல்லாண்டு | 7 |
| 3 | திருப்பலுயெழுச்சி | 11 |
| 4 | திருப்பாவை | 15 |
| 5 | வெண்ணெய்யளைந்த | 25 |
| 6 | திருமஞ்சனகாலத்தில் சேர்த்து அநுசந்திக்கும் பாசுரங்கள் | 27 |
| 7 | ஆனிரை | 29 |
| 8 | ஈந்திரனோடு | 31 |
| 9 | சென்னியோங்கு | 35 |
| 10 | அமலனாதிபிரான் | 39 |
| 11 | கண்ணினுண் சிறுத்தாம்பு | 41 |
| 12 | திருவாய்மொழித் தனியன்கள் | 43 |
| 13 | உயர்வற | 45 |
| 14 | வீடுமின் | 47 |
| 15 | கிளரொளி | 49 |
| 16 | ஒழிவில் காலம் | 51 |
| 17 | ஒன்றுந்தேவும் | 53 |
| 18 | ஆராவமுதே | 57 |
| 19 | உலகம் உண்ட | 59 |
| 20 | கங்குலும் பகலும் | 63 |
| 21 | நெடுமாற்கடிமை | 67 |
| 22 | மாலை நண்ணி | 71 |
| 23 | சூழ்விசும்பு | 73 |

www.prapatti.com

24 உனியே ........ 75
25 இராமாநுச நூற்றந்தாதி ........ 79
26 வாரணமாயிரம் ........ 97
27 நாலாயிர திவ்யப் பிரபந்தத் தனியன்கள் ........ 99
28 அடைக்கலப்பத்து ........ 107
29 மும்மணிக்கோவை ........ 109
30 நவமணிமாலை ........ 113
31 அதிகாரசங்க்ரகம் ........ 117
32 ப்ரபந்தசாரம் ........ 129
33 பிள்ளையந்தாதி ........ 135
34 சாற்றுமுறை ........ 139
35 ஸ்வாமி நிகமாந்தமஹாதேஶிகந் திருநாள் பாட்டு ........ 141
36 ஶ்ரீதேஶிகமங்களம் ........ 143

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பெரியாழ்வார் திருமொழித் தனியன்கள் ॥

குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநஶேஷாந்
நரபதிபரிக்லுப்தம் ஶுல்கமாதாதுகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றொரு கால்*
சொன்னார் கழற்கமலம் சூடினோம்*- முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம்* கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம்* நெஞ்சமே! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று*
ஈண்டிய சங்கம் எடுத்தூத* வேண்டிய
வேதங்களோதி* விரைந்து கிழியறுத்தான்*
பாதங்கள் யாமுடைய பற்று

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

www.prapatti.com

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திருப்பல்லாண்டு ॥

## காப்பு

‡பல்லாண்டு பல்லாண்டு⋆ பல்லாயிரத்தாண்டு⋆
பல கோடி நூறாயிரம்⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!⋆ உன்-
சேவடி செவ்வி திருக்காப்பு (1)

‡அடியோமோடும் நின்னோடும்⋆ பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு⋆
வடிவாய் நின் வல மார்பினில்⋆ வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு⋆
வடிவார் சோதி வலத்துறையும்⋆ சுட-
ராழியும் பல்லாண்டு⋆
படை போர் புக்கு முழங்கும்⋆ அப்பாஞ்ச-
சன்னியமும் பல்லாண்டே (2)

வாழாட் பட்டு நின்றீருள்ளீரேல்⋆ வந்து
மண்ணும் மணமும் கொண்மின்⋆
கூழாட் பட்டு நின்றீர்களை⋆ எங்கள்
குழுவினில் புகுதலொட்டோம்⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள்⋆
இராக்கதர்வாழ்⋆ இலங்கை-
பாழாளாகப் படை பொருதானுக்குப்⋆
பல்லாண்டு கூறுதுமே (3)

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து⋆ எங்கள் குழாம் புகுந்து⋆
கூடு மனமுடையீர்கள் வரம்பொழி⋆ வந்தொல்லைக் கூடுமினோ⋆
நாடு நகரமும் நன்கறிய⋆ நமோ நாராயணாயவென்று⋆
பாடு மனமுடைப் பத்தருள்ளீர்!⋆ வந்து பல்லாண்டு கூறுமினே (4)

www.prapatti.com

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி⋆
    அசுரர் இராக்கதரை⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த⋆
    இருடீகேசன் தனக்கு⋆
தொண்டக் குலத்திலுள்ளீர்! வந்தடி தொழுது⋆
    ஆயிர நாமம்சொல்லி⋆
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து⋆ பல்லாண்டு பல்-
    லாயிரத்தாண்டென்மினே (5)

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன்⋆
    ஏழ் படி கால் தொடங்கி⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம்⋆ திரு-
    வோணத் திருவிழவில்
அந்தியம் போதில் அரியுருவாகி⋆
    அரியை அழித்தவனை⋆
பந்தனை தீரப் பல்லாண்டு⋆ பல்லாயிரத்-
    தாண்டென்று பாடுதுமே (6)

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி⋆
    திகழ் திருச்சக்கரத்தின்⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று⋆
    குடிகுடி ஆட்செய்கின்றோம்⋆
மாயப் பொருபடை வாணனை⋆ ஆயிரந்
    தோளும் பொழி குருதி-
பாய⋆ சுழற்றிய ஆழி வல்லானுக்குப்⋆
    பல்லாண்டு கூறுதுமே (7)

நெய்யிடை நல்லதோர் சோறும்⋆ நியதமும்
    அத்தாணிச் சேவகமும்⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு⋆
    காதுக்குக் குண்டலமும்⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து⋆ என்னை
    வெள்ளுயிராக்க வல்ல⋆



www.prapatti.com

பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப்⋆
பல்லாண்டு கூறுவனே (8)

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை
உடுத்துக்⋆ கலத்ததுண்டு⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன⋆
சூடுமித்தொண்டர்களோம்⋆
விடுத்த திசைக்கருமம் திருத்தித்⋆ திரு-
வோணத் திருவிழவில்⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப்⋆
பல்லாண்டு கூறுதுமே (9)

எந்நாள் எம்பெருமான்⋆ உன்தனக்கடி-
யோம் என்றெழுத்துப்பட்ட-
அந்நாளே⋆ அடியோங்கள் அடிக்குடில்⋆
வீடுபெற்றுய்ந்ததுகாண்⋆
செந்நாள் தோற்றித்⋆ திருமதுரையுள் சிலை-
குனித்து⋆ ஐந்தலைய-
பைந்நாகத் தலை பாய்ந்தவனே!⋆ உன்னைப்
பல்லாண்டு கூறுதுமே (10)

‡அல்வழக் கொன்றுமில்லா⋆ அணிகோட்டியர் கோன்⋆
அபிமான துங்கன்-
செல்வனைப்போலத்⋆ திருமாலே! நானும்
உனக்குப் பழவடியேன்⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று⋆
நாமம் பல பரவி⋆
பல்வகையாலும் பவித்திரனே!⋆ உன்னைப்
பல்லாண்டு கூறுவனே (11)

‡பல்லாண்டென்று பவித்திரனைப்⋆ பர-
மேட்டியை⋆ சார்ங்கம் என்னும்
வில்லாண்டான் தன்னை⋆ வில்லிபுத்தூர் விட்டு-
சித்தன் விரும்பியசொல்⋆



www.prapatti.com

நல்லாண்டென்று நவின்றுரைப்பார்⋆ நமோ
    நாராயணாயவென்று⋆
பல்லாண்டும் பரமாத்மனைச்⋆ சூழ்ந்திருந்-
    தேத்துவர் பல்லாண்டே (12)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ திருப்பள்ளியெழுச்சி ॥

## திருமலை ஆண்டான் அருளிச்செய்த தனியன்

தமேவமத்வா பரவாஸுதே$_3$வம்
    ரங்கே$_3$ஶயம் ராஜவத$_3$ர்ஹணீயம் ।
ப்ராபே$_3$ாத$_4$கீம் யோऽக்ருத ஸூக்திமாலாம்
    ப$_4$க்தாங்க்$_4$ரி ரேணும் ப$_4$க$_3$வந்தமீடே$_3$ ॥

## திருவரங்கப்பெருமாள் அரையர் அருளிச்செய்த தனியன்

மண்டங்குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்த்⋆
    தொண்டரடிப்பொடித் தொன்னகரம்⋆-வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத்தம்மானைப்⋆ பள்ளி
    உணர்த்தும் பிரானுதித்த வூர்

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

‡கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்⋆
    கனையிருள் அகன்றது காலையம் பொழுதாய்⋆
மது விரிந்தொழுகின மாமலர் எல்லாம்⋆
    வானவர் அரசர்கள் வந்து வந்தீண்டி⋆
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த⋆
    இருங்களிற்றீட்டமும் பிடியொடு முரசும்⋆
அதிர்தலில் அலை கடல் போன்றுளதெங்கும்⋆
    அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (1)

கொழுங்கொடி முல்லையின் கொழு மலரணவிக்⋆
    கூர்ந்தது குண திசை மாருதம் இதுவோ⋆
எழுந்தன மலர் அணைப் பள்ளிகொண்டன்னம்⋆
    ஈன் பனி நனைந்த தம் இருஞ்சிறகுதறி⋆

www.prapatti.com

விழுங்கிய முதலையின் பிலம் புரை பேழ்வாய்⋆
    வெள்ளெயிறுற அதன் விடத்தினுக்கனுங்கி⋆
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த⋆
    அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (2)

சுடர் ஒளி பரந்தன சூழ் திசை எல்லாம்⋆
    துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப்⋆
படர் ஒளி பசுத்தனன் பனி மதி இவனோ⋆
    பாயிருள் அகன்றது பைம் பொழிற் கமுகின்⋆
மடலிடைக் கீறி வண் பாளைகள் நாற⋆
    வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ⋆
அடல் ஒளி திகழ் தரு திகிரியந் தடக்கை⋆
    அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (3)

மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்⋆
    வேய்ங்குழல் ஓசையும் விடை மணிக் குரலும்⋆
ஈட்டிய இசை திசை பரந்தன வயலுள்⋆
    இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை⋆
வாட்டிய வரிசிலை வானவரேறே!⋆
    மா முனி வேள்வியைக் காத்து⋆ அவபிரதம்
ஆட்டிய அடு திறல் அயோத்தி எம் அரசே!⋆
    அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (4)

புலம்பின புட்களும் பூம் பொழில்களின் வாய்⋆
    போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி⋆
கலந்தது குணதிசைக் கனைகடல் அரவம்⋆
    களி வண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த⋆
அலங்கலந் தொடையல் கொண்டடியிணை பணிவான்⋆
    அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா⋆
இலங்கையர் கோன் வழிபாடு செய் கோயில்⋆
    எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே (5)

இரவியர் மணி நெடும் தேரொடும் இவரோ⋆
    இறையவர் பதினொரு விடையரும் இவரோ⋆

மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ⋆
    மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி⋆
புரவியோடாடலும் பாடலும் தேரும்⋆
    குமர தண்டம் புகுந்தீண்டிய வெள்ளம்⋆
அருவரை அனையநின் கோயில் முன் இவரோ⋆
    அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (6)

அந்தரத்தமரர்கள் கூட்டங்கள் இவையோ⋆
    அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ⋆
இந்திரன் ஆனையும் தானும் வந்திவனோ⋆
    எம்பெருமான் உன் கோயிலின் வாசல்⋆
சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க⋆
    இயக்கரும் மயங்கினர் திருவடித் தொழுவான்⋆
அந்தரம் பாரிடம் இல்லை மற்றிதுவோ⋆
    அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (7)

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க⋆
    மாநிதி கபிலை ஒண் கண்ணாடி முதலா⋆
எம்பெருமான் படிமக்கலம் காண்டற்கு⋆
    ஏற்பன வாயின கொண்டு நன் முனிவர்⋆
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ⋆
    தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி⋆
அம்பர தலத்தில் நின்றகல்கின்றதிருள் போய்⋆
    அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (8)

‡ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி⋆
    யாழ் குழல் முழவமோடிசை திசை கெழுமி⋆
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்⋆
    கந்தருவர் அவர் கங்குலுள் எல்லாம்⋆
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்⋆
    சித்தரும் மயங்கினர் திருவடித் தொழுவான்⋆
ஆதலில் அவர்க்கு நாள் ஓலக்கம் அருள⋆
    அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே (9)



www.prapatti.com

‡கடி மலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ⋆
கதிரவன் கனை கடல் முளைத்தனன் இவனோ⋆
துடியிடையார் சுரி குழல் பிழிந்துதறித்⋆
துகில் உடுத்தேறினர் சூழ் புனல் அரங்கா⋆
தொடை ஒத்த துளவமும் கூடையும் பொலிந்து⋆
தோன்றிய தோள் தொண்டர் அடிப்பொடி என்னும்
அடியனை⋆ அளியன் என்றருளி உன் அடியார்க்-
காட்படுத்தாய்!⋆ பள்ளி எழுந்தருளாயே! (10)

॥ தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திருப்பாவை ॥

வெண்டளையால் வந்த எட்டடி நாற்சீர் ஒரு விகற்பக் கொச்சகக்கலிப்பா

நீளாதுங்க$_3$ ஸ்தநகி$_3$ரிதடீ ஸுப்தமுத்$_3$போ$_3$த்$_4$ய க்ருஷ்ணம்
பாரார்த்$_2$யம் ஸ்வம் ஶ்ருதிஶதஶிரஸ்ஸித்$_3$த$_4$மத்$_4$யாபயந்தீ ।
ஸ்வோச்சி$_2$ஷ்டாயாம் ஸ்ரஜிநிக$_3$ளிதம் யா ப$_3$லாத்க்ருத்ய பு$_4$ங்க்தே
கோ$_3$தா$_3$ தஸ்யை நம இத$_3$மித$_3$ம் பூ$_4$ய ஏவாஸ்து பூ$_4$ய: ॥

அன்னவயல் புதுவை ஆண்டாள் அரங்கற்குப்⋆
பன்னு திருப்பாவைப் பல்பதியம்⋆- இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற் பாமாலை⋆ பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே! தொல்பாவை⋆
பாடி அருளவல்ல பல்வளையாய்!⋆ நாடிநீ
வேங்கடவற்கென்னை விதி என்ற இம்மாற்றம்⋆
நாம் கடவா வண்ணமே நல்கு

‡மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்⋆
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்⋆
சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்⋆
கூர்வேல் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன்⋆
ஏரார்ந்த கண்ணி யசோதை இளம் சிங்கம்⋆
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்⋆
நாராயணனே நமக்கே பறை தருவான்⋆
பாரோர் புகழப் படிந்தேலோர் எம் பாவாய் (1)

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்⋆
செய்யும் கிரிசைகள் கேளீரோ⋆ பாற்கடலுள்
பையத்துயின்ற பரமனடி பாடி⋆
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி⋆

www.prapatti.com

மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்⋆
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்⋆
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி⋆
உய்யுமாறெண்ணி உகந்தேலோர் எம் பாவாய் (2)

‡ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி⋆
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்⋆
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து⋆
ஓங்கு பெறுஞ்செந்நெலூடு கயல் உகளப்⋆
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண் படுப்பத்⋆
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக்⋆ குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்⋆
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம் பாவாய் (3)

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கை கரவேல்⋆
ஆழி உள் புக்கு முகந்து கொடார்த்தேறி⋆
ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்துப்⋆
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்⋆
ஆழி போல் மின்னி வலம்புரி போல் நின்றதிர்ந்து⋆
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்⋆
வாழ உலகினில் பெய்திடாய்⋆ நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம் பாவாய் (4)

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்⋆
தூய பெருநீர் யமுனைத் துறைவனை⋆
ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கைத்⋆
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்⋆
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது⋆
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்⋆
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்⋆
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம் பாவாய் (5)

புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயில்⋆
வெள்ளை விளி சங்கின் பேரரவம் கேட்டிலையோ⋆

பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு⋆
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி⋆
வெள்ளத்தரவில் துயில் அமர்ந்த வித்தினை⋆
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்⋆
மெள்ள எழுந்தரி என்ற பேரரவம்⋆
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம் பாவாய் (6)

கீசு கீசென்றெங்கும் ஆனைச்சாத்தன்⋆ கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப் பெண்ணே⋆
காசும் பிறப்பும் கல கலப்பக் கை பேர்த்து⋆
வாச நறும் குழல் ஆய்ச்சியர்⋆ மத்தினால்
ஓசை படுத்த தயிர் அரவம் கேட்டிலையோ⋆
நாயகப் பெண் பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி⋆
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ⋆
தேசம் உடையாய்! திறவேலோர் எம் பாவாய் (7)

கீழ்வானம் வெள்ளென்றெருமை சிறு வீடு⋆
மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும்⋆
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து⋆ உன்னைக்-
கூவுவான் வந்து நின்றோம்⋆ கோது கலம் உடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறை கொண்டு⋆
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய⋆
தேவாதிதேவனைச் சென்று நாம் சேவித்தால்⋆
ஆவா என்றாராய்ந்தருளேலோர் எம் பாவாய் (8)

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்⋆
தூபம் கமழத் துயில் அணைமேல் கண் வளரும்⋆
மாமான் மகளே! மணிக் கதவம் தாள் திறவாய்⋆
மாமீர்! அவளை எழுப்பீரோ⋆ உன் மகள் தான்
ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ⋆
ஏமப் பெருந் துயில் மந்திரப் பட்டாளோ⋆
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று⋆
நாமம் பலவும் நவின்றேலோர் எம் பாவாய் (9)

www.prapatti.com

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்⋆
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்⋆
நாற்றத் துழாய் முடி நாராயணன்⋆ நம்மால்
போற்றப் பறை தரும் புண்ணியனால்⋆ பண்டொரு நாள்
கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகரணனும்⋆
தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ⋆
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே⋆
தேற்றமாய் வந்து திறவேலோர் எம் பாவாய் (10)

கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து⋆
செற்றார் திறல் அழியச் சென்று செருச் செய்யும்⋆
குற்றம் ஒன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே⋆
புற்றரவல்குல் புனமயிலே! போதராய்⋆
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்து⋆ நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர் பாடச்⋆
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி⋆ நீ
எற்றுக்குறங்கும் பொருளேலோர் எம் பாவாய் (11)

கனைத்திளம் கற்றெருமை கன்றுக்கிரங்கி⋆
நினைத்து முலை வழியே நின்று பால் சோர⋆
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்⋆
பனித் தலை வீழ நின் வாசற் கடை பற்றிச்⋆
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற⋆
மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய்⋆
இனித் தான் எழுந்திராய் ஈதென்ன பேர் உறக்கம்⋆
அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோர் எம் பாவாய் (12)

புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்⋆
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்ப்⋆
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம் புக்கார்⋆
வெள்ளியெழுந்து வியாழம் உறங்கிற்று⋆
புள்ளும் சிலம்பின காண் போதரிக் கண்ணினாய்⋆
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே⋆



www.prapatti.com

பள்ளிக் கிடத்தியோ பாவாய்! நீ நன்னாளால்⋆
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோர் எம் பாவாய் (13)

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்⋆
செங்கழுநீர் வாய் நெகிழ்ந்தாம்பல் வாய் கூம்பின காண்⋆
செங்கல் பொடிக் கூறை வெண்பற் தவத்தவர்⋆
தங்கள் திருக்கோயிற் சங்கிடுவான் போதந்தார்⋆
எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும்⋆
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்⋆
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்⋆
பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம் பாவாய் (14)

எல்லே! இளம் கிளியே! இன்னம் உறங்குதியோ⋆
சில் என்றழையேன்மின் நங்கைமீர்! போதருகின்றேன்⋆
வல்லை உன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்⋆
வல்லீர்கள் நீங்களே நானே தான் ஆயிடுக⋆
ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை⋆
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்கொள்⋆
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை⋆ மாயனைப் பாடேலோர் எம் பாவாய் (15)

‡நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில் காப்பானே!⋆ கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே!⋆ மணிக்கதவம் தாள் திறவாய்⋆
ஆயர் சிறுமியரோமுக்கு⋆ அறை பறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்⋆
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்⋆
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா⋆ நீ
நேய நிலைக் கதவம் நீக்கேலோர் எம் பாவாய் (16)

அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும்⋆
எம்பெருமான் நந்த கோபாலா! எழுந்திராய்⋆
கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே! குல விளக்கே⋆
எம்பெருமாட்டி யசோதாய்! அறிவுறாய்⋆

அம்பரம் ஊடறுத்தோங்கி உலகளந்த⋆
உம்பர் கோமானே! உறங்காதெழுந்திராய்⋆
செம் பொற் கழலடிச் செல்வா பலதேவா!⋆
உம்பியும் நீயும் உறங்கேலோர் எம் பாவாய் (17)

‡உந்து மத களிற்றன் ஓடாத தோள் வலியன்⋆
நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்!⋆
கந்தம் கமழும் குழலி! கடை திறவாய்⋆
வந்தெங்கும் கோழி அழைத்தன காண்⋆ மாதவிப்-
பந்தல் மேல் பல் கால் குயில் இனங்கள் கூவின காண்⋆
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர் பாடச்⋆
செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப⋆
வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம் பாவாய் (18)

குத்து விளக்கெரிய கோட்டுக்கால் கட்டில் மேல்⋆
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேல் ஏறிக்⋆
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கை மேல்⋆
வைத்துக் கிடந்த மலர் மார்பா! வாய் திறவாய்!⋆
மைத் தடம் கண்ணினாய்! நீயுன் மணாளனை⋆
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய் காண்!⋆
எத்தனை யேலும் பிரிவாற்றகில்லாயால்⋆
தத்துவம் அன்று தகவேலோர் எம் பாவாய் (19)

முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று⋆
கப்பம் தவிர்க்கும் கலியே! துயில் எழாய்⋆
செப்பம் உடையாய்! திறல் உடையாய்⋆ செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயில் எழாய்⋆
செப்பன்ன மென் முலைச் செவ்வாய்ச் சிறு மருங்குல்⋆
நப்பின்னை நங்காய்! திருவே! துயில் எழாய்⋆
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை⋆
இப்போதே எம்மை நீராட்டேலோர் எம் பாவாய் (20)

ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப⋆
மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்⋆

www.prapatti.com

ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்⋆
ஊற்றம் உடையாய்! பெரியாய்!⋆ உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயில் எழாய்⋆
மாற்றார் உனக்கு வலி தொலைந்துன் வாசற் கண்⋆
ஆற்றாது வந்துன் அடி பணியுமா போலே⋆
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோர் எம் பாவாய் (21)

அங்கண் மா ஞாலத்தரசர்⋆ அபிமான
பங்கமாய் வந்து நின் பள்ளிக்கட்டிற் கீழே⋆
சங்கம் இருப்பார் போல் வந்து தலைப் பெய்தோம்⋆
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப் போலே⋆
செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ⋆
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்⋆
அங்கண் இரண்டும் கொண்டெங்கள் மேல் நோக்குதியேல்⋆
எங்கள் மேல் சாபம் இழிந்தேலோர் எம் பாவாய் (22)

‡மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்⋆
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து⋆
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி⋆
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்⋆
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா⋆ உன்
கோயில் நின்றிங்ஙனே போந்தருளிக்⋆ கோப்புடைய
சீரிய சிங்காசனத்திருந்து⋆ யாம் வந்த
காரியம் ஆராய்ந்தருளேலோர் எம் பாவாய் (23)

‡அன்றிவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி⋆
சென்றங்குத் தென் இலங்கை செற்றாய் திறல் போற்றி⋆
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி⋆
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி⋆
குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி⋆
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி⋆
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்⋆
இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம் பாவாய் (24)

www.prapatti.com

ஒருத்தி மகனாய்ப் பிறந்து⋆ ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்⋆
தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த⋆
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்⋆
நெருப்பென்ன நின்ற நெடுமாலே⋆ உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதி யாகில்⋆
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி⋆
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம் பாவாய் (25)

மாலே! மணிவண்ணா! மார்கழி நீர் ஆடுவான்⋆
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்⋆
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன⋆
பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே⋆
போல்வன சங்கங்கள் போய்ப் பாடுடையனவே⋆
சாலப் பெரும் பறையே பல்லாண்டிசைப்பாரே⋆
கோல விளக்கே கொடியே விதானமே⋆
ஆலின் இலையாய்! அருளேலோர் எம் பாவாய் (26)

‡கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா!⋆ உன் தன்னைப்-
பாடிப் பறை கொண்டு யாம் பெறு சம்மானம்⋆
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்⋆
சூடகமே தோள்வளையே தோடே செவிப் பூவே⋆
பாடகமே என்றனைய பல் கலனும் யாம் அணிவோம்⋆
ஆடை உடுப்போம் அதன் பின்னே பால் சோறு⋆
மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்⋆
கூடியிருந்து குளிர்ந்தேலோர் எம் பாவாய் (27)

‡கறவைகள் பின் சென்று கானஞ்சேர்ந்துண்போம்⋆
அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து⋆ உன் தன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்⋆
குறைவொன்றும் இல்லாத கோவிந்தா⋆ உன் தன்னோ-
டுறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது⋆
அறியாத பிள்ளைகளோம் அன்பினால்⋆ உன் தன்னைச்



www.prapatti.com

சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே⋆
இறைவா! நீ தாராய் பறையேலோர் எம் பாவாய் (28)

‡சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து⋆ உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்⋆
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து⋆ நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது⋆
இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா!⋆
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்⋆ உன் தன்னோ-
டுற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட் செய்வோம்⋆
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம் பாவாய் (29)

‡வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை⋆
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி⋆
அங்கப் பறை கொண்டவாற்றை⋆ அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர் பிரான் கோதை சொன்ன⋆
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமே⋆
இங்கிப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரைத் தோள்⋆
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்⋆
எங்கும் திருவருள் பெற்றின்புறுவர் எம் பாவாய் (30)

‖ ஆண்டாள் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com

www.prapatti.com

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வெண்ணெய்யளைந்த ॥

நீராட்டல்

‡வெண்ணெய் அளைந்த குணுங்கும்⋆
விளையாடு புழுதியும் கொண்டு⋆
திண்ணென இவ்விரா உன்னைத்⋆
தேய்த்துக் கிடக்க நானொட்டேன்⋆
எண்ணெய்ப் புளிப்பழம் கொண்டு⋆
இங்கெத்தனை போதும் இருந்தேன்⋆
நண்ணல் அரிய பிரானே!⋆
நாரணா! நீராட வாராய் (1)

கன்றுகள் ஓடச் செவியில்⋆ கட்டெறும்பு பிடித்திட்டால்⋆
தென்றிக் கெடுமாகில்⋆ வெண்ணெய் திரட்டி விழுங்குமா காண்பன்⋆
நின்ற மராமரம் சாய்த்தாய்!⋆ நீ பிறந்த திருவோணம்⋆
இன்று நீ நீராட வேண்டும்⋆ எம்பிரான்! ஓடாதே வாராய் (2)

பேய்ச்சி முலை உண்ணக் கண்டு⋆ பின்னையும் நில்லாதென் நெஞ்சம்⋆
ஆய்ச்சியர் எல்லாரும் கூடி⋆ அழைக்கவும் நான் முலை தந்தேன்⋆
காய்ச்சின நீரொடு நெல்லி⋆ கடாரத்தில் பூரித்து வைத்தேன்⋆
வாய்த்த புகழ் மணிவண்ணா!⋆ மஞ்சனம் ஆட நீ வாராய் (3)

கஞ்சன் புணர்ப்பினில் வந்த⋆ கடிய சகடம் உதைத்து⋆
வஞ்சகப் பேய்மகள் துஞ்ச⋆ வாய் முலை வைத்த பிரானே!⋆
மஞ்சளும் செங்கழு நீரின்⋆ வாசிகையும் நாறு சாந்தும்⋆
அஞ்சனமும் கொண்டு வைத்தேன்⋆ அழகனே! நீராட வாராய் (4)

அப்பம் கலந்த சிற்றுண்டி⋆ அக்காரம் பாலில் கலந்து⋆
சொப்பட நான் சுட்டு வைத்தேன்⋆ தின்னல் உறுதியேல் நம்பி!⋆
செப்பிள மென்முலை யார்கள்⋆ சிறு புறம் பேசிச் சிரிப்பர்⋆
சொப்பட நீராட வேண்டும்⋆ சோத்தம் பிரான்! இங்கே வாராய் (5)

www.prapatti.com

எண்ணெய்க் குடத்தை உருட்டி⋆ இளம் பிள்ளை கிள்ளி யெழுப்பி⋆
    கண்ணைப் புரட்டி விழித்துக்⋆ கழகண்டு செய்யும் பிரானே!⋆
உண்ணக் கனிகள் தருவன்⋆ ஒலிகடல் ஓத நீர் போலே⋆
    வண்ணம் அழகிய நம்பீ!⋆ மஞ்சனம் ஆட நீ வாராய் (6)

கறந்த நற் பாலும் தயிரும்⋆ கடைந்துறிமேல் வைத்த வெண்ணெய்⋆
    பிறந்ததுவே முதலாகப்⋆ பெற்றறியேன் எம்பிரானே!⋆
சிறந்த நற்றாய் அலர் தூற்றும்⋆ என்பதனால் பிறர் முன்னே⋆
    மறந்தும் உரையாட மாட்டேன்⋆ மஞ்சனம் ஆட நீ வாராய் (7)

கன்றினை வால் ஓலை கட்டிக்⋆
    கனிகள் உதிர எறிந்து⋆
பின் தொடர்ந்தோடி ஓர் பாம்பைப்⋆
    பிடித்துக் கொண்டாட்டினாய் போலும்⋆
நின் திறத்தேன் அல்லேன் நம்பி!⋆
    நீ பிறந்த திரு நல் நாள்⋆
நன்று நீ நீராட வேண்டும்⋆
    நாரணா! ஓடாதே வாராய் (8)

பூணித் தொழுவினில் புக்குப்⋆ புழுதி அளைந்த பொன்மேனி⋆
    காணப் பெரிதும் உகப்பன்⋆ ஆகிலும் கண்டார் பழிப்பர்⋆
நாண் எத்தனையும் இலாதாய்!⋆ நப்பின்னை காணில் சிரிக்கும்⋆
    மாணிக்கமே! என் மணியே!⋆ மஞ்சனம் ஆட நீ வாராய் (9)

‡கார்மலி மேனி நிறத்துக்⋆ கண்ண பிரானை உகந்து⋆
    வார்மலி கொங்கை யசோதை⋆ மஞ்சனம் ஆட்டிய ஆற்றை⋆
பார் மலி தொல் புதுவைக் கோன்⋆ பட்டர் பிரான் சொன்ன பாடல்⋆
    சீர் மலி செந் தமிழ் வல்லார்⋆ தீவினை யாதும் இலரே (10)

‖ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திருமஞ்சனகாலத்தில் சேர்த்து அநுசந்திக்கும் பாசுரங்கள் ॥

முன் பொலாவிராவணன் தன்⋆ முது மதிள் இலங்கை வேவித்து⋆
அன்பினால் அனுமன் வந்து⋆ ஆங்கடி இணை பணிய நின்றார்க்கு⋆
என்பெலாம் உருகி உக்கிட்டு⋆ என்னுடை நெஞ்சம் என்னும்⋆
அன்பினால் ஞானநீர் கொண்டு⋆ ஆட்டுவன் அடியனேனே

மாய மான் மாயச் செற்று⋆ மருதிற நடந்து⋆ வையம்
தாயமா பரவை பொங்கத்⋆ தட வரை திரித்து வானோர்க்கு⋆
ஈயுமால் எம் பிரானார்க்கு⋆ என்னுடைச் சொற்கள் என்னும்⋆
தூயமா மாலை கொண்டு⋆ சூட்டுவன் தொண்டனேனே

சூட்டு நல் மாலைகள்⋆ தூயன வேந்தி⋆ விண்ணோர்கள் நன்னீர்
ஆட்டி⋆ அம் தூபம் தராநிற்கவே அங்கு⋆ ஓர் மாயையினால்
ஈட்டிய வெண்ணை தொடுவுண்ணப் போந்திமில் ஏற்று வன் கூன்⋆
கோட்டிடை ஆடினை கூத்து⋆ அடல் ஆயர் தம் கொம்பினுக்கே

பூசும் சாந்தென்நெஞ்சமே⋆ புனையும் கண்ணி எனதுடைய⋆
வாசகம் செய் மாலையே⋆ வான் பட்டாடையும் அஃதே⋆
தேசம் ஆன அணிகலனும்⋆ என் கை கூப்புச் செய்கையே⋆
ஈசன் ஞாலம் உண்டுமிழ்ந்த⋆ எந்தை ஏக மூர்திக்கே

காடுகள் ஊடு போய்க்⋆ கன்றுகள் மேய்த்து
மறியோடி⋆ கார்க்கோடல் பூச்
சூடி வருகின்ற தாமோதரா!⋆ கற்றுத்
தூளி காண் உன் உடம்பு⋆
பேடை மயிற் சாயல் பின்னை மணாளா!⋆
நீராட்டமைத்து வைத்தேன்⋆

www.prapatti.com

ஆடி அமுதுசெய் அப்பனும் உண்டிலன்⋆
    உன்னோடுடனே உண்பான்

திண்ணார் வெண் சங்குடையாய்!⋆ திருநாள் திரு-
    வோணம் இன்றேழு நாள்⋆ முன்
பண் நேர் மொழியாரைக் கூவி முளை அட்டிப்⋆
    பல்லாண்டு கூறுவித்தேன்⋆
கண்ணாலம் செய்யக்⋆ கறியும் கலத்த-
    தரிசியும் ஆக்கி வைத்தேன்⋆
கண்ணா! நீ நாளைத் தொட்டுக் கன்றின் பின் போகேல்⋆
    கோலம் செய்திங்கே இரு

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஆனிரை ॥

## பூச்சூட்டல்

‡ஆனிரை மேய்க்க நீ போதி⋆ அருமருந்தாவதறியாய்⋆
கானகம் எல்லாம் திரிந்து⋆ உன் கரிய திருமேனி வாட⋆
பானையில் பாலைப் பருகிப்⋆ பற்றாதார் எல்லாம் சிரிப்ப⋆
தேனில் இனிய பிரானே!⋆ செண்பகப் பூச் சூட்ட வாராய் (1)

கருவுடை மேகங்கள் கண்டால்⋆ உன்னைக் கண்டால் ஒக்கும் கண்கள்⋆
உருவுடையாய்! உலகேழும்⋆ உண்டாக வந்து பிறந்தாய்!⋆
திருவுடையாள் மணவாளா!⋆ திருவரங்கத்தே கிடந்தாய்!⋆
மருவி மணம் கமழ்கின்ற⋆ மல்லிகைப் பூச் சூட்ட வாராய் (2)

மச்சொடு மாளிகை ஏறி⋆ மாதர்கள் தம் இடம் புக்கு⋆
கச்சொடு பட்டைக் கிழித்துக்⋆ காம்பு துகில் அவை கீறி⋆
நிச்சலும் தீமைகள் செய்வாய்!⋆ நீள் திருவேங்கடத்தெந்தாய்!⋆
பச்சைத் தமனகத்தோடு⋆ பாதிரிப் பூச் சூட்ட வாராய் (3)

தெருவின்கண் நின்றிள ஆய்ச்சி மார்களைத்⋆ தீமை செய்யாதே⋆
மருவும் தமனகமும் சீர்⋆ மாலை மணம் கமழ்கின்ற⋆
புருவம் கருங்குழல் நெற்றி⋆ பொலிந்த முகிற் கன்று போலே⋆
உருவம் அழகிய நம்பீ!⋆ உகந்திவை சூட்ட நீ வாராய் (4)

புள்ளினை வாய் பிளந்திட்டாய்!⋆ பொரு கரியின் கொம்பொசித்தாய்!⋆
கள்ள அரக்கியை மூக்கொடு⋆ காவலனைத் தலை கொண்டாய்!⋆
அள்ளி நீ வெண்ணெய் விழுங்க⋆ அஞ்சாதடியேன் அடித்தேன்⋆
தெள்ளிய நீரில் எழுந்த⋆ செங்கழுநீர் சூட்ட வாராய் (5)

எருதுகளோடு பொருதி⋆ ஏதும் உலோபாய் காண் நம்பி!⋆
கருதிய தீமைகள் செய்து⋆ கஞ்சனைக் கால்கொடு பாய்ந்தாய்!⋆
தெருவின் கண் தீமைகள் செய்து⋆ சிக்கென மல்லர்களோடு⋆
பொருது வருகின்ற பொன்னே!⋆ புன்னைப் பூச் சூட்ட வாராய் (6)

www.prapatti.com

குடங்கள் எடுத்தேற விட்டுக்⋆
கூத்தாட வல்ல எம் கோவே!⋆
மடங்கொள் மதிமுகத்தாரை⋆
மால்செய்ய வல்ல என் மைந்தா!⋆
இடந்திட்டிரணியன் நெஞ்சை⋆
இரு பிளவாக முன் கீண்டாய்!⋆
குடந்தைக் கிடந்த எம் கோவே!⋆
குருக்கத்திப் பூச் சூட்ட வாராய் (7)

சீமாலிகன் அவனோடு⋆
தோழமை கொள்ளவும் வல்லாய்!⋆
சாமாறவனை நீ எண்ணிச்⋆
சக்கரத்தால் தலை கொண்டாய்!⋆
ஆமாறறியும் பிரானே!⋆
அணி அரங்கத்தே கிடந்தாய்!⋆
ஏமாற்றம் என்னைத் தவிர்த்தாய்!⋆
இருவாட்சிப் பூச் சூட்ட வாராய் (8)

அண்டத்தமரர்கள் சூழ⋆ அத்தாணியுள் அங்கிருந்தாய்!⋆
தொண்டர்கள் நெஞ்சில் உறைவாய்!⋆ தூமலராள் மணவாளா!⋆
உண்டிட்டுலகினை ஏழும்⋆ ஓர் ஆலிலையில் துயில் கொண்டாய்!⋆
கண்டுநான் உன்னை உகக்கக்⋆ கருமுகைப் பூச் சூட்ட வாராய் (9)

‡செண்பக மல்லிகையோடு⋆
செங்கழுநீர் இருவாட்சி⋆
எண் பகர் பூவும் கொணர்ந்தேன்⋆
இன்றிவை சூட்ட வா என்று⋆
மண் பகர் கொண்டானை⋆ ஆய்ச்சி
மகிழ்ந்துரை செய்த இம் மாலை⋆
பண் பகர் வில்லிபுத்தூர்க் கோன்⋆
பட்டர்பிரான் சொன்ன பத்தே (10)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ இந்திரனோடு ॥

காப்பிடல்

‡இந்திரனோடு பிரமன்⋆ ஈசன் இமையவர் எல்லாம்⋆
மந்திர மா மலர் கொண்டு⋆ மறைந்துவராய் வந்து நின்றார்⋆
சந்திரன் மாளிகை சேரும்⋆ சதுரர்கள் வெள்ளறை நின்றாய்!⋆
அந்தியம் போதிதுவாகும்⋆ அழகனே! காப்பிட வாராய் (1)

கன்றுகள் இல்லம் புகுந்து⋆
கதறுகின்ற பசுவெல்லாம்⋆
நின்றொழிந்தேன் உன்னைக் கூவி⋆
நேசமேல் ஒன்றும் இலாதாய்!⋆
மன்றில் நில்லேல் அந்திப் போது⋆
மதிள் திருவெள்ளறை நின்றாய்!⋆
நன்று கண்டாய் என்தன் சொல்லு⋆
நான் உன்னைக் காப்பிட வாராய் (2)

செப்போது மென் முலையார்கள்⋆
சிறுசோறும் இல்லும் சிதைத்திட்டு⋆
அப்போது நான் உரப்பப் போய்⋆
அடிசிலும் உண்டிலை ஆள்வாய்!⋆
முப்போதும் வானவர் ஏத்தும்⋆
முனிவர்கள் வெள்ளறை நின்றாய்!⋆
இப்போது நான் ஒன்றும் செய்யேன்⋆
எம்பிரான்! காப்பிட வாராய் (3)

கண்ணில் மணல் கொடு தூவிக்⋆ காலினால் பாய்ந்தனை என்றென்று⋆
எண் அரும் பிள்ளைகள் வந்திட்டு⋆ இவரால் முறைப்படுகின்றார்⋆
கண்ணனே! வெள்ளறை நின்றாய்!⋆ கண்டாரோடே தீமை செய்வாய்!⋆
வண்ணமே வேலையதொப்பாய்!⋆ வள்ளலே! காப்பிட வாராய் (4)

www.prapatti.com

பல்லாயிரவர் இவ்வூரில்
பிள்ளைகள்⋆ தீமைகள் செய்வார்⋆
எல்லாம் உன் மேல் அன்றிப் போகாது⋆
எம்பிரான்! நீ இங்கே வாராய்⋆
நல்லார்கள் வெள்ளறை நின்றாய்!⋆
ஞானச் சுடரே! உன் மேனி⋆
சொல் ஆர வாழ்த்தி நின்றேத்திச்⋆
சொப்படக் காப்பிட வாராய் (5)

கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல்⋆ கரு நிறச் செம் மயிர்ப் பேயை⋆
வஞ்சிப்பதற்கு விடுத்தான்⋆ என்பதோர் வார்த்தையும் உண்டு⋆
மஞ்சு தவழ் மணி மாட⋆ மதிள் திரு வெள்ளறை நின்றாய்!⋆
அஞ்சுவன் நீ அங்கு நிற்க⋆ அழகனே! காப்பிட வாராய் (6)

கள்ளச் சகடும் மருதும்⋆ கலக்கழிய உதை செய்த⋆
பிள்ளை அரசே!⋆ நீ பேயைப் பிடித்து முலை உண்ட பின்னை⋆
உள்ளவாறொன்றும் அறியேன்⋆ ஒளிவுடை வெள்ளறை நின்றாய்!⋆
பள்ளி கொள் போதிதுவாகும்⋆ பரமனே! காப்பிட வாராய் (7)

இன்பம் அதனை உயர்த்தாய்!⋆
இமை அவர்க்கென்றும் அரியாய்!⋆
கும்பக் களிறட்ட கோவே!⋆
கொடுங்கஞ்சன் நெஞ்சினில் கூற்றே!⋆
செம் பொன் மதிள் வெள்ளறையாய்!⋆
செல்வத்தினால் வளர் பிள்ளாய்!⋆
கம்பக் கபாலி காண் அங்குக்⋆
கடிதோடிக் காப்பிட வாராய் (8)

இருக்கொடு நீர் சங்கில் கொண்டிட்டு⋆
எழில் மறையோர் வந்து நின்றார்⋆
தருக்கேல் நம்பி! சந்தி நின்று⋆
தாய் சொல்லுக் கொள்ளாய் சில நாள்⋆
திருக்காப்பு நான் உன்னைச் சாத்தத்⋆
தேசுடை வெள்ளறை நின்றாய்!⋆

உருக் காட்டும் அந்தி விளக்கு⋆ இன்-
றொளி கொள்ள ஏற்றுகேன் வாராய் (9)

‡போதமர் செல்வக் கொழுந்து⋆ புணர் திரு வெள்ளறையானை⋆
மாதர்க்குயர்ந்த அசோதை⋆ மகன் தன்னைக் காப்பிட்ட மாற்றம்⋆
வேதப் பயன் கொள்ள வல்ல⋆ விட்டுசித்தன் சொன்ன மாலை⋆
பாதப் பயன் கொள்ள வல்ல⋆ பத்தர் உள்ளார் வினை போமே (10)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சென்னியோங்கு ॥

இதயத்துள் நிறைந்து எம்பிரான் மலர்ந்தமை

‡சென்னி ஓங்கு⋆ தண் திருவேங்-
கடம் உடையாய்!⋆ உலகு
தன்னை வாழ நின்ற நம்பீ!⋆
தாமோதரா! சதிரா!⋆
என்னையும் என் உடைமையையும்⋆ உன்
சக்கரப்பொறி ஒற்றிக்கொண்டு⋆
நின் அருளே புரிந்திருந்தேன்⋆
இனி என் திருக் குறிப்பே (1)

பறவை ஏறு பரம் புருடா!⋆
நீ என்னைக் கைக்கொண்ட பின்⋆
பிறவி என்னும் கடலும் வற்றிப்⋆
பெரும் பதம் ஆகின்றதால்⋆
இறவு செய்யும் பாவக் காடு⋆
தீக்கொளி இவேகின்றதால்⋆
அறிவை என்னும் அமுதவாறு⋆
தலைப்பற்றி வாய்க் கொண்டதே (2)

எம்மனா! என் குல தெய்வமே!⋆ என்னுடை நாயகனே!⋆
நின் உளேனாய்ப் பெற்ற நன்மை⋆ இவ்வுலகினில் ஆர் பெறுவார்⋆
நம்மன் போலே வீழ்த்தமுக்கும்⋆ நாட்டில் உள்ள பாவம் எல்லாம்⋆
சும்மெனாதே கைவிட்டோடித்⋆ தூறுகள் பாய்ந்தனவே (3)

கடல் கடைந்தமுதம் கொண்டு⋆ கலசத்தை நிறைத்தால் போல்⋆
உடல் உருகி வாய் திறந்து⋆ மடுத்துன்னை நிறைத்துக் கொண்டேன்⋆
கொடுமை செய்யும் கூற்றமும்⋆ என் கோல் ஆடி குறுகப் பெறா⋆
தட வரைத் தோள் சக்கரபாணீ!⋆ சார்ங்க விற் சேவகனே! (4)

www.prapatti.com

பொன்னைக் கொண்டுரைகல் மீதே⋆
நிறமெழ உரைத்தாற் போல்⋆
உன்னைக் கொண்டென் நாவகம்பால்⋆
மாற்றின்றி உரைத்துக் கொண்டேன்⋆
உன்னைக் கொண்டென்னுள் வைத்தேன்⋆
என்னையும் உன்னில் இட்டேன்⋆
என் அப்பா! என் இருடீகேசா!⋆
என் உயிர்க் காவலனே! (5)

உன்னுடைய விக்கிரமம்⋆ ஒன்றொழியாமல் எல்லாம்⋆
என்னுடைய நெஞ்சகம்பால்⋆ சுவர்வழி எழுதிக் கொண்டேன்⋆
மன் அடங்க மழு வலங்கைக் கொண்ட⋆ இராம நம்பீ!⋆
என்னிடை வந்தெம் பெருமான்!⋆ இனி எங்குப் போகின்றதே (6)

‡பருப் பதத்துக் கயல் பொறித்த⋆ பாண்டியர் குலபதி போல்⋆
திருப் பொலிந்த சேவடி⋆ என் சென்னியின் மேல் பொறித்தாய்⋆
மருப் பொசித்தாய்! மல் அடர்த்தாய்!⋆ என்றென்றுன் வாசகமே⋆
உருப் பொலிந்த நாவினேனை⋆ உனக்குரித்தாக்கினையே (7)

அனந்தன் பாலும் கருடன் பாலும்⋆ ஐது நொய்தாக வைத்து⋆ என்
மனம் தன் உள்ளே வந்து வைகி⋆ வாழச் செய்தாய் எம்பிரான்!⋆
நினைந்தென் உள்ளே நின்று நெக்குக்⋆ கண்கள் அசும்பொழுக⋆
நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன்⋆ நேமி நெடியவனே! (8)

பனிக் கடலில் பள்ளி கோளைப்⋆ பழகவிட்டு⋆ ஓடி வந்தென்
மனக் கடலில் வாழ வல்ல⋆ மாய மணாள நம்பீ!⋆
தனிக் கடலே! தனிச் சுடரே!⋆ தனி உலகே என்றென்று⋆
உனக் கிடமாய் இருக்க⋆ என்னை உனக்குரித்தாக்கினையே (9)

‡தட வரைவாய் மிளிர்ந்து மின்னும்⋆
தவள நெடுங்கொடிப் போல்⋆
சுடர் ஒளியாய் நெஞ்சின் உள்ளே⋆
தோன்றும் என் சோதி நம்பி!⋆
வட தடமும் வைகுந்தமும்⋆
மதிள் துவரா பதியும்⋆

இட வகைகள் இகழ்ந்திட்டு⋆ என்பால்
    இடவகை கொண்டனையே (10)

‡வேயர் தங்கள் குலத்துதித்த⋆
    விட்டுசித்தன் மனத்தே⋆
கோயில் கொண்ட கோவலனைக்⋆
    கொழுங்குளிர் முகில் வண்ணனை⋆
ஆயர் ஏற்றை அமரர் கோவை⋆
    அந்தணர் தம் அமுதத்தினை⋆
சாயை போலப் பாட வல்லார்⋆
    தாமும் அணுக்கர்களே (11)

‖ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com

www.prapatti.com

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அமலனாதி பிரான் ॥

## பெரிய நம்பிகள் அருளிச் செய்த தனியன்

ஆபாத$_3$சூட$_3$மநுபூ$_4$ய ஹரிம் ஶயாநம்
மத்$_4$யே கவேரது$_3$ஹிதுர்முதி$_3$தாந்தராத்மா ।
அத்$_3$ரஷ்ட்ருதாம் நயநயோர்விஷயாந்தராணாம்
யோ நிஶ்சிகாய மநவை முநிவாஹநம் தம் ॥

## திருமலை நம்பிகள் அருளிச் செய்த தனியன்

காட்டவே கண்ட பாத கமலம் நல்லாடையுந்தி⋆
தேட்டரும் உதரபந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய்⋆
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனி புகுந்து⋆
பாட்டினால் கண்டு வாழும் பாணர்தாள் பரவினோமே

‡அமலன் ஆதி பிரான்⋆ அடியார்க்கென்னை ஆட்படுத்த
விமலன்⋆ விண்ணவர் கோன்⋆ விரையார் பொழில் வேங்கடவன்⋆
நிமலன் நின்மலன் நீதி வானவன்⋆ நீள் மதிள் அரங்கத்தம்மான்⋆ திருக்-
கமல பாதம் வந்து⋆ என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே (1)

உவந்த உள்ளத்தனாய்⋆ உலகம் அளந்தண்டம் உற⋆
நிவந்த நீள் முடியன்⋆ அன்று நேர்ந்த நிசாசரரைக்⋆
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன்⋆ கடி-
யார் பொழில் அரங்கத்தம்மான்⋆ அரைச்-
சிவந்த ஆடையின் மேல்⋆ சென்றதாம் என் சிந்தனையே (2)

‡மந்தி பாய்⋆ வட வேங்கட மா மலை⋆ வானவர்கள்
சந்தி செய்ய நின்றான்⋆ அரங்கத்தரவின் அணையான்⋆
அந்தி போல் நிறத்தாடையும்⋆ அதன்
மேல் அயனைப் படைத்ததோர் எழில்⋆
உந்தி மேலதன்றோ⋆ அடியேன் உள்ளத்தின் உயிரே (3)

www.prapatti.com

சதுர மா மதிள் சூழ்⋆ இலங்கைக்கிறைவன் தலைபத்-
துதிர ஓட்டி⋆ ஓர் வெங்கணை உய்த்தவன்⋆ ஓத வண்ணன்⋆
மதுர மா வண்டு பாட⋆ மா மயில் ஆடரங்கத்தம்மான்⋆ திரு வயிற்-
றுதர பந்தம்⋆ என் உள்ளத்துள் நின்றுலாகின்றதே (4)

பாரம் ஆய⋆ பழவினை பற்றறுத்து⋆ என்னைத் தன்
வாரம் ஆக்கி வைத்தான்⋆ வைத்ததன்றி என்னுள் புகுந்தான்⋆
கோர மாதவம் செய்தனன் கொல் அறியேன்⋆ அரங்கத்தம்மான்⋆ திரு
ஆர மார்வதன்றோ⋆ அடியேனை ஆட்கொண்டதே (5)

துண்ட வெண்பிறையன்⋆ துயர் தீர்த்தவன்⋆ அஞ்சிறைய
வண்டுவாழ் பொழில் சூழ்⋆ அரங்க நகர் மேய அப்பன்⋆
அண்டர் அண்ட பகிரண்டத்து⋆ ஒரு மாநிலம் எழுமால் வரை⋆ முற்றும்
உண்ட கண்டம் கண்டீர்⋆ அடியேனை உய்யக்கொண்டதே (6)

கையின் ஆர்⋆ சுரி சங்கனல் ஆழியர்⋆ நீள்வரை போல்
மெய்யனார்⋆ துளப விரையார் கமழ் நீண் முடி எம்
ஐயனார்⋆ அணி அரங்கனார்⋆ அரவின் அணைமிசை மேய மாயனார்⋆
செய்ய வாய் ஐயோ!⋆ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே! (7)

பரியன் ஆகி வந்த⋆ அவுணன் உடல் கீண்ட⋆ அமரர்க்-
கரிய ஆதிப் பிரான்⋆ அரங்கத்தமலன் முகத்து⋆
கரிய ஆகிப் புடை பரந்து⋆ மிளிர்ந்து செவ்வரி ஓடி⋆ நீண்ட அப்-
பெரிய வாய கண்கள்⋆ என்னைப் பேதைமை செய்தனவே! (8)

‡ஆலமா மரத்தின் இலைமேல்⋆ ஒரு பாலகனாய்⋆
ஞாலம் ஏழும் உண்டான்⋆ அரங்கத்தரவின் அணையான்⋆
கோலமா மணி ஆரமும்⋆ முத்துத் தாமமும் முடிவில்லதோர் எழில்⋆
நீல மேனி ஐயோ!⋆ நிறை கொண்டதென் நெஞ்சினையே! (9)

‡கொண்டல் வண்ணனைக்⋆ கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன்⋆ என் உள்ளம் கவர்ந்தானை⋆
அண்டர் கோன் அணி அரங்கன்⋆ என் அமுதினைக்
கண்ட கண்கள்⋆ மற்றொன்றினைக் காணாவே (10)

‖ திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம் ‖



www.prapatti.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கண்ணினுண் சிறுத்தாம்பு ॥

அவிதி₃தவிஷயாந்தரஶ்ஶடா₂ரே:
உபநிஷதா₃முபகா₃நமாத்ரபோ₄க₃: ।
அபி ச கு₃ணவஶாத் ததே₃கஶேஷீ
மது₄ரகவிர்ஹ்ருத₃யே மமாவிரஸ்து ॥

வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ்செய்த⋆
மாறன் சடகோபன் வண் குருகூர்⋆ - ஏரெங்கள்
வாழ்வாம் என்றேத்தும்⋆ மதுரகவியார் எம்மை
ஆள்வார்⋆ அவரே அரண்

‡கண்ணி நுண்சிறுத் தாம்பினால்⋆ கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன்⋆ என்னப்பனில்⋆
நண்ணித் தென் குருகூர்⋆ நம்பி என்றக்கால்⋆
அண்ணிக்கும் அமுதூறும்⋆ என்நாவுக்கே (1)

நாவினால் நவிற்று⋆ இன்பம் எய்தினேன்⋆
மேவினேன்⋆ அவன் பொன்னடி மெய்ம்மையே⋆
தேவு மற்றறியேன்⋆ குருகூர் நம்பி⋆
பாவின் இன்னிசை⋆ பாடித் திரிவனே (2)

திரி தந்தாகிலும்⋆ தேவ பிரான் உடை⋆
கரிய கோலத்⋆ திருவுருக் காண்பன் நான்⋆
பெரிய வண் குருகூர்⋆ நகர் நம்பிக்காள்
உரியனாய்⋆ அடியேன்⋆ பெற்ற நன்மையே (3)

நன்மையால் மிக்க⋆ நான்மறை ஆளர்கள்⋆
புன்மை ஆகக்⋆ கருதுவர் ஆதலில்⋆
அன்னையாய் அத்தனாய்⋆ என்னை ஆண்டிடும்
தன்மையான்⋆ சடகோபன்⋆ என் நம்பியே (4)

www.prapatti.com

நம்பினேன்⋆ பிறர் நன் பொருள் தன்னையும்⋆
நம்பினேன்⋆ மட வாரையும் முன்னெலாம்⋆
செம் பொன் மாடத்⋆ திருக்குருகூர் நம்பிக்-
கன்பனாய்⋆ அடியேன்⋆ சதிர்த்தேன் இன்றே (5)

இன்று தொட்டும்⋆ எழுமையும் எம்பிரான்⋆
நின்று தன் புகழ்⋆ ஏத்த அருளினான்⋆
குன்ற மாடத்⋆ திருக் குருகூர் நம்பி⋆
என்றும் என்னை⋆ இகழ் விலன் காண்மினே (6)

கண்டு கொண்டென்னைக்⋆ காரி மாறப்பிரான்⋆
பண்டை வல்வினை⋆ பாற்றி அருளினான்⋆
எண்டிசையும்⋆ அறிய இயம்புகேன்⋆
ஒண் தமிழ்⋆ சடகோபன் அருளையே (7)

அருள் கொண்டாடும்⋆ அடியவர் இன்புற⋆
அருளினான்⋆ அவ்வருமறையின் பொருள்⋆
அருள் கொண்டு⋆ ஆயிரம் இன் தமிழ் பாடினான்⋆
அருள் கண்டீர்⋆ இவ்வுலகினில் மிக்கதே (8)

மிக்க வேதியர்⋆ வேதத்தின் உட்பொருள்⋆
நிற்கப் பாடி⋆ என் நெஞ்சுள் நிறுத்தினான்⋆
தக்க சீர்ச்⋆ சடகோபன் என் நம்பிக்கு⋆ ஆட்-
புக்க காதல்⋆ அடிமைப் பயனன்றே (9)

‡பயன் அன்றாகிலும்⋆ பாங்கல்லர் ஆகிலும்⋆
செயல் நன்றாகத்⋆ திருத்திப் பணி கொள்வான்⋆
குயில் நின்றார் பொழில் சூழ்⋆ குருகூர் நம்பி⋆
முயல்கின்றேன்⋆ உந் தன் மொய் கழற்கன்பையே (10)

‡அன்பன் தன்னை⋆ அடைந்தவர்கட்கெல்லாம்
அன்பன்⋆ தென் குருகூர்⋆ நகர் நம்பிக்கு⋆
அன்பனாய்⋆ மதுரகவி சொன்ன சொல்
நம்புவார் பதி⋆ வைகுந்தம் காண்மினே (11)

॥ மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம் ॥



www.prapatti.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திருவாய்மொழித் தனியன்கள் ॥

## நாதமுனிகள் அருளிச்செய்தது

ப4க்தாம்ருதம் விஶ்வஜநாநுமோத3நம்
ஸர்வார்த2த3ம் ஸ்ரீஶட2கோபவாங்மயம் ।
ஸஹஸ்ரஶாகோ2பநிஷத்ஸமாக3மம்
நமாம்யஹம் த்3ராவிட3வேத3ஸாக3ரம் ॥

## ஈச்வரமுனிகள் அருளிச்செய்தது

திருவழுதி நாடென்றும்⋆ தென் குருகூர் என்றும்⋆
மருவினிய வண் பொருநல் என்றும்⋆-அருமறைகள்
அந்தாதி செய்தான்⋆ அடியிணையே எப்பொழுதும்⋆
சிந்தியாய் நெஞ்சே! தெளிந்து

## சொட்டை நம்பிகள் அருளிச்செய்தது

மனத்தாலும் வாயாலும்⋆ வண் குருகூர் பேணும்⋆
இனத்தாரையல்லா திறைஞ்சேன்⋆-தனத்தாலும்
ஏதும் குறைவிலேன்⋆ எந்தை சடகோபன்⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## அனந்தாழ்வான் அருளிச்செய்தது

ஏய்ந்தபெருங்கீர்த்தி⋆ இராமானுசமுனி தன்⋆
வாய்ந்தமலர்ப் பாதம் வணங்குகின்றேன்⋆-ஆய்ந்த பெரும்
சீரார் சடகோபன்⋆ செந்தமிழ் வேதம் தரிக்கும்⋆
பேராத உள்ளம் பெற

www.prapatti.com

## பட்டர் அருளிச்செய்தவை

வான் திகழும் சோலை⋆ மதிளரங்கர் வண் புகழ்மேல்⋆
ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும்⋆-ஈன்ற
முதல்தாய் சடகோபன்⋆ மொய்ம்பால் வளர்த்த⋆
இதத்தாய் இராமானுசன்

மிக்க இறைநிலையும்⋆ மெய்யாம் உயிர்நிலையும்⋆
தக்க நெறியும்⋆ தடையாகித்-தொக்கியலும்⋆
ஊழ்வினையும் வாழ்வினையும்⋆ ஓதும் குருகையர் கோன்⋆
யாழினிசை வேதத் தியல்

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ உயர்வற ॥

## ஆத்ம உபதேசம்

‡உயர்வற உயர் நலம்⋆ உடையவன் யவன் அவன்⋆
மயர்வற மதி நலம்⋆ அருளினன் யவன் அவன்⋆
அயர்வறும் அமரர்கள்⋆ அதிபதி யவன் அவன்⋆
துயரறு சுடரடி⋆ தொழுதெழென் மனனே! (1)

மனன் அக மலம் அற⋆ மலர் மிசை எழுதரும்⋆
மனனுணர் வளவிலன்⋆ பொறியுணர்வவை இலன்⋆
இனன் உணர் முழு நலம்⋆ எதிர் நிகழ் கழிவினும்⋆
இனன் இலன் எனன் உயிர்⋆ மிகுநரை இலனே (2)

இலன் அதுவுடையன் இது⋆ என நினைவரியவன்⋆
நிலனிடை விசும்பிடை⋆ உருவினன் அருவினன்⋆
புலனொடு புலன் அலன்⋆ ஒழிவிலன் பரந்த⋆ அந்-
நலன் உடை ஒருவனை⋆ நணுகினம் நாமே (3)

நாம் அவன் இவன் உவன்⋆ அவள் இவள் உவள் எவள்⋆
தாம் அவர் இவர் உவர்⋆ அதுவிதுவுதுவெது⋆
வீம் அவை இவை உவை⋆ அவை நலம் தீங்கவை⋆
ஆம் அவை ஆயவை⋆ ஆய் நின்ற அவரே (4)

அவரவர் தமதமது⋆ அறிவறி வகைவகை⋆
அவரவர் இறையவர்⋆ என அடி அடைவர்கள்⋆
அவரவர் இறையவர்⋆ குறைவிலர் இறையவர்⋆
அவரவர் விதிவழி⋆ அடைய நின்றனரே (5)

நின்றனர் இருந்தனர்⋆ கிடந்தனர் திரிந்தனர்⋆
நின்றிலர் இருந்திலர்⋆ கிடந்திலர் திரிந்திலர்⋆
என்றும் ஒர் இயல்வினர்⋆ என நினைவரியவர்⋆
என்றும் ஒர் இயல்வொடு⋆ நின்றவெந்திடரே (6)

www.prapatti.com

திட விசும்பெரி வளி⋆ நீர் நிலம் இவை மிசை⋆
    படர் பொருள் முழுவதுமாய்⋆ அவை அவைதொறும்⋆
உடல் மிசை உயிர் எனக்⋆ கரந்தெங்கும் பரந்துளன்⋆
    சுடர் மிகு சுருதியுள்⋆ இவையுண்ட சுரனே (7)

சுரர் அறிவரு நிலை⋆ விண் முதல் முழுவதும்⋆
    வரன் முதலாய் அவை⋆ முழுதுண்ட பர பரன்⋆
புரம் ஒரு மூன்றெரித்து⋆ அமரர்க்கும் அறிவியந்து⋆
    அரன் அயன் என⋆ உலகழித்தமைத்துளனே (8)

உளன் எனில் உளன்⋆ அவன் உருவம் இவ்வுருவுகள்⋆
    உளன் அலன் எனில்⋆ அவன் அருவம் இவ்வருவுகள்⋆
உளன் என இலன் என⋆ இவை குணம் உடைமையில்⋆
    உளன் இரு தகைமையொடு⋆ ஒழிவிலன் பரந்தே (9)

பரந்த தண் பரவையுள்⋆ நீர்தொறும் பரந்துளன்⋆
    பரந்த அண்டம் இதென⋆ நில விசும் பொழிவற⋆
கரந்த சில் இடந்தொறும்⋆ இடம் திகழ் பொருள் தொறும்⋆
    கரந்தெங்கும் பரந்துளன்⋆ இவையுண்ட கரனே (10)

‡கர விசும்பெரி வளி⋆ நீர் நிலம் இவை மிசை⋆
    வரனவில் திறல் வலி⋆ அளி பொறையாய் நின்ற⋆
பரன் அடிமேல்⋆ குருகூர்ச் சடகோபன் சொல்⋆
    நிரனிறை ஆயிரத்து⋆ இவை பத்தும் வீடே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வீடுமின் ॥

உலகிற்கு உபதேசம்

‡வீடுமின் முற்றவும்⋆ வீடு செய்து⋆ உம்முயிர்
வீடுடை யானிடை⋆ வீடு செய்ம்மினே (1)

மின்னின் நிலையில⋆ மன்னுயிர் ஆக்கைகள்⋆
என்னும் இடத்து⋆ இறை உன்னுமின் நீரே (2)

நீர் நுமதென்றிவை⋆ வேர் முதல் மாய்த்து⋆ இறை
சேர்மின் உயிர்க்கு⋆ அதன் நேர் நிறை இல்லே (3)

இல்லதும் உள்ளதும்⋆ அல்லதவன் உரு⋆
எல்லையில் அந்நலம்⋆ புல்கு பற்றற்றே (4)

அற்றது பற்றெனில்⋆ உற்றது வீடுயிர்⋆
செற்றது மன்னுறில்⋆ அற்றிறை பற்றே (5)

பற்றிலன் ஈசனும்⋆ முற்றவும் நின்றனன்⋆
பற்றிலையாய்⋆ அவன் முற்றில் அடங்கே (6)

அடங்கெழில் சம்பத்து⋆ அடங்கக் கண்டு⋆ ஈசன்
அடங்கெழில் அஃதென்று⋆ அடங்குக உள்ளே (7)

உள்ளம் உரை செயல்⋆ உள்ள இம் மூன்றையும்⋆
உள்ளிக் கெடுத்து⋆ இறை உள்ளில் ஒடுங்கே (8)

ஒடுங்க அவன் கண்⋆ ஒடுங்கலும் எல்லாம்⋆
விடும் பின்னும் ஆக்கை⋆ விடும் பொழுதெண்ணே (9)

எண் பெருக்கந் நலத்து⋆ ஒண் பொருள் ஈறில⋆
வண் புகழ் நாரணன்⋆ திண் கழல் சேரே (10)

www.prapatti.com

‡சேர்த்தடத்⋆ தென் குருகூர்ச் சடகோபன் சொல்⋆
சீர்த் தொடை ஆயிரத்து⋆ ஓர்த்த இப்பத்தே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கிளரொளி ॥

திருமாலிருஞ்சோலை மலையை வணங்குக எனல்

‡கிளர் ஒளி இளமை⋆ கெடுவதன் முன்னம்⋆
வளர் ஒளி மாயோன்⋆ மருவிய கோயில்⋆
வளர் இளம் பொழில் சூழ்⋆ மாலிருஞ்சோலை⋆
தளர் விலராகில்⋆ சார்வது சதிரே (1)

சதிர் இள மடவார்⋆ தாழ்ச்சியை மதியாது⋆
அதிர் குரல் சங்கத்து⋆ அழகர் தம் கோயில்⋆
மதி தவழ் குடுமி⋆ மாலிருஞ்சோலை⋆
பதி அது ஏத்தி⋆ எழுவது பயனே (2)

பயன் அல்ல செய்து⋆ பயன் இல்லை நெஞ்சே!⋆
புயல் மழை வண்ணர்⋆ புரிந்துறை கோயில்⋆
மயல் மிகு பொழில் சூழ்⋆ மாலிருஞ்சோலை⋆
அயல்மலை அடைவது⋆ அது கருமமே (3)

கருமம வன் பாசம்⋆ கழித்துழன்றுய்யவே⋆
பெருமலை எடுத்தான்⋆ பீடுறை கோயில்⋆
வரு மழை தவழும்⋆ மாலிருஞ்சோலை⋆
திருமலை அதுவே⋆ அடைவது திறமே (4)

திறம் உடை வலத்தால்⋆ தீவினை பெருக்காது⋆
அறம் உயல் ஆழிப்⋆ படை அவன் கோயில்⋆
மறுவில் வண் சுனை சூழ்⋆ மாலிருஞ்சோலை⋆
புறமலை சாரப்⋆ போவது கிறியே (5)

கிறியென நினைமின்⋆ கீழ்மை செய்யாதே⋆
உறியமர் வெண்ணெய்⋆ உண்டவன் கோயில்⋆
மறியொடு பிணை சேர்⋆ மாலிருஞ்சோலை⋆
நெறி பட அதுவே⋆ நினைவது நலமே (6)

www.prapatti.com

நலம் என நினைமின்⋆ நரகழுந்தாதே⋆
நில முனம் இடந்தான்⋆ நீடுறை கோயில்⋆
மலம் அறுமதி சேர்⋆ மாலிருஞ்சோலை⋆
வல முறை எய்தி⋆ மருவுதல் வலமே (7)

வலம் செய்து வைகல்⋆ வலங்கழியாதே⋆
வலம் செய்யும்⋆ ஆய மாயவன் கோயில்⋆
வலம் செய்யும் வானோர்⋆ மாலிருஞ்சோலை⋆
வலம் செய்து நாளும்⋆ மருவுதல் வழக்கே (8)

வழக்கென நினைமின்⋆ வல்வினை மூழ்காது⋆
அழக்கொடி அட்டான்⋆ அமர் பெருங்கோயில்⋆
மழக் களிற்றினம் சேர்⋆ மாலிருஞ்சோலை⋆
தொழக் கருதுவதே⋆ துணிவது சூதே (9)

சூதென்று களவும்⋆ சூதும் செய்யாதே⋆
வேதமுன் விரித்தான்⋆ விரும்பிய கோயில்⋆
மாதுறு மயில் சேர்⋆ மாலிருஞ்சோலை⋆
போதவிழ் மலையே⋆ புகுவது பொருளே (10)

‡பொருள் என்றிவ்வுலகம்⋆ படைத்தவன் புகழ்மேல்⋆
மருளில் வண் குருகூர்⋆ வண் சடகோபன்⋆
தெருள் கொள்ளச் சொன்ன⋆ ஓர் ஆயிரத்துள் இப்பத்து⋆
அருளுடையவன் தாள்⋆ அணைவிக்கும் முடித்தே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஒழிவில் காலம் ॥

## திருவேங்கடத்தானுக்கு அடிமை செய்ய வேண்டும் எனல்

‡ஒழிவில் காலம் எல்லாம்⋆ உடனாய் மன்னி⋆
வழுவிலா அடிமை⋆ செய்ய வேண்டும் நாம்⋆
தெழி குரல் அருவித்⋆ திருவேங்கடத்து⋆
எழில் கொள் சோதி⋆ எந்தை தந்தை தந்தைக்கே (1)

எந்தை தந்தை தந்தை⋆ தந்தை தந்தைக்கும்
முந்தை⋆ வானவர்⋆ வானவர் கோனொடும்⋆
சிந்து பூ மகிழும்⋆ திருவேங்கடத்து⋆
அந்த மில் புகழ்க்⋆ கார் எழில் அண்ணலே (2)

அண்ணல் மாயன்⋆ அணி கொள் செந்தாமரைக்-
கண்ணன்⋆ செங்கனி வாய்க்⋆ கருமாணிக்கம்⋆
தெண்ணிறைச் சுனை நீர்த்⋆ திருவேங்கடத்து⋆
எண்ணில் தொல் புகழ்⋆ வானவர் ஈசனே (3)

ஈசன் வானவர்க்கு⋆ என்பன் என்றால்⋆ அது
தேசமோ⋆ திருவேங்கடத் தானுக்கு⋆
நீசனேன்⋆ நிறைவொன்றும் இலேன்⋆ என் கண்
பாசம் வைத்த⋆ பரஞ்சுடர்ச் சோதிக்கே (4)

சோதியாகி⋆ எல்லா உலகும் தொழும்⋆
ஆதி மூர்த்தி என்றால்⋆ அளவாகுமோ⋆
வேதியர்⋆ முழு வேதத்தமுதத்தை⋆
தீதில் சீர்த்⋆ திருவேங்கடத் தானையே (5)

வேங்கடங்கள்⋆ மெய்ம்மேல் வினை முற்றவும்⋆
தாங்கள் தங்கட்கு⋆ நல்லனவே செய்வார்⋆
வேங்கடத்துறை வார்க்கு⋆ நமவென்ன-
லாம் கடமை⋆ அதுசுமந்தார்கட்கே (6)

www.prapatti.com

சுமந்து மாமலர்⋆ நீர் சுடர் தூபம் கொண்டு⋆
அமர்ந்து வானவர்⋆ வானவர் கோனொடும்⋆
நமன்றெழும்⋆ திருவேங்கடம் நங்கட்கு⋆
சமன் கொள் வீடு தரும்⋆ தடங்குன்றமே (7)

‡குன்றம் ஏந்திக்⋆ குளிர் மழை காத்தவன்⋆
அன்று ஞாலம்⋆ அளந்த பிரான்⋆ பரன்
சென்று சேர்⋆ திருவேங்கட மா மலை⋆
ஒன்றுமே தொழ⋆ நம் வினை ஓயுமே (8)

ஓயும் மூப்புப்⋆ பிறப்பிறப்புப்பிணி⋆
வீயுமாறு செய்வான்⋆ திருவேங்கடத்-
தாயன்⋆ நாள் மலராம்⋆ அடித் தாமரை⋆
வாயுள்ளும் மனத்துள்ளும்⋆ வைப்பார்கட்கே (9)

வைத்த நாள் வரை⋆ எல்லை குறுகிச் சென்று⋆
எய்த்திளைப்பதன்⋆ முன்னம் அடைமினோ!⋆
பைத்த பாம்பணையான்⋆ திருவேங்கடம்⋆
மொய்த்த சோலை⋆ மொய் பூந் தடம் தாழ்வரே (10)

‡தாள் பரப்பி⋆ மண் தாவிய ஈசனை⋆
நீள் பொழில்⋆ குருகூர்ச் சடகோபன் சொல்⋆
கேழில் ஆயிரத்து⋆ இப்பத்தும் வல்லவர்⋆
வாழ்வர் வாழ்வெய்தி⋆ ஞாலம் புகழவே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஒன்றுந்தேவும் ॥

எம்பெருமான் எல்லாத் தேவர்கட்கும் மேம்பட்டவன் எனல்

‡ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும்⋆ யாதும் இல்லா
அன்று⋆ நான்முகன் தன்னொடு⋆ தேவர் உலகோடுயிர் படைத்தான்⋆
குன்றம் போல் மணி மாட நீடு⋆ திருக்குருகூர் அதனுள்⋆
நின்ற ஆதிப்பிரான் நிற்க⋆ மற்றைத்தெய்வம் நாடுதிரே (1)

நாடி நீர் வணங்கும் தெய்வமும்⋆ உம்மையும் முன் படைத்தான்⋆
வீடில் சீர்ப் புகழ் ஆதிப்பிரான்⋆ அவன் மேவி உறை கோயில்⋆
மாட மாளிகை சூழ்ந்தழகாய⋆ திருக்குருகூர் அதனைப்⋆
பாடியாடிப் பரவிச் சென்மின்கள்⋆ பல்லுலகீர்! பரந்தே (2)

பரந்த தெய்வமும் பல்லுலகும் படைத்து⋆
அன்றுடனே விழுங்கிக்⋆
கரந்துமிழ்ந்து கடந்திடந்தது⋆
கண்டும் தெளியகில்லீர்⋆
சிரங்களால் அமரர் வணங்கும்⋆
திருக்குருகூர் அதனுள்⋆
பரன் திறம் அன்றிப் பல்லுலகீர்!⋆ தெய்வம்
மற்றில்லை பேசுமினே (3)

பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும்⋆ பிறர்க்கும்
நாயகன் அவனே⋆ கபாலநன் மோக்கத்துக்⋆ கண்டு கொண்மின்⋆
தேச மா மதிள் சூழ்ந்தழகாய⋆ திருக்குருகூர் அதனுள்⋆
ஈசன் பால் ஓர் அவம் பறைதல்⋆ என்னாவதிலிங்கியர்க்கே (4)

‡இலிங்கத்திட்ட புராணத்தீரும்⋆
சமணரும் சாக்கியரும்⋆
வலிந்து வாது செய்வீர்களும்⋆ மற்று நும்
தெய்வமும் ஆகி நின்றான்⋆

www.prapatti.com

மலிந்து செந்நெல் கவரி வீசும்⋆
திருக்குருகூர் அதனுள்⋆
பொலிந்து நின்ற பிரான் கண்டீர்⋆ ஒன்றும்
பொய்யில்லை போற்றுமினே (5)

போற்றி மற்றோர் தெய்வம்⋆ பேணப்புறத்திட்டு⋆ உம்மையின்னே
தேற்றி வைத்தது எல்லீரும்⋆ வீடு பெற்றால் உலகில்லை என்றே⋆
சேற்றில் செந்நெல் கமலம் ஓங்கு⋆ திருக்குருகூர் அதனுள்⋆
ஆற்ற வல்லவன் மாயம் கண்டீர்⋆ அதறிந்தறிந்தோடுமினே (6)

ஓடியோடிப் பல பிறப்பும் பிறந்து⋆ மற்றோர் தெய்வம்
பாடியாடிப் பணிந்து⋆ பல்படிகால்⋆ வழியேறிக் கண்டீர்⋆
கூடி வானவர் ஏத்த நின்ற⋆ திருக்குருகூர் அதனுள்⋆
ஆடு புட்கொடி ஆதி மூர்த்திக்கு⋆ அடிமை புகுவதுவே (7)

புக்கடிமையினால் தன்னைக் கண்ட⋆ மார்க்கண்டேயன் அவனை⋆
நக்க பிரானும் அன்றுய்யக்கொண்டது⋆ நாராயணன் அருளே⋆
கொக்கலர் தடந்தாழை வேலித்⋆ திருக்குருகூர் அதனுள்⋆
மிக்க ஆதிப்பிரான் நிற்க⋆ மற்றைத்தெய்வம் விளம்புதிரே (8)

விளம்பும் ஆறு சமயமும்⋆
அவையாகியும் மற்றும் தன் பால்⋆
அளந்து காண்டற்கரியன் ஆகிய⋆
ஆதிப்பிரான் அமரும்⋆
வளங்கொள் தண் பணை சூழ்ந்தழகாய⋆
திருக்குருகூர் அதனை⋆
உளங்கொள் ஞானத்து வைம்மின்⋆ உம்மை
உய்யக்கொண்டு போகுறிலே (9)

உறுவதாவதெத்தேவும்⋆
எவ்வுலகங்களும் மற்றும் தன் பால்⋆
மறுவில் மூர்த்தியோடொத்து⋆ இத்தனையும்
நின்ற வண்ணம் நிற்கவே⋆



www.prapatti.com

செறுவில் செந்நெல் கரும்பொடோங்கு⋆
    திருக்குருகூர் அதனுள்⋆
குறிய மாண் உருவாகிய⋆
    நீள் குடக்கூத்தனுக்காட்செய்வதே (10)

‡ஆட்செய்தாழிப் பிரானைச் சேர்ந்தவன்⋆ வண் குருகூர் நகரான்⋆
    நாட்கமழ் மகிழ் மாலை மார்பினன்⋆ மாறன் சடகோபன்⋆
வேட்கையால் சொன்ன பாடல்⋆ ஆயிரத்துள் இப்பத்தும் வல்லார்⋆
    மீட்சி இன்றி வைகுந்த மாநகர்⋆ மற்றது கையதுவே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஆராவமுதே ॥

ஆராவமுதாழ்வார் பேறுகளைத் தாராமையால் ஆழ்வார் தீராத
ஆசையுடன் ஆற்றாமை பேசி அலமருதல்

‡ஆராவமுதே! அடியேன் உடலம்⋆ நின் பால் அன்பாயே⋆
நீராய் அலைந்து கரைய⋆ உருக்குகின்ற நெடுமாலே⋆
சீரார் செந்நெல் கவரி வீசும்⋆ செழு நீர்த் திருக்குடந்தை⋆
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்!⋆ கண்டேன் எம்மானே! (1)

எம்மானே! என் வெள்ளை மூர்த்தி!⋆ என்னை ஆள்வானே⋆
எம்மா உருவும் வேண்டும் ஆற்றால்⋆ ஆவாய் எழில் ஏறே⋆
செம்மா கமலம் செழு நீர் மிசைக்கண் மலரும்⋆ திருக்குடந்தை⋆
அம்மா மலர்க்கண் வளர்கின்றானே!⋆ என்நான் செய்கேனே! (2)

என் நான் செய்கேன்! யாரே களை கண்⋆ என்னை என் செய்கின்றாய்⋆
உன்னால் அல்லால் யாவராலும்⋆ ஒன்றும் குறை வேண்டேன்⋆
கன்னார் மதிள் சூழ் குடந்தைக் கிடந்தாய்!⋆ அடியேன் அருவாணாள்⋆
சென்னாள் எந்நாள் அந்நாள்⋆ உனதாள் பிடித்தே செலக்காணே (3)

செலக் காண்கிற்பார் காணும் அளவும்⋆ செல்லும் கீர்த்தியாய்⋆
உலப்பிலானே!⋆ எல்லா உலகும் உடைய ஒரு மூர்த்தி⋆
நலத்தால் மிக்கார் குடந்தைக் கிடந்தாய்!⋆ உன்னைக் காண்பான்நான்
அலப்பாய்⋆ ஆகாசத்தை நோக்கி⋆ அழுவன் தொழுவனே (4)

அழுவன் தொழுவன் ஆடிக் காண்பன்⋆ பாடி அலற்றுவன்⋆
தழுவல் வினையால் பக்கம் நோக்கி⋆ நாணிக் கவிழ்ந்திருப்பன்⋆
செழுவொண் பழனக் குடந்தைக் கிடந்தாய்!⋆ செந் தாமரைக் கண்ணா!⋆
தொழுவனேனை உனதாள்⋆ சேரும் வகையே சூழ் கண்டாய் (5)

சூழ் கண்டாய் என் தொல்லை வினையை அறுத்து⋆ உன் அடிசேரும்
ஊழ் கண்டிருந்தே⋆ தூராக்குழி தூர்த்து⋆ எனை நாள் அகன்றிருப்பன்⋆

www.prapatti.com

வாழ் தொல் புகழார் குடந்தைக் கிடந்தாய்!⋆ வானோர் கோமானே⋆
யாழின் இசையே! அமுதே!⋆ அறிவின் பயனே! அரியேறே! (6)

அரியேறே! என்னம் பொற்சுடரே!⋆ செங்கண் கரு முகிலே!⋆
எரியே! பவளக் குன்றே!⋆ நால் தோள் எந்தாய்! உனதருளே⋆
பிரியா அடிமை என்னைக் கொண்டாய்⋆ குடந்தைத் திருமாலே⋆
தரியேன் இனி உன் சரணம் தந்து⋆ என் சன்மம் களையாயே (7)

களைவாய் துன்பம் களையாதொழிவாய்⋆ களை கண் மற்றிலேன்⋆
வளை வாய் நேமிப் படையாய்!⋆ குடந்தைக் கிடந்த மா மாயா⋆
தளரா உடலம் எனதாவி⋆ சரிந்து போம் போது⋆
இளையாதுன தாள் ஒருங்கப் பிடித்துப்⋆ போத இசை நீயே (8)

இசைவித்தென்னை உன் தாள் இணைக்கீழ்⋆ இருத்தும் அம்மானே⋆
அசைவில் அமரர் தலைவர் தலைவா⋆ ஆதிப் பெரு மூர்த்தி⋆
திசை வில் வீசும் செழு மா மணிகள் சேரும்⋆ திருக்குடந்தை⋆
அசைவில் உலகம் பரவக் கிடந்தாய்!⋆ காண வாராயே (9)

‡வாராவருவாய் வருமென் மாயா!⋆ மாயா மூர்த்தியாய்⋆
ஆராவமுதாய் அடியேன் ஆவி⋆ அகமே தித்திப்பாய்⋆
தீரா வினைகள் தீர என்னை ஆண்டாய்!⋆ திருக்குடந்தை
ஊரா!⋆ உனக்காட் பட்டும்⋆ அடியேன் இன்னம் உழல்வேனோ (10)

‡உழலை என்பின் பேய்ச்சி முலையூடு⋆ அவளை உயிர் உண்டான்⋆
கழல்கள் அவையே சரணாகக் கொண்ட⋆ குருகூர்ச் சடகோபன்⋆
குழலின் மலியச் சொன்ன⋆ ஓர் ஆயிரத்துள் இப்பத்தும்⋆
மழலை தீர வல்லார்⋆ காமர் மானேய் நோக்கியர்க்கே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ உலகம் உண்ட ॥

திருவேங்கடமுடையானது திருவடிகளில் சரணம் புகுதல்

‡உலகம் உண்ட பெருவாயா!⋆ உலப்பில் கீர்த்தி அம்மானே⋆
நிலவும் சுடர் சூழ் ஒளி மூர்த்தி!⋆ நெடியாய்! அடியேன் ஆருயிரே⋆
திலதம் உலகுக்காய் நின்ற⋆ திருவேங்கடத்தெம் பெருமானே⋆
குல தொல் அடியேன் உன பாதம்⋆ கூடுமாறு கூறாயே (1)

கூறாய் நீறாய் நிலன் ஆகிக்⋆ கொடுவல் அசுரர் குலம் எல்லாம்⋆
சீறா எறியும் திரு நேமி வலவா!⋆ தெய்வக் கோமானே⋆
சேறார் சுனைத் தாமரை செந்தீ மலரும்⋆ திருவேங்கடத்தானே⋆
ஆறா அன்பில் அடியேன்⋆ உன் அடிசேர் வண்ணம் அருளாயே (2)

வண்ண மருள் கொள் அணி மேக
வண்ணா!⋆ மாய அம்மானே⋆
எண்ணம் புகுந்து தித்திக்கும்
அமுதே!⋆ இமையோர் அதிபதியே⋆
தெண்ணல் அருவி மணி பொன் முத்-
தலைக்கும்⋆ திருவேங்கடத்தானே⋆
அண்ணலே! உன் அடிசேர⋆
அடியேற்காவா என்னாயே! (3)

ஆவா என்னாதுலகத்தை அலைக்கும்⋆ அசுரர் வாணாள்மேல்⋆
தீவாய் வாளி மழை பொழிந்த சிலையா!⋆ திரு மா மகள் கேள்வா
தேவா⋆ சுரர்கள் முனிக் கணங்கள் விரும்பும்⋆ திருவேங்கடத்தானே⋆
பூவார் கழல்கள் அருவினையேன்⋆ பொருந்துமாறு புணராயே (4)

புணரா நின்ற மரம் ஏழ்⋆ அன்றெய்த ஒருவில் வலவாவோ⋆
புணரேய் நின்ற மரம் இரண்டின்⋆ நடுவே போன முதல்வாவோ⋆
திணரார் மேகம் எனக்களிறு சேரும்⋆ திருவேங்கடத்தானே⋆
திணரார் சார்ங்கத்துன பாதம்⋆ சேர்வதடியேன் எந்நாளே (5)

www.prapatti.com

எந்நாளே நாம் மண்ணளந்த⋆
இணைத் தாமரைகள் காண்பதற்கென்று⋆
எந்நாளும் நின்றிமையோர்கள்
ஏத்தி⋆ இறைஞ்சி இனம் இனமாய்⋆
மெய்ந்நா மனத்தால் வழி பாடு
செய்யும்⋆ திருவேங்கடத்தானே⋆
மெய்ந்நான் எய்தி எந்நாள்⋆ உன்
அடிக்கண் அடியேன் மேவுவதே (6)

அடியேன் மேவி அமர்கின்ற
அமுதே!⋆ இமையோர் அதிபதியே⋆
கொடியா அடு புள் உடையானே!⋆
கோலக் கனிவாய்ப் பெருமானே⋆
செடியார் வினைகள் தீர் மருந்தே!⋆
திருவேங்கடத்தெம் பெருமானே⋆
நொடியார் பொழுதும் உன பாதம்⋆
காண நோலாதாற்றேனே (7)

நோலாதாற்றேன் உன பாதம்⋆ காணவென்று நுண் உணர்வின்⋆
நீலார் கண்டத்தம்மானும்⋆ நிறை நான்முகனும் இந்திரனும்⋆
சேலேய் கண்ணார் பலர் சூழ விரும்பும்⋆ திருவேங்கடத்தானே⋆
மாலாய் மயக்கி அடியேன் பால்⋆ வந்தாய் போலே வாராயே (8)

வந்தாய் போலே வாராதாய்!⋆
வாராதாய் போல் வருவானே⋆
செந் தாமரைக் கண் செங்கனி வாய்⋆
நால் தோள் அமுதே! எனதுயிரே⋆
சிந்தா மணிகள் பகர் அல்லைப்-
பகல் செய்⋆ திருவேங்கடத்தானே⋆
அந்தோ! அடியேன் உன பாதம்⋆
அகலகில்லேன் இறையுமே (9)

‡அகலகில்லேன் இறையும் என்று⋆
அலர்மேல் மங்கை உறை மார்பா⋆

நிகரில் புகழாய்! உலகம் மூன்-
றுடையாய்!⋆ என்னை ஆள்வானே⋆
நிகரில் அமரர் முனிக் கணங்கள்
விரும்பும்⋆ திருவேங்கடத்தானே⋆
புகல் ஒன்றில்லா அடியேன்⋆ உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே (10)

‡அடிக் கீழ் அமர்ந்து புகுந்து⋆ அடியீர்!
வாழ்மின் என்றென்றருள் கொடுக்கும்⋆
படிக்கேழ் இல்லாப் பெருமானைப்⋆
பழனக் குருகூர்ச் சடகோபன்⋆
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத்⋆
திருவேங்கடத்துக்கிவை பத்தும்⋆
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து⋆
பெரிய வானுள் நிலாவுவரே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கங்குலும் பகலும் ॥

தலைவியின் நிலைகண்ட தாய் அரங்கரைப் பார்த்து வினாதல்

‡கங்குலும் பகலும் கண் துயில் அறியாள்⋆
    கண்ண நீர் கைகளால் இறைக்கும்⋆
சங்கு சக்கரங்கள் என்று கை கூப்பும்⋆
    தாமரைக் கண் என்றே தளரும்⋆
எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டென்னும்⋆
    இரு நிலம் கை துழாவிருக்கும்⋆
செங்கயல் பாய் நீர்த் திருவரங்கத்தாய்!⋆
    இவள் திறத்தென் செய்கின்றாயே (1)

என் செய்கின்றாய் என் தாமரைக் கண்ணா!
    என்னும்⋆ கண்ணீர் மல்க இருக்கும்⋆
என் செய்கேன் எறி நீர்த் திருவரங்கத்தாய்
    என்னும்⋆ வெவ்வுயிர்த்துயிர்த்துருகும்⋆
முன் செய்த வினையே! முகப்படாய் என்னும்⋆
    முகில்வண்ணா! தகுவதோ என்னும்⋆
முன் செய்திவ்வுலகம் உண்டுமிழ்ந்தளந்தாய்!⋆
    எங்கொலோ முடிகின்றதிவட்கே (2)

வட்கிலள் இறையும் மணிவண்ணா! என்னும்⋆
    வானமே நோக்கும் மையாக்கும்⋆
உட்குடை அசுரர் உயிர் எல்லாம் உண்ட⋆
    ஒருவனே! என்னும் உள்ளுருகும்⋆
கட்கிலீ! உன்னைக் காணுமாறருளாய்⋆
    காகுத்தா! கண்ணனே! என்னும்⋆
திட்கொடி மதிள் சூழ் திருவரங்கத்தாய்!⋆
    இவள்திறத்தென் செய்திட்டாயே (3)

www.prapatti.com

இட்ட கால் இட்ட கைகளாய் இருக்கும்⋆
    எழுந்துலாய் மயங்கும் கை கூப்பும்⋆
கட்டமே காதல் என்று மூர்ச்சிக்கும்⋆
    கடல்வண்ணா! கடியை காண் என்னும்⋆
வட்ட வாய் நேமி வலங்கையா! என்னும்⋆
    வந்திடாய் என்றென்றே மயங்கும்⋆
சிட்டனே! செழு நீர்த் திருவரங்கத்தாய்!⋆
    இவள்திறத்தென் சிந்தித்தாயே (4)

சிந்திக்கும் திசைக்கும் தேறும் கை கூப்பும்⋆
    திருவரங்கத்துள்ளாய்! என்னும்
வந்திக்கும்⋆ ஆங்கே மழைக்கண்ணீர் மல்க⋆
    வந்திடாய் என்றென்றே மயங்கும்⋆
அந்திப்போதவுணன் உடல் இடந்தானே!⋆
    அலை கடல் கடைந்த ஆரமுதே⋆
சந்தித்துன் சரணம் சார்வதே வலித்த⋆
    தையலை மையல் செய்தானே! (5)

மையல் செய்தென்னை மனம் கவர்ந்தானே!
    என்னும்⋆ மா மாயனே! என்னும்⋆
செய்ய வாய் மணியே! என்னும்⋆ தண் புனல் சூழ்
    திருவரங்கத்துள்ளாய்! என்னும்⋆
வெய்ய வாள் தண்டு சங்கு சக்கரம் வில்
    ஏந்தும்⋆ விண்ணோர் முதல்! என்னும்⋆
பை கொள் பாம்பணையாய்! இவள் திறத்தருளாய்⋆
    பாவியேன் செயற்பாலதுவே (6)

பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்!⋆
    பற்றிலார் பற்ற நின்றானே⋆
கால சக்கரத்தாய்! கடல் இடம் கொண்ட⋆
    கடல்வண்ணா! கண்ணனே! என்னும்⋆
சேல் கொள் தண் புனல் சூழ் திருவரங்கத்தாய்!
    என்னும்⋆ என் தீர்த்தனே! என்னும்⋆

கோல மா மழைக்கண் பனி மல்க இருக்கும்⋆
என்னுடைக் கோமளக் கொழுந்தே (7)

கொழுந்து வானவர்கட்கென்னும்⋆
குன்றேந்திக்கோ நிரை காத்தவன்! என்னும்⋆
அழும் தொழும் ஆவி அனல வெவ்வுயிர்க்கும்⋆
அஞ்சன வண்ணனே! என்னும்⋆
எழுந்து மேல் நோக்கி இமைப்பிலள் இருக்கும்⋆
எங்ஙனே நோக்குகேன் என்னும்⋆
செழுந் தடம் புனல் சூழ் திருவரங்கத்தாய்!⋆
என் செய்கேன் என் திருமகட்கே (8)

‡என் திருமகள் சேர் மார்பனே! என்னும்⋆
என்னுடை ஆவியே! என்னும்⋆
நின் திரு எயிற்றால் இடந்து நீ கொண்ட⋆
நிலமகள் கேள்வனே! என்னும்⋆
அன்றுருவேழும் தழுவி நீ கொண்ட⋆
ஆய்மகள் அன்பனே! என்னும்⋆
தென் திருவரங்கம் கோயில் கொண்டானே!⋆
தெளிகிலேன் முடிவிவள் தனக்கே (9)

முடிவிவள் தனக்கொன்றறிகிலேன் என்னும்⋆
மூவுலகாளியே! என்னும்⋆
கடி கமழ் கொன்றைச் சடையனே! என்னும்⋆
நான்முகக் கடவுளே! என்னும்⋆
வடிவுடை வானோர் தலைவனே! என்னும்⋆
வண் திருவரங்கனே! என்னும்⋆
அடியடையாதாள் போலிவள் அணுகி
அடைந்தனள்⋆ முகில்வண்ணன் அடியே (10)

‡முகில்வண்ணன் அடியை அடைந்தருள் சூடி
உய்ந்தவன்⋆ மொய் புனல் பொருநல்⋆
துகில் வண்ணத் தூ நீர்ச் சேர்ப்பன்⋆
வண் பொழில் சூழ் வண் குருகூர்ச் சடகோபன்⋆



www.prapatti.com

முகில்வண்ணன் அடிமேல் சொன்ன சொல் மாலை⋆
    ஆயிரத்திப் பத்தும் வல்லார்⋆
முகில் வண்ண வானத்திமையவர் சூழ
    இருப்பர்⋆ பேரின்ப வெள்ளத்தே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நெடுமாற்கடிமை ॥

பாகவதர்கட்குத் தாம் அடிமையாய் இருக்கும்
உண்மையை ஆழ்வார் பேசுதல்

‡நெடுமாற்கடிமை செய்வேன் போல்⋆
அவனைக் கருத வஞ்சித்து⋆
தடுமாற்றற்ற தீக்கதிகள்⋆
முற்றும் தவிர்ந்த சதிர் நினைந்தால்⋆
கொடு மா வினையேன் அவன் அடியார்
அடியே⋆ கூடும் இதுவல்லால்⋆
விடுமாறென்பதென் அந்தோ!⋆
வியன் மூவுலகு பெறினுமே (1)

வியன் மூவுலகு பெறினும் போய்த்⋆
தானே தானே ஆனாலும்⋆
புயல் மேகம் போல் திருமேனி
அம்மான்⋆ புனை பூங்கழல் அடிக்கீழ்⋆
சயமே அடிமை தலை நின்றார்⋆
திருத்தாள் வணங்கி⋆ இம்மையே
பயனே இன்பம் யான் பெற்றது⋆
உறுமோ பாவியேனுக்கே (2)

உறுமோ பாவியேனுக்கு⋆ இவ்வுலகம் மூன்றும் உடன் நிறைய⋆
சிறுமா மேனி நிமிர்த்த⋆ என் செந்தாமரைக் கண் திருக்குறளன்⋆
நறுமா விரை நாண் மலரடிக் கீழ்ப்⋆ புகுதல் அன்றி அவன் அடியார்⋆
சிறுமா மனிசராய் என்னை ஆண்டார்⋆ இங்கே திரியவே (3)

இங்கே திரிந்தேற்கிழுக்குற்றென்!⋆ இரு மா நிலம் முன் உண்டுமிழ்ந்த⋆
செங்கோலத்த பவள வாய்ச்⋆ செந்தாமரைக் கண் என்னம்மான்⋆
பொங்கேழ் புகழ்கள் வாயவாய்ப்⋆ புலன் கொள் வடிவென் மனத்ததாய்⋆
அங்கேய் மலர்கள் கையவாய்⋆ வழி பட்டோட அருளிலே (4)

www.prapatti.com

வழி பட்டோட அருள் பெற்று⋆ மாயன் கோல மலர் அடிக்கீழ்⋆
சுழி பட்டோடும் சுடர்ச்சோதி வெள்ளத்து⋆ இன்புற்றிருந்தாலும்⋆
இழி பட்டோடும் உடலினில் பிறந்து⋆ தன் சீர் யான் கற்று⋆
மொழி பட்டோடும் கவியமுதம்⋆ நுகர்ச்சி உறுமோ முழுதுமே (5)

நுகர்ச்சி உறுமோ மூவுலகின்⋆ வீடு பேறு தன் கேழில்⋆
புகர்ச் செம் முகத்த களிறட்ட⋆ பொன்னாழிக்கை என்னம்மான்⋆
நிகர்ச் செம் பங்கி எரிவிழிகள்⋆ நீண்ட அசுரர் உயிர் எல்லாம்⋆
தகர்த்துண்டுழலும் புட்பாகன்⋆ பெரிய தனி மாப் புகழே (6)

தனி மாப் புகழே எஞ்ஞான்றும்⋆ நிற்கும் படியாத் தான் தோன்றி⋆
முனி மாப் பிரம முதல்வித்தாய்⋆ உலகம் மூன்றும் முளைப்பித்த⋆
தனி மாத் தெய்வத் தளிர் அடிக்கீழ்ப்⋆ புகுதல் அன்றி அவன் அடியார்⋆
நனி மாக் கலவி இன்பமே⋆ நாளும் வாய்க்க நங்கட்கே (7)

நாளும் வாய்க்க நங்கட்கு⋆
நளிர் நீர்க் கடலைப் படைத்து⋆ தன்
தாளும் தோளும் முடிகளும்⋆
சமன் இலாத பல பரப்பி⋆
நீளும் படர் பூங்கற்பகக்காவும்⋆ நிறை பன்னாயிற்றின்⋆
கோளும் உடைய மணி மலை போல்⋆
கிடந்தான் தமர்கள் கூட்டமே (8)

தமர்கள் கூட்ட வல்வினையை⋆ நாசம் செய்யும் சதிர் மூர்த்தி⋆
அமர் கொள் ஆழி சங்கு வாள்⋆ வில் தண்டாதி பல் படையன்⋆
குமரன் கோல ஐங்கணை வேள் தாதை⋆ கோதில் அடியார் தம்⋆
தமர்கள் தமர்கள் தமர்களாம்⋆ சதிரே வாய்க்க தமியேற்கே (9)

வாய்க்க தமியேற்கு⋆ ஊழிதோறூழி ஊழி⋆
மா காயாம் பூக்கொள் மேனி நான்கு தோள்⋆
பொன்னாழிக் கை என்னம்மான்⋆
நீக்கம் இல்லா அடியார் தம்⋆
அடியார் அடியார் அடியார் எம்
கோக்கள்⋆ அவர்க்கே குடிகளாய்ச்
செல்லும்⋆ நல்ல கோட்பாடே (10)

‡நல்ல கோட்பாட்டுலகங்கள்⋆ மூன்றினுள்ளும் தான் நிறைந்த⋆
அல்லிக் கமலக் கண்ணனை⋆ அந்தண் குருகூர்ச் சடகோபன்⋆
சொல்லப் பட்ட ஆயிரத்துள்⋆ இவையும் பத்தும் வல்லார்கள்⋆
நல்ல பதத்தால் மனை வாழ்வர்⋆ கொண்ட பெண்டிர் மக்களே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மாலை நண்ணி ॥

திருக்கண்ணபுரம் சேருமாறு பிறர்க்கு உபதேசித்தல்

‡மாலை நண்ணித்⋆ தொழுதெழுமினோ வினை கெட⋆
காலை மாலை⋆ கமல மலர் இட்டு நீர்⋆
வேலை மோதும் மதிள் சூழ்⋆ திருக்கண்ண புரத்து⋆
ஆலின்மேலால் அமர்ந்தான்⋆ அடி இணைகளே (1)

கள்ளவிழும் மலர் இட்டு⋆ நீர் இறைஞ்சுமின்⋆
நள்ளி சேரும் வயல் சூழ்⋆ கிடங்கின் புடை⋆
வெள்ளியேய்ந்த மதிள் சூழ்⋆ திருக்கண்ண புரம்
உள்ளி⋆ நாளும் தொழுதெழுமினோ தொண்டரே! (2)

தொண்டர்! நுந்தம்⋆ துயர் போக நீர் ஏகமாய்⋆
விண்டு வாடா மலர் இட்டு⋆ நீர் இறைஞ்சுமின்⋆
வண்டு பாடும் பொழில் சூழ்⋆ திருக்கண்ண புரத்-
தண்ட வாணன்⋆ அமரர் பெருமானையே (3)

மானை நோக்கி⋆ மடப் பின்னை தன் கேள்வனை⋆
தேனை வாடா மலர் இட்டு⋆ நீர் இறைஞ்சுமின்⋆
வானை உந்தும் மதிள் சூழ்⋆ திருக்கண்ண புரம்⋆
தான் நயந்த பெருமான்⋆ சரணாகுமே (4)

சரணம் ஆகும்⋆ தன தாள் அடைந்தார்க்கெல்லாம்⋆
மரணம் ஆனால்⋆ வைகுந்தம் கொடுக்கும் பிரான்⋆
அரண் அமைந்த மதிள் சூழ்⋆ திருக்கண்ண புரத்-
தரணியாளன்⋆ தனதன்பர்க்கன்பாகுமே (5)

அன்பன் ஆகும்⋆ தன தாள் அடைந்தார்க்கெல்லாம்⋆
செம் பொனாகத்து⋆ அவுணன் உடல் கீண்டவன்⋆
நன் பொனேய்ந்த மதிள் சூழ்⋆ திருக்கண்ண புரத்-
தன்பன்⋆ நாளும் தன⋆ மெய்யர்க்கு மெய்யனே (6)

www.prapatti.com

மெய்யன் ஆகும்⋆ விரும்பித் தொழுவார்க்கெல்லாம்⋆
பொய்யன் ஆகும்⋆ புறமே தொழுவார்க்கெல்லாம்⋆
செய்யில் வாளையுகளும்⋆ திருக்கண்ண புரத்-
தையன்⋆ ஆகத்தணைப்பார்கட்கணியனே (7)

அணியன் ஆகும்⋆ தன தாள் அடைந்தார்க்கெல்லாம்⋆
பிணியும் சாரா⋆ பிறவி கெடுத்தாளும்⋆
மணி பொன் ஏய்ந்த மதிள் சூழ்⋆ திருக்கண்ண புரம்
பணிமின்⋆ நாளும் பரமேட்டி தன் பாதமே (8)

பாதம் நாளும்⋆ பணியத் தணியும் பிணி⋆
ஏதம் சாரா⋆ எனக்கேல் இனியென் குறை⋆
வேத நாவர் விரும்பும்⋆ திருக்கண்ண புரத்-
தாதியானை⋆ அடைந்தார்க்கு⋆ அல்லல் இல்லையே (9)

இல்லை அல்லல்⋆ எனக்கேல் இனியென் குறை⋆
அல்லி மாதர் அமரும்⋆ திருமார்பினன்⋆
கல்லில் ஏய்ந்த மதிள் சூழ்⋆ திருக்கண்ணபுரம்
சொல்ல⋆ நாளும் துயர்⋆ பாடு சாராவே (10)

‡பாடு சாரா⋆ வினை பற்றற வேண்டுவீர்⋆
மாடநீடு⋆ குருகூர்ச் சடகோபன்⋆ சொல்
பாடலான தமிழ்⋆ ஆயிரத்துள் இப்பத்தும்⋆
பாடியாடி⋆ பணிமின் அவன் தாள்களே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சூழ்விசும்பு ॥

திருநாடு செல்வாருக்கு நடைபெறும் உபசாரங்களைத் தாமே அநுபவித்துப் பேசுதல்

‡சூழ் விசும்பணி முகில்⋆ தூரியம் முழக்கின⋆
ஆழ் கடல் அலை திரைக்⋆ கை எடுத்தாடின⋆
ஏழ் பொழிலும்⋆ வளம் ஏந்திய என் அப்பன்⋆
வாழ் புகழ் நாரணன்⋆ தமரைக் கண்டுகந்தே (1)

நாரணன் தமரைக் கண்டுகந்து⋆ நல் நீர் முகில்⋆
பூரண பொற்குடம்⋆ பூரித்ததுயர் விண்ணில்⋆
நீர் அணி கடல்கள்⋆ நின்றார்த்தன⋆ நெடுவரைத்-
தோரணம் நிரைத்து⋆ எங்கும் தொழுதனர் உலகே (2)

தொழுதனர் உலகர்கள்⋆ தூபநல் மலர் மழை
பொழிவனர்⋆ பூமி அன்றளந்தவன்⋆ தமர் முன்னே⋆
எழுமின் என்றிருமருங்கு⋆ இசைத்தனர் முனிவர்கள்⋆
வழியிது வைகுந்தற்கு⋆ என்று வந்தெதிரே (3)

எதிர் எதிர் இமையவர்⋆ இருப்பிடம் வகுத்தனர்⋆
கதிர் அவர் அவர் அவர்⋆ கைந்நிரை காட்டினர்⋆
அதிர் குரல் முரசங்கள்⋆ அலை கடல் முழக்கொத்த⋆
மது விரி துழாய் முடி⋆ மாதவன் தமர்க்கே (4)

மாதவன் தமர் என்று⋆ வாசலில் வானவர்⋆
போதுமின் எமதிடம்⋆ புகுதுக என்றலும்⋆
கீதங்கள் பாடினர்⋆ கின்னரர் கெருடர்கள்⋆
வேதநல் வாயவர்⋆ வேள்வியுள் மடுத்தே (5)

வேள்வியுள் மடுத்தலும்⋆ விரை கமழ் நறும் புகை⋆
காளங்கள் வலம்புரி⋆ கலந்தெங்கும் இசைத்தனர்⋆

www.prapatti.com

ஆள்மின்கள் வானகம்⋆ ஆழியான் தமர் என்று⋆
வாளொண் கண் மடந்தையர்⋆ வாழ்த்தினர் மகிழ்ந்தே (6)

மடந்தையர் வாழ்த்தலும்⋆ மருதரும் வசுக்களும்⋆
தொடர்ந்தெங்கும்⋆ தோத்திரம் சொல்லினர்⋆ தொடுகடல்
கிடந்த எம் கேசவன்⋆ கிளர் ஒளி மணிமுடி⋆
குடந்தை எம் கோவலன்⋆ குடியடி யார்க்கே (7)

குடியடியார் இவர்⋆ கோவிந்தன் தனக்கென்று⋆
முடியுடை வானவர்⋆ முறை முறை எதிர் கொள்ள⋆
கொடியணி நெடு மதிள்⋆ கோபுரம் குறுகினர்⋆
வடி வுடை மாதவன்⋆ வைகுந்தம் புகவே (8)

வைகுந்தம் புகுதலும்⋆ வாசலில் வானவர்⋆
வைகுந்தன் தமர் எமர்⋆ எமதிடம் புகுதென்று⋆
வைகுந்தத்தமரரும்⋆ முனிவரும் வியந்தனர்⋆
வைகுந்தம் புகுவது⋆ மண்ணவர் விதியே (9)

விதிவகை புகுந்தனர் என்று⋆ நல் வேதியர்⋆
பதியினில் பாங்கினில்⋆ பாதங்கள் கழுவினர்⋆
நிதியும் நற்சுண்ணமும்⋆ நிறை குட விளக்கமும்⋆
மதி முக மடந்தையர்⋆ ஏந்தினர் வந்தே (10)

‡வந்தவர் எதிர் கொள்ள⋆ மா மணி மண்டபத்து⋆
அந்தமில் பேரின்பத்து⋆ அடியரோடிருந்தமை⋆
கொந்தலர் பொழில்⋆ குருகூர்ச் சடகோபன்⋆ சொல்
சந்தங்கள் ஆயிரத்து⋆ இவை வல்லார் முனிவரே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ முனியே ॥

ஆழ்வார் பரம பத்தியால் கனிந்து திருமாலைத் தாம்
அடைந்தமையை அருளிச் செய்தல்

‡முனியே! நான்முகனே!⋆
முக்கண்ணப்பா⋆ என் பொல்லாக்-
கனிவாய்த்⋆ தாமரைக் கண் கரு
மாணிக்கமே என் கள்வா!⋆
தனியேன் ஆருயிரே!⋆ என் தலை
மிசையாய் வந்திட்டு⋆
இனி நான் போகல் ஒட்டேன்⋆ ஒன்றும்
மாயம் செய்யேல் என்னையே (1)

மாயம் செய்யேல் என்னை⋆ உன் திரு
மார்வத்து மாலை நங்கை⋆
வாசம் செய் பூங்குழலாள்⋆
திருவாணை நின்னாணை கண்டாய்⋆
நேசம் செய்துன்னோடென்னை⋆ உயிர்
வேறின்றி ஒன்றாகவே⋆
கூசம் செய்யாது கொண்டாய்⋆ என்னைக்
கூவிக் கொள்ளாய் வந்தந்தோ! (2)

கூவிக் கொள்ளாய் வந்தந்தோ!⋆ என் பொல்லாக் கரு மாணிக்கமே!⋆
ஆவிக்கோர் பற்றுக்கொம்பு⋆ நின்னலால் அறிகின்றிலேன் யான்⋆
மேவித் தொழும் பிரமன் சிவன்⋆ இந்திரன் ஆதிக்கெல்லாம்⋆
நாவிக் கமல முதற்கிழங்கே!⋆ உம்பர் அந்ததுவே (3)

உம்பரந் தண் பாழேயோ!⋆ அதனுள் மிசை நீயேயோ⋆
அம்பர நற்சோதி!⋆ அதனுள் பிரமன் அரன் நீ⋆
உம்பரும் யாதவரும் படைத்த⋆ முனிவன் அவன் நீ⋆
எம்பரம் சாதிக்கலுற்று⋆ என்னைப் போர விட்டிட்டாயே (4)

போர விட்டிட்டென்னை⋆ நீ புறம்
போக்கலுற்றால்⋆ பின்னை யான்
ஆரைக் கொண்டெத்தை அந்தோ!⋆
எனதென்பதென் யான் என்பதென்⋆
தீர இரும்புண்ட நீர் அது
போல⋆ என்னாருயிரை
ஆரப் பருக⋆ எனக்காரா
அமுதானாயே (5)

எனக்காரா அமுதாய்⋆
எனதாவியை இன்னுயிரை⋆
மனக்காராமை மன்னி⋆ உண்டிட்டாய்
இனி உண்டொழியாய்⋆
புனக் காயா நிறத்த⋆
புண்டரீகக் கண் செங்கனிவாய்⋆
உனக்கேற்கும் கோல மலர்ப் பாவைக்-
கன்பா!⋆ என் அன்பேயோ! (6)

‡கோல மலர்ப் பாவைக்கன்பாகிய⋆ என் அன்பேயோ⋆
நீல வரை இரண்டு பிறை கவ்வி⋆ நிமிர்ந்ததொப்ப⋆
கோல வராகம் ஒன்றாய்⋆ நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்⋆
நீலக் கடல் கடைந்தாய்!⋆ உன்னைப் பெற்றினிப் போக்குவனோ (7)

பெற்றினிப் போக்குவனோ⋆ உன்னை என் தனிப் பேருயிரை⋆
உற்ற இருவினையாய்⋆ உயிராய்ப் பயனாய் அவையாய்⋆
முற்ற இம்மூவுலகும்⋆ பெரும் தூறாய்த் தூற்றில் புக்கு⋆
முற்றக் கரந்தொளித்தாய்!⋆ என் முதல் தனி வித்தேயோ! (8)

முதல் தனி வித்தேயோ!⋆ முழுமூவுலகாதிக்கெல்லாம்⋆
முதல் தனி உன்னை உன்னை⋆ எனை நாள் வந்து கூடுவன் நான்⋆
முதல் தனி அங்கும் இங்கும்⋆ முழுமுற்றுறு வாழ் பாழாய்⋆
முதல் தனி சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த⋆ முடிவிலீயோ! (9)

www.prapatti.com

‡சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த⋆ முடிவில் பெரும் பாழேயோ⋆
சூழ்ந்ததனில் பெரிய⋆ பர நன் மலர்ச் சோதீயோ⋆
சூழ்ந்ததனில் பெரிய⋆ சுடர் ஞான இன்பமேயோ!⋆
சூழ்ந்ததனில் பெரிய⋆ என் அவாவறச் சூழ்ந்தாயே! (10)

‡அவாவறச் சூழ்⋆ அரியை அயனை அரனை அலற்றி⋆
அவாவற்று வீடு பெற்ற⋆ குருகூர்ச் சடகோபன் சொன்ன⋆
அவாவில் அந்தாதிகளால்⋆ இவையாயிரமும்⋆ முடிந்த
அவாவில் அந்தாதி இப்பத்தறிந்தார்⋆ பிறந்தார் உயர்ந்தே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ இராமாநுச நூற்றந்தாதி ‖

வேதப்பிரான்பட்டர் அருளிச்செய்தவை

முன்னை வினை அகல மூங்கிற் குடி அமுதன்⋆
    பொன்னம் கழற்கமலப் போதிரண்டும்⋆ என்னுடைய
சென்னிக்கணி ஆகச் சேர்த்தினேன்⋆ தென்புலத்தார்க்-
    கென்னுக் கடவுடையேன் யான்

நயந்தரு பேரின்பம் எல்லாம் பழுதின்றி நண்ணினர்பால்⋆
    சயந்தரு கீர்த்தி இராமானுச முனி தாள் இணைமேல்⋆
உயர்ந்த குணத்துத் திருவரங்கத் தமுதோங்கும்⋆ அன்பால்
    இயம்பும் கலித்துறை அந்தாதி ஓத இசை நெஞ்சமே!

சோமாசியாண்டான் அருளியதென்பர்

சொல்லின் தொகை கொண்டுனதடிப் போதுக்குத் தொண்டு செய்யும்⋆
    நல்லன்பர் ஏத்தும் உன் நாமம் எல்லாம் என்தன் நாவினுள்ளே⋆
அல்லும் பகலும் அமரும் படி நல்கறுசமயம்
    வெல்லும் பரம⋆ இராமானுச! இதென் விண்ணப்பமே

வேதப்பிரான்பட்டர் அருளியதென்பர்

இனியென் குறை நமக்கெம்பெருமானார் திருநாமத்தால்⋆
    முனி தந்த நூற்றெட்டுச் சாவித் திரியென்னும் நுண்பொருளை⋆
கனி தந்த செஞ்சொல் கலித்துறை அந்தாதி பாடித் தந்தான்⋆
    புனிதன் திருவரங்கத்தமுதாகிய புண்ணியனே

www.prapatti.com

‡பூ மன்னு மாது பொருந்திய மார்பன்⋆ புகழ் மலிந்த
பா மன்னு மாறன்⋆ அடி பணிந்துய்ந்தவன்⋆ பல் கலையோர்
தாம் மன்ன வந்த இராமாநுசன்⋆ சரணாரவிந்தம்
நாம் மன்னி வாழ⋆ நெஞ்சே! சொல்லுவோம் அவன்
நாமங்களே (1)

‡கள்ளார் பொழில் தென் அரங்கன்⋆ கமலப் பதங்கள் நெஞ்சில்
கொள்ளா⋆ மனிசரை நீங்கி⋆ குறையற்பிரான் அடிக்கீழ்
விள்ளாத அன்பன் இராமாநுசன்⋆ மிக்க சீலம் அல்லால்
உள்ளாதென் நெஞ்சு⋆ ஒன்றறியேன் எனக்குற்ற பேரியல்வே (2)

பேரியல் நெஞ்சே!⋆ அடி பணிந்தேன் உன்னை⋆ பேய்ப் பிறவிப்
பூரியரோடுள்ள சுற்றம் புலத்திப்⋆ பொருவரும் சீர்
ஆரியன் செம்மை இராமாநுச முனிக்கன்பு செய்யும்⋆
சீரிய பேறுடையார்⋆ அடிக்கீழ் என்னைச் சேர்த்ததற்கே (3)

என்னைப் புவியில் ஒரு பொருள் ஆக்கி⋆ மருள் சுரந்த
முன்னைப் பழவினை⋆ வேர் அறுத்து⋆ ஊழி முதல்வனையே
பன்னப் பணித்த இராமாநுசன் பரன் பாதமும்⋆ என்
சென்னித் தரிக்க வைத்தான்⋆ எனக்கேதும் சிதைவில்லையே (4)

எனக்குற்ற செல்வம் இராமாநுசன் என்று⋆ இசையகில்லா
மனக் குற்ற மாந்தர்⋆ பழிக்கில் புகழ்⋆ அவன் மன்னிய சீர்
தனக்குற்ற அன்பர் அவன் திருநாமங்கள் சாற்றும் என்பா⋆
இனக் குற்றம் காணகில்லார்⋆ பத்தி ஏய்ந்த இயல்விதென்றே (5)

இயலும் பொருளும் இசையத் தொடுத்து⋆ ஈன் கவிகள் அன்பால்⋆
மயல் கொண்டு வாழ்த்தும் இராமாநுசனை⋆ மதி இன்மையால்
பயிலும் கவிகளில் பத்தி இல்லாத என் பாவி நெஞ்சால்⋆
முயல்கின்றனன்⋆ அவன் தன் பெருங்கீர்த்தி மொழிந்திடவே (6)

‡மொழியைக் கடக்கும் பெரும் புகழான்⋆ வஞ்ச முக்குறும்பாம்
குழியைக் கடக்கும்⋆ நம் கூரத்தாழ்வான் சரண் கூடிய பின்⋆
பழியைக் கடத்தும் இராமாநுசன் புகழ் பாடி⋆ அல்லா
வழியைக் கடத்தல்⋆ எனக்கினி யாதும் வருத்தம் அன்றே (7)

வருத்தும் புறவிருள் மாற்ற⋆ எம் பொய்கைப் பிரான் மறையின்
குருத்தின் பொருளையும்⋆ செந்தமிழ் தன்னையும் கூட்டி⋆ ஒன்றத்
திரித்தன்றெரித்த திருவிளக்கைத் தன் திருவுளத்தே⋆
இருத்தும் பரமன்⋆ இராமானுசன் எம் இறையவனே (8)

இறைவனைக் காணும் இதயத்திருள் கெட⋆ ஞானம் என்னும்
நிறை விளக்கேற்றிய⋆ பூதத் திருவடி தாள்கள்⋆ நெஞ்சத்-
துறைய வைத்தாளும் இராமானுசன் புகழ் ஓதும் நல்லோர்⋆
மறையினைக் காத்து⋆ இந்த மண்ணகத்தே மன்ன வைப்பவரே (9)

மன்னிய பேரிருள் மாண்டபின்⋆ கோவலுள் மா மலராள்
தன்னொடு மாயனைக்⋆ கண்டமை காட்டும்⋆ தமிழ்த் தலைவன்
பொன்னடி போற்றும் இராமானுசற்கன்பு பூண்டவர் தாள்⋆
சென்னியில் சூடும்⋆ திருவுடையார் என்றும் சீரியரே (10)

சீரிய நான்மறைச் செம் பொருள்⋆ செந்தமிழால் அளித்த⋆
பார் இயலும் புகழ் பாண் பெருமாள்⋆ சரணாம் பதுமத்
தார் இயல் சென்னி இராமானுசன் தன்னைச் சார்ந்தவர் தம்⋆
காரிய வண்மை⋆ என்னால் சொல்லொணாதிக்கடல் இடத்தே (11)

இடங்கொண்ட கீர்த்தி மழிசைக்கிறைவன்⋆ இணையடிப் போ-
தடங்கும்⋆ இதயத்திராமானுசன்⋆ அம் பொற் பாதம் என்றும்
கடங்கொண்டிறைஞ்சும் திரு முனிவர்க்கன்றிக் காதல் செய்யாத்⋆
திடங்கொண்ட ஞானியர்க்கே⋆ அடியேன் அன்பு செய்வதுவே (12)

செய்யும் பசுந் துளபத் தொழில் மாலையும்⋆ செந்தமிழில்
பெய்யும்⋆ மறைத் தமிழ் மாலையும்⋆ பேராத சீர் அரங்கத்-
தையன் கழற்கணியும் பரன் தாள் அன்றி⋆ ஆதரியா
மெய்யன்⋆ இராமானுசன் சரணே கதி வேறெனக்கே (13)

கதிக்குப் பதறி⋆ வெங்கானமும் கல்லும் கடலும் எல்லாம்⋆
கொதிக்கத் தவஞ்செய்யும் கொள்கை அற்றேன்⋆
கொல்லி காவலன் சொல்
பதிக்கும் கலைக் கவி பாடும் பெரியவர் பாதங்களே⋆
துதிக்கும் பரமன்⋆ இராமானுசன் என்னைச் சோர்விலனே (14)



www.prapatti.com

சோராத காதல் பெருஞ்சுழிப்பால்⋆ தொல்லை மாலை ஒன்றும்
பாராதவனைப்⋆ பல்லாண்டென்று காப்பிடும்⋆ பான்மையன் தாள்
பேராத உள்ளத்திராமானுசன் தன் பிறங்கிய சீர்⋆
சாரா மனிசரைச் சேரேன்⋆ எனக்கென்ன தாழ்வினியே (15)

‡தாழ்வொன்றில்லா மறை தாழ்ந்து⋆ தலமுழுதும் கலியே
ஆள்கின்ற நாள் வந்து⋆ அளித்தவன் காண்மின்⋆ அரங்கர் மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்தவள் தொல் அருளால்⋆
வாழ்கின்ற வள்ளல்⋆ இராமானுசன் என்னும் மா முனியே (16)

முனியார் துயரங்கள் முந்திலும்⋆ இன்பங்கள் மொய்த்திடினும்
கனியார் மனம்⋆ கண்ண மங்கை நின்றானை⋆ கலை பரவும்
தனியானையைத் தண் தமிழ் செய்த நீலன் தனக்கு⋆ உலகில்
இனியானை⋆ எங்கள் இராமானுசனை வந்தெய்தினரே (17)

எய்தற்கரிய மறைகளை⋆ ஆயிரம் இன் தமிழால்
செய்தற்குலகில் வரும்⋆ சடகோபனைச்⋆ சிந்தையுள்ளே
பெய்தற்கிசையும் பெரியவர் சீரை உயிர்கள் எல்லாம்⋆
உய்தற்குதவும்⋆ இராமானுசன் எம் உறு துணையே (18)

உறு பெருஞ்செல்வமும்⋆ தந்தையும் தாயும்⋆ உயர் குருவும்
வெறி தரு பூமகள் நாதனும்⋆ மாறன் விளங்கிய சீர்
நெறி தரும் செந்தமிழ் ஆரணமே என்றிந் நீள் நிலத்தோர்⋆
அறிதர நின்ற⋆ இராமானுசன் எனக்காரமுதே (19)

ஆரப் பொழில் தென் குருகைப் பிரான்⋆ அமுதத் திருவாய்
ஈரத் தமிழின்⋆ இசை உணர்ந்தோர்கட்கு⋆ இனியவர் தம்
சீரைப் பயின்றுய்யும் சீலங்கொள் நாதமுனியை⋆ நெஞ்சால்
வாரிப் பருகும்⋆ இராமானுசன் என்தன் மா நிதியே (20)

நிதியைப் பொழியும் முகில் என்று⋆ நீசர் தம் வாசல் பற்றித்⋆
துதி கற்றுலகில் துவள்கின்றிலேன் இனி⋆ தூய் நெறி சேர்
எதிகட்கிறைவன் யமுனைத் துறைவன் இணை அடியாம்⋆
கதி பெற்றுடைய⋆ இராமானுசன் என்னைக் காத்தனனே (21)

கார்த்திகை யானும் கரிமுகத் தானும்⋆ கனலும் முக்கண்
மூர்த்தியும்⋆ மோடியும் வெப்பும் முதுகிட்டு⋆ மூவுலகும்
பூத்தவனே! என்று போற்றிட வாணன் பிழை பொறுத்த⋆
தீர்த்தனை ஏத்தும்⋆ இராமானுசன் என்தன் சேம வைப்பே (22)

வைப்பாய வான் பொருள் என்று⋆ நல் அன்பர் மனத்தகத்தே⋆
எப்போதும் வைக்கும் இராமானுசனை⋆ இரு நிலத்தில்
ஒப்பார் இலாத உறு வினையேன் வஞ்ச நெஞ்சில் வைத்து⋆
முப்போதும் வாழ்த்துவன்⋆ என்னாம் இது அவன் மொய்
புகழ்க்கே (23)

மொய்த்த வெந் தீவினையால்⋆ பல்லுடல் தொறும் மூத்து⋆ அதனால்
எய்த்தொழிந்தேன்⋆ முனை நாள்கள் எல்லாம்⋆
இன்று கண்டுயர்ந்தேன்
பொய்த் தவம் போற்றும் புலைச் சமயங்கள் நிலத்தவியக்⋆
கைத்த மெய்ஞ்ஞானத்து⋆ இராமானுசன் என்னும் கார்
தன்னையே (24)

காரேய் கருணை இராமானுச⋆ இக்கடலிடத்தில்
ஆரே அறிபவர்⋆ நின் அருளின் தன்மை⋆ அல்லலுக்கு
நேரே உறைவிடம் நான் வந்து நீ என்னை உய்த்த பின்⋆ உன்
சீரே உயிர்க்குயிராய்⋆ அடியேற்கின்று தித்திக்குமே (25)

திக்குற்ற கீர்த்தி இராமானுசனை⋆ என் செய் வினையாம்
மெய்க் குற்றம் நீக்கி⋆ விளங்கிய மேகத்தை⋆ மேவு நல்லோர்
எக்குற்ற வாளர் எது பிறப்பேதியல்வாக நின்றோர்⋆
அக்குற்றம் அப்பிறப்பு⋆ அவ்வியல்வே நம்மை
ஆட்கொள்ளுமே (26)

கொள்ளக் குறைவற்றிலங்கி⋆ கொழுந்து விட்டோங்கிய உன்
வள்ளல் தனத்தினால்⋆ வல்வினையேன் மனம் நீ புகுந்தாய்⋆
வெள்ளைச் சுடர் விடும் உன் பெரு மேன்மைக்கிழுக்கிதென்று⋆
தள்ளுற்றிரங்கும்⋆ இராமானுச! என் தனி நெஞ்சமே! (27)


www.prapatti.com

நெஞ்சில் கறை கொண்ட⋆ கஞ்சனைக் காய்ந்த நிமலன்⋆ நங்கள்
பஞ்சித் திருவடிப்⋆ பின்னை தன் காதலன்⋆ பாதம் நண்ணா
வஞ்சர்க்கரிய இராமானுசன் புகழ் அன்றி என் வாய்⋆
கொஞ்சிப் பரவகில்லாது⋆ என்ன வாழ்வின்று கூடியதே! (28)

கூட்டும் விதி என்று கூடுங்கொலோ⋆ தென் குருகைப் பிரான்
பாட்டென்னும்⋆ வேதப் பசுந்தமிழ் தன்னைத்⋆ தன் பத்தி என்னும்
வீட்டின் கண் வைத்த இராமானுசன் புகழ் மெய் உணர்ந்தோர்⋆
ஈட்டங்கள் தன்னை⋆ என் நாட்டங்கள் கண்டின்பம் எய்திடவே (29)

இன்பம் தரு பெரு வீடு வந்தெய்திலென்⋆ எண் இறந்த
துன்பம் தரு⋆ நிரயம் பல சூழிலென்⋆ தொல் உலகில்
மன் பல் உயிர்கட்கிறைவன் மாயன் என மொழிந்த⋆
அன்பன் அனகன்⋆ இராமானுசன் என்னை ஆண்டனனே (30)

‡ஆண்டுகள் நாள் திங்களாய்⋆ நிகழ் காலம் எல்லாம் மனமே!
ஈண்டு⋆ பல் யோனிகள் தோறுழல்வோம்⋆
இன்றோர் எண் இன்றியே
காண் தகு தோள் அண்ணல் தென் அத்தி ஊரர் கழல் இணைக்கீழ்ப்⋆
பூண்ட அன்பாளன்⋆ இராமானுசனைப் பொருந்தினமே (31)

பொருந்திய தேசும் பொறையும் திறலும் புகழும்⋆ நல்ல
திருந்திய ஞானமும்⋆ செல்வமும் சேரும்⋆ செறு கலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையினால்⋆ வந்தெடுத்தளித்த
அருந்தவன்⋆ எங்கள் இராமானுசனை அடைபவர்க்கே (32)

அடையார் கமலத்தலர்மகள் கேள்வன்⋆ கை ஆழி என்னும்
படையோடு நாந்தகமும்⋆ படர் தண்டும்⋆ ஒண் சார்ங்க வில்லும்
புடை ஆர் புரி சங்கமும்⋆ இந்தப் பூதலம் காப்பதற்கென்-
றிடையே⋆ இராமானுச முனி ஆயின இந்நிலத்தே (33)

நிலத்தைச் செறுத்துண்ணும் நீசக் கலியை⋆ நினைப்பரிய
பலத்தைச் செறுத்தும்⋆ பிறங்கியதில்லை⋆ என் பெய் வினை தென்
புலத்தில் பொறித்தவப் புத்தகச் சும்மை பொறுக்கிய பின்⋆
நலத்தைப் பொறுத்தது⋆ இராமானுசன் தன் நயப் புகழே (34)



www.prapatti.com

நயவேன் ஒரு தெய்வம் நானிலத்தே⋆ சில மானிடத்தைப்
புயலே எனக்⋆ கவி போற்றி செய்யேன்⋆ பொன் அரங்கம் என்னில்
மயலே பெருகும் இராமானுசன்⋆ மன்னு மா மலர்த்தாள்
அயரேன்⋆ அருவினை என்னை எவ்வாறின்றடர்ப்பதுவே (35)

அடல் கொண்ட நேமியன்⋆ ஆருயிர் நாதன்⋆ அன்றாரணச் சொல்
கடல் கொண்ட ஒண் பொருள்⋆ கண்டளிப்ப⋆ பின்னும் காசினியோர்
இடரின்கண் வீழ்ந்திடத் தானும் அவ் ஒண் பொருள் கொண்டு⋆ அவர் பின்
படரும் குணன்⋆ எம் இராமானுசன் தன் படி இதுவே (36)

படி கொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் பத்தி வெள்ளம்⋆
குடி கொண்ட கோயில்⋆ இராமானுசன் குணம் கூறும்⋆ அன்பர்
கடி கொண்ட மா மலர்த் தாள் கலந்துள்ளம் கனியும் நல்லோர்⋆
அடி கண்டு கொண்டுகந்து⋆ என்னையும் ஆளவர்க்காக்கினரே (37)

ஆக்கி அடிமை நிலைப்பித்தனை⋆ என்னை இன்றவமே
போக்கிப்⋆ புறத்திட்டதென் பொருளா முன்பு⋆ புண்ணியர் தம்
வாக்கில் பிரியா இராமானுச! நின் அருளின் வண்ணம்⋆
நோக்கில் தெரிவரிதால்⋆ உரையாய் இந்த நுண் பொருளே (38)

பொருளும் புதல்வரும் பூமியும்⋆ பூங்குழலாரும் என்றே⋆
மருள் கொண்டிளைக்கும் நமக்கு நெஞ்சே!⋆ மற்றுளார் தரமோ
இருள் கொண்ட வெந் துயர் மாற்றித் தன் ஈறில் பெரும் புகழே⋆
தெருளும் தெருள் தந்து⋆ இராமானுசன் செய்யும் சேமங்களே (39)

சேம நல் வீடும் பொருளும் தருமமும்⋆ சீரிய நற்
காமமும்⋆ என்றிவை நான்கென்பர்⋆ நான்கினும் கண்ணனுக்கே
ஆமது காமம் அறம் பொருள் வீடிதற்கென்றுரைத்தான்⋆
வாமனன் சீலன்⋆ இராமானுசன் இந்த மண்மிசையே (40)

மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து⋆ எங்கள் மாதவனே
கண்ணுற நிற்கிலும்⋆ காணகில்லா⋆ உலகோர்கள் எல்லாம்
அண்ணல் இராமானுசன் வந்து தோன்றிய அப்பொழுதே⋆
நண்ணரு ஞானம் தலைக்கொண்டு⋆ நாரணற்காயினரே (41)

ஆயிழையார் கொங்கை தங்கும்⋆ அக் காதல் அளற்றழுந்தி
மாயும் என் ஆவியை⋆ வந்தெடுத்தான் இன்று⋆ மா மலராள்
நாயகன் எல்லா உயிர்கட்கும் நாதன்⋆ அரங்கன் என்னும்
தூயவன்⋆ தீதில் இராமானுசன் தொல் அருள் சுரந்தே (42)

சுரக்கும் திருவும் உணர்வும்⋆ சொலப்புகில் வாய் அமுதம்
பரக்கும்⋆ இரு வினை பற்றற ஓடும்⋆ படியில் உள்ளீர்
உரைக்கின்றனன் உமக்கு யான் அறம் சீறும் உறு கலியை⋆
துரக்கும் பெருமை⋆ இராமானுசன் என்று சொல்லுமினே (43)

சொல்லார் தமிழ் ஒரு மூன்றும்⋆ சுருதிகள் நான்கும் எல்லை
இல்லா⋆ அறநெறி யாவும் தெரிந்தவன்⋆ எண் அருஞ்சீர்
நல்லார் பரவும் இராமானுசன் திருநாமம் நம்பிக்⋆
கல்லார் அகல் இடத்தோர்⋆ எது பேறென்று காமிப்பரே (44)

பேறொன்று மற்றில்லை⋆ நின் சரண் அன்றி⋆ அப் பேறளித்தற்-
காறொன்றும் இல்லை⋆ மற்றச் சரண் அன்றி⋆ என்றிப் பொருளைத்
தேறும் அவர்க்கும் எனக்கும் உனைத் தந்த செம்மை சொல்லால்⋆
கூறும் பரமன்று⋆ இராமானுச மெய்ம்மை கூறிடிலே (45)

கூறும் சமயங்கள் ஆறும் குலைய⋆ குவலயத்தே
மாறன் பணித்த⋆ மறை உணர்ந்தோனை⋆ மதியிலியேன்
தேறும் படி என் மனம் புகுந்தானை திசை அனைத்தும்⋆
ஏறும் குணனை⋆ இராமானுசனை இறைஞ்சினமே (46)

இறைஞ்சப் படும் பரன் ஈசன் அரங்கன் என்று⋆ இவ்வுலகத்
தறம் செப்பும்⋆ அண்ணல் இராமானுசன்⋆ என் அருவினையின்
திறம் செற்றிரவும் பகலும் விடாதென்தன் சிந்தையுள்ளே⋆
நிறைந்தொப்பற இருந்தான்⋆ எனக்காரும் நிகர் இல்லையே! (47)

நிகர் இன்றி நின்ற என் நீசதைக்கு⋆ நின் அருளின்கண் அன்றிப்
புகல் ஒன்றும் இல்லை⋆ அருட்கும் அஃதே புகல்⋆ புன்மையிலோர்
பகரும் பெருமை இராமானுச! இனி நாம் பழுதே⋆
அகலும் பொருள் என்⋆ பயன் இருவோமுக்கும் ஆன பின்னே (48)

ஆனது செம்மை அறநெறி⋆ பொய்ம்மை அறு சமயம்
போனது பொன்றி⋆ இறந்தது வெங்கலி⋆ பூங்கமலத்
தேன் நதி பாய் வயல் தென் அரங்கன் கழல் சென்னி வைத்துத்⋆
தான் அதில் மன்னும்⋆ இராமானுசன் இத்தலத்துதித்தே (49)

உதிப்பன உத்தமர் சிந்தையுள்⋆ ஒன்னலர் நெஞ்சமஞ்சிக்
கொதித்திட⋆ மாறி நடப்பன⋆ கொள்ளை வன் குற்றம் எல்லாம்
பதித்த என் புன் கவிப் பாவினம் பூண்டன பாவு தொல் சீர்⋆
எதித் தலை நாதன்⋆ இராமானுசன் தன் இணை அடியே (50)

அடியைத் தொடர்ந்தெழும் ஐவர்கட்காய்⋆ அன்று பாரதப் போர்
முடியப்⋆ பரி நெடுந் தேர் விடுங்கோனை⋆ முழுதுணர்ந்த
அடியர்க்கமுதம் இராமானுசன் என்னை ஆள வந்து⋆ இப்-
படியில் பிறந்தது⋆ மற்றில்லை காரணம் பார்த்திடிலே (51)

பார்த்தான் அறு சமயங்கள் பதைப்ப⋆ இப்பார் முழுதும்
போர்த்தான் புகழ் கொண்டு⋆ புன்மையினேனிடைத் தான் புகுந்து⋆
தீர்த்தான் இரு வினை தீர்த்து⋆ அரங்கன் செய்ய தாள் இணையோ-
டார்த்தான்⋆ இவை எம் இராமானுசன் செய்யும் அற்புதமே (52)

அற்புதன் செம்மை இராமானுசன்⋆ என்னை ஆள வந்த
கற்பகம் கற்றவர்⋆ காமுறு சீலன்⋆ கருதரிய
பற்பல் உயிர்களும் பல் உலகு யாவும் பரனதென்னும்⋆
நற்பொருள் தன்னை⋆ இந் நானிலத்தே வந்து நாட்டினனே (53)

நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன⋆ நாரணனைக்
காட்டிய வேதம்⋆ களிப்புற்றது⋆ தென் குருகை வள்ளல்
வாட்டம் இலா வண் தமிழ் மறை வாழ்ந்தது⋆ மண்ணுலகில்
ஈட்டிய சீலத்து⋆ இராமானுசன் தன் இயல்வு கண்டே (54)

கண்டவர் சிந்தை கவரும்⋆ கடி பொழில் தென் அரங்கன்⋆
தொண்டர் குலாவும் இராமானுசனை⋆ தொகை இறந்த
பண் தரு வேதங்கள் பார்மேல் நிலவிடப் பார்த்தருளும்⋆
கொண்டலை மேவித் தொழும்⋆ குடியாம் எங்கள் கோக்குடியே (55)

கோக் குல மன்னரை மூவெழு கால்⋆ ஒரு கூர் மழுவால்
போக்கிய தேவனை⋆ போற்றும் புனிதன்⋆ புவனம் எங்கும்
ஆக்கிய கீர்த்தி இராமானுசனை அடைந்த பின்⋆ என்
வாக்குரையாது⋆ என் மனம் நினையாதினி மற்றொன்றையே (56)

மற்றொரு பேறு மதியாது⋆ அரங்கன் மலர் அடிக்காள்
உற்றவரே⋆ தனக்குற்றவராக் கொள்ளும் உத்தமனை⋆
நற்றவர் போற்றும் இராமானுசனை⋆ இந் நானிலத்தே
பெற்றனன்⋆ பெற்ற பின் மற்றறியேன் ஒரு பேதைமையே (57)

பேதையர் வேதப்⋆ பொருள் இதென்றுன்னி⋆ பிரமம் நன்றென்-
றோதி⋆ மற்றெல்லா உயிரும் அஃதென்று⋆ உயிர்கள் மெய்விட்-
டாதிப் பரனோடொன்றாம் என்று சொல்லும் அவ்வல்லல் எல்லாம்⋆
வாதில் வென்றான்⋆ எம் இராமானுசன் மெய்ம் மதிக்கடலே (58)

கடல் அளவாய திசை எட்டினுள்ளும்⋆ கலி இருளே
மிடைதரு காலத்திராமானுசன்⋆ மிக்க நான்மறையின்
சுடர் ஒளியால் அவ்விருளைத் துரந்திலனேல்⋆ உயிரை
உடையவன்⋆ நாரணன் என்றறிவார் இல்லை உற்றுணர்ந்தே (59)

உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகம் தொறும்⋆ திருவாய் மொழியின்
மணம் தரும்⋆ இன்னிசை மன்னும் இடந்தொறும்⋆ மாமலராள்
புணர்ந்த பொன் மார்பன் பொருந்தும் பதிதொறும் புக்குநிற்கும்⋆
குணம் திகழ் கொண்டல்⋆ இராமானுசன் எங்குலக் கொழுந்தே (60)

கொழுந்து விட்டோடிப் படரும்⋆ வெங்கோள் வினையால்⋆ நிரயத்-
தழுந்தியிட்டேனை⋆ வந்தாட் கொண்ட பின்னும்⋆ அரு முனிவர்
தொழும் தவத்தோன் எம் இராமானுசன்⋆ தொல் புகழ் சுடர் மிக்-
கெழுந்தது⋆ அத்தால் நல் அதிசயம் கண்ட திருநிலமே (61)

இருந்தேன் இரு வினைப் பாசம் கழற்றி⋆ இன்று யான் இறையும்
வருந்தேன்⋆ இனி எம் இராமானுசன்⋆ மன்னு மாமலர்த் தாள்
பொருந்தா நிலை உடைப் புன்மையினோர்க்கொன்றும் நன்மை
செய்யாப்⋆
பெருந் தேவரைப் பரவும்⋆ பெரியோர் தம் கழல் பிடித்தே (62)

பிடியைத் தொடரும் களிறென்ன⋆ யான் உன் பிறங்கிய சீர்⋆
அடியைத் தொடரும் படி நல்க வேண்டும்⋆ அறு சமயச்-
செடியைத் தொடரும் மருள் செறிந்தோர் சிதைந்தோட வந்து⋆ இப்-
படியைத் தொடரும்⋆ இராமானுச! மிக்க பண்டிதனே! (63)

பண் தரு மாறன் பசுந்தமிழ்⋆ ஆனந்தம் பாய் மதமாய்
விண்டிட⋆ எங்கள் இராமானுச முனி வேழம்⋆ மெய்ம்மை
கொண்ட நல் வேதக் கொழுந்தண்டம் ஏந்திக் குவலயத்தே⋆
மண்டி வந்தேன்றது⋆ வாதியர்காள்! உங்கள் வாழ்வற்றதே (64)

வாழ்வற்றது தொல்லை வாதியர்க்கு⋆ என்றும் மறையவர் தம்
தாழ்வற்றது⋆ தவம் தாரணி பெற்றது⋆ தத்துவ நூல்
கூழ் அற்றது குற்றம் எல்லாம் பதித்த குணத்தினர்க்கு⋆ அந்
நாழ் அற்றது⋆ நம் இராமானுசன் தந்த ஞானத்திலே (65)

ஞானம் கனிந்த நலங்கொண்டு⋆ நாள் தொறும் நைபவர்க்கு⋆
வானம் கொடுப்பது மாதவன்⋆ வல்வினையேன் மனத்தில்
ஈனம் கடிந்த இராமானுசன் தன்னை எய்தினர்க்கு⋆ அத்-
தானம் கொடுப்பது⋆ தன் தகவென்னும் சரண் கொடுத்தே (66)

சரணம் அடைந்த தருமனுக்கா⋆ பண்டு நூற்றுவரை⋆
மரணம் அடைவித்த மாயவன்⋆ தன்னை வணங்க வைத்த
கரணம் இவை உமக்கன்றென்றி இராமானுசன்⋆ உயிர்கட்
கரண் அங்கமைத்திலனேல்⋆ அரணார் மற்றிவ்வாருயிர்க்கே (67)

ஆர் எனக்கின்று நிகர் சொல்லில்⋆ மாயன் அன்றைவர் தெய்வத்
தேரினில்⋆ செப்பிய கீதையின்⋆ செம்மைப் பொருள் தெரியப்
பாரினில் சொன்ன இராமானுசனை பணியும் நல்லோர்⋆
சீரினில் சென்று பணிந்தது⋆ என் ஆவியும் சிந்தையுமே (68)

சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து⋆ முன்னாள்
அந்தம் உற்றாழ்ந்தது கண்டு⋆ அவை என் தனக்கன்றருளால்
தந்த அரங்கனும் தன் சரண் தந்திலன்⋆ தான் அது தந்து⋆
எந்தை இராமானுசன் வந்தெடுத்தனன் இன்றென்னையே (69)

என்னையும் பார்த்தென் இயல்வையும் பார்த்து⋆ எண்ணில் பல் குணத்த
உன்னையும் பார்க்கில்⋆ அருள் செய்வதே நலம்⋆ அன்றி என்பால்
பின்னையும் பார்க்கில் நலம் உளதே உன் பெருங்கருணை⋆
தன்னை என் பார்ப்பர்⋆ இராமானுச! உன்னைச் சார்ந்தவரே (70)

சார்ந்ததென் சிந்தை உன் தாள் இணைக்கீழ்⋆ அன்பு தான் மிகவும்
கூர்ந்தது⋆ அத் தாமரைத் தாள்களுக்கு⋆ உன்தன் குணங்களுக்கே
தீர்ந்ததென் செய்கை முன் செய்வினை நீ⋆ செய்வினை அதனால்
பேர்ந்தது⋆ வண்மை இராமானுச! எம் பெருந் தகையே (71)

கைத்தனன் தீய சமயக் கலகரை⋆ காசினிக்கே
உய்த்தனன்⋆ தூய மறைநெறி தன்னை⋆ என்றுன்னி உள்ளம்
நெய்த்த அன்போடிருந்தேத்தும் நிறை புகழோருடனே⋆
வைத்தனன் என்னை⋆ இராமானுசன் மிக்க வண்மை செய்தே (72)

வண்மையினாலும் தன் மா தகவாலும்⋆ மதி புரையும்
தண்மையினாலும்⋆ இத் தாரணியோர்கட்கு⋆ தான் சரணாய்
உண்மை நல் ஞானம் உரைத்த இராமானுசனை உன்னும்⋆
திண்மை அல்லால் எனக்கில்லை⋆ மற்றோர் நிலை
தேர்ந்திடிலே (73)

தேரார் மறையின் திறம் என்று⋆ மாயவன் தீயவரைக்⋆
கூராழி கொண்டு குறைப்பது⋆ கொண்டல் அனைய வண்மை
ஏரார் குணத்தெம் இராமானுசன்⋆ அவ்வெழில் மறையில்
சேராதவரைச் சிதைப்பது⋆ அப்போதொரு சிந்தை செய்தே (74)

செய்த்தலைச் சங்கம் செழு முத்தம் ஈனும்⋆ திருவரங்கர்
கைத்தலத்தாழியும்⋆ சங்கமும் ஏந்தி⋆ நங்கண் முகப்பே
மொய்த்தலைத்துன்னை விடேன் என்றிருக்கிலும் நின் புகழே⋆
மொய்த்தலைக்கும் வந்து⋆ இராமானுச! என்னை முற்றும்
நின்றே (75)

‡நின்ற வண் கீர்த்தியும் நீள் புனலும்⋆ நிறை வேங்கடப் பொற்
குன்றமும்⋆ வைகுந்த நாடும் குலவிய பாற்கடலும்⋆



www.prapatti.com

உன்தனக்கெத்தனை இன்பம் தரும் உன் இணைமலர்த் தாள்⋆
என் தனக்கும் அது⋆ இராமானுச! இவை ஈந்தருளே (76)

ஈந்தனன் ஈயாத இன்னருள்⋆ எண்ணில் மறைக் குறும்பைப்
பாய்ந்தனன்⋆ அம்மறைப் பல் பொருளால்⋆ இப் படி அனைத்தும்
ஏய்ந்தனன் கீர்த்தியினால் என் வினைகளை⋆ வேர் பறியக்
காய்ந்தனன்⋆ வண்மை இராமானுசற்கென் கருத்தினியே (77)

கருத்தில் புகுந்துள்ளில்⋆ கள்ளம் கழற்றி⋆ கருதரிய
வருத்தத்தினால் மிக வஞ்சித்து⋆ நீ இந்த மண்ணகத்தே
திருத்தித் திருமகள் கேள்வனுக்காக்கிய பின்⋆ என்னெஞ்சில்
பொருத்தப் படாது⋆ எம் இராமானுச! மற்றோர் பொய்ப்
பொருளே (78)

பொய்யைச் சுரக்கும் பொருளைத் துறந்து⋆ இந்தப் பூதலத்தே
மெய்யைப் புரக்கும்⋆ இராமானுசன் நிற்க⋆ வேறு நம்மை
உய்யக் கொள்ள வல்ல தெய்வம் இங்கு யாதென்றுலர்ந்தவமே⋆
ஐயப்படா நிற்பர்⋆ வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே (79)

நல்லார் பரவும் இராமானுசன்⋆ திருநாமம் நம்ப
வல்லார் திறத்தை⋆ மறவாதவர்கள் எவர்⋆ அவர்க்கே
எல்லா இடத்திலும் என்றும் எப்போதிலும் எத் தொழும்பும்⋆
சொல்லால் மனத்தால்⋆ கருமத்தினால் செய்வன்
சோர்வின்றியே (80)

சோர்வின்றி உன்தன் துணை அடிக்கீழ்⋆ தொண்டு பட்டவர்பால்⋆
சார்வின்றி நின்ற எனக்கு⋆ அரங்கன் செய்ய தாள் இணைகள்
பேர்வின்றி இன்று பெறுத்தும் இராமானுச!⋆ இனி உன்
சீர் ஒன்றிய கருணைக்கு⋆ இல்லை மாறு தெரிவுறிலே (81)

தெரிவுற்ற ஞாலம் செறியப் பெறாது⋆ வெந் தீவினையால்
உருவற்ற ஞானத்து⋆ உழல்கின்ற என்னை⋆ ஒரு பொழுதில்
பொருவற்ற கேள்வியன் ஆக்கி நின்றான் என்ன புண்ணியனோ!⋆
தெரிவுற்ற கீர்த்தி⋆ இராமானுசன் என்னும் சீர் முகிலே (82)

சீர் கொண்டு பேரறம் செய்து⋆ நல் வீடு செறிதும் என்னும்⋆
பார் கொண்ட மேன்மையர் கூட்டன் அல்லேன்⋆ உன் பத யுகமாம்
ஏர் கொண்ட வீட்டை எளிதினில் எய்துவன்⋆ உன்னுடைய
கார் கொண்ட வண்மை⋆ இராமானுச! இது கண்டு கொள்ளே (83)

கண்டு கொண்டேன்⋆ எம் இராமானுசன் தன்னை⋆ காண்டலுமே
தொண்டு கொண்டேன்⋆ அவன் தொண்டர் பொற்றாளில்⋆
என் தொல்லை வெந்நோய்
விண்டு கொண்டேன் அவன் சீர் வெள்ள வாரியை வாய்மடுத்து⋆ இன்-
றுண்டு கொண்டேன்⋆ இன்னம் உற்றன ஓதில் உலப்பில்லையே (84)

ஓதிய வேதத்தின் உட்பொருளாய்⋆ அதன் உச்சி மிக்க
சோதியை⋆ நாதன் என அறியாதுழல்கின்ற தொண்டர்⋆
பேதைமை தீர்த்த இராமானுசனைத் தொழும் பெரியோர்⋆
பாதம் அல்லால் என் தன் ஆர் உயிர்க்கு⋆ யாதொன்றும்
பற்றில்லையே (85)

பற்றா மனிசரைப் பற்றி⋆ அப்பற்று விடாதவரே
உற்றார் என உழன்று⋆ ஓடி நையேன் இனி⋆ ஒள்ளிய நூல்
கற்றார் பரவும் இராமானுசனை⋆ கருதும் உள்ளம்
பெற்றார் எவர்⋆ அவர் எம்மை நின்றாளும் பெரியவரே (86)

பெரியவர் பேசிலும்⋆ பேதையர் பேசிலும்⋆ தன் குணங்கட்-
குரியசொல் என்றும்⋆ உடையவன் என்றென்று⋆ உணர்வின் மிக்கோர்
தெரியும் வண் கீர்த்தி இராமானுசன் மறை தேர்ந்துலகில்⋆
புரியும் நல் ஞானம்⋆ பொருந்தாதவரைப் பொரும் கலியே (87)

கலி மிக்க செந்நெல்⋆ கழனிக் குறையல்⋆ கலைப் பெருமான்
ஒலிமிக்க பாடலை உண்டு⋆ தன் உள்ளம் தடித்து⋆ அதனால்
வலி மிக்க சீயம் இராமானுசன் மறை வாதியராம்⋆
புலி மிக்கதென்று⋆ இப்புவனத்தில் வந்தமை போற்றுவனே (88)

போற்றரும் சீலத்திராமானுச⋆ நின் புகழ் தெரிந்து
சாற்றுவனேல்⋆ அது தாழ்வது தீரில்⋆ உன் சீர் தனக்கோர்

ஏற்றம் என்றே கொண்டிருக்கிலும் என் மனம் ஏத்தி அன்றி⋆
ஆற்றகில்லாது⋆ இதற்கென் நினைவாய் என்றிட்டஞ்சுவனே (89)

நினையார் பிறவியை⋆ நீக்கும் பிரானை⋆ இந் நீள் நிலத்தே
எனை ஆள வந்த இராமானுசனை⋆ இருங்கவிகள்
புனையார் புனையும் பெரியவர் தாள்களில்⋆ பூந்தொடையல்
வனையார்⋆ பிறப்பில் வருந்துவர் மாந்தர் மருள் சுரந்தே (90)

மருள் சுரந்தாகம வாதியர் கூறும்⋆ அவப் பொருளாம்
இருள் சுரந்தெய்த்த⋆ உலகிருள் நீங்கத்⋆ தன் ஈண்டிய சீர்
அருள் சுரந்தெல்லா உயிர்கட்கும் நாதன்⋆ அரங்கன் என்னும்
பொருள் சுரந்தான்⋆ எம் இராமானுசன் மிக்க புண்ணியனே (91)

புண்ணிய நோன்பு புரிந்தும் இலேன்⋆ அடி போற்றி செய்யும்⋆
நுண் அருங்கேள்வி நுவன்றும் இலேன்⋆ செம்மை நூற்புலவர்க்
கெண் அருங்கீர்த்தி இராமானுச! இன்று நீ புகுந்து⋆ என்
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும்⋆ நின்ற இக் காரணம் கட்டுரையே (92)

கட்டப் பொருளை மறைப் பொருள் என்று⋆ கயவர் சொல்லும்
பெட்டைக் கெடுக்கும்⋆ பிரான் அல்லனே⋆ என் பெரு வினையைக்
கிட்டிக் கிழங்கொடு தன் அருள் என்னும் ஒள் வாள் உருவி⋆
வெட்டிக் களைந்த⋆ இராமானுசன் என்னும் மெய்த்தவனே (93)

தவம் தரும் செல்வம் தகவும் தரும்⋆ சலியாப் பிறவிப்
பவம் தரும்⋆ தீவினை பாற்றித் தரும்⋆ பரந்தாமம் என்னும்
திவம் தரும் தீதில் இராமானுசன் தன்னைச் சார்ந்தவர்கட்கு⋆
உவந்தருந்தேன்⋆ அவன் சீர் அன்றி யான் ஒன்றும் உள்
மகிழ்ந்தே (94)

உண்ணின்றுயிர்களுக்கு⋆ உற்றனவே செய்து⋆ அவர்க்குயவே
பண்ணும் பரனும் பரிவிலநாம் படி⋆ பல் உயிர்க்கும்
விண்ணின் தலை நின்று வீடளிப்பான் எம் இராமானுசன்⋆
மண்ணின் தலத்துதித்து⋆ உய்மறை நாலும் வளர்த்தனனே (95)

வளரும் பிணிகொண்ட வல்வினையால்⋆ மிக்க நல்வினையில்⋆
கிளரும் துணிவு கிடைத்தறியாது⋆ முடைத்தலை ஊன்
தளரும் அளவும் தரித்தும் விழுந்தும் தனி திரிவேற்கு⋆
உளர் எம் இறைவர்⋆ இராமானுசன் தன்னை உற்றவரே (96)

தன்னை உற்றாட்செய்யும் தன்மையினோர்⋆ மன்னு தாமரைத் தாள்
தன்னை உற்றாட்செய்ய⋆ என்னை உற்றான் இன்று⋆ தன் தகவால்
தன்னை உற்றார் அன்றித் தன்மை உற்றார் இல்லை என்றறிந்து⋆
தன்னை உற்றாரை⋆ இராமானுசன் குணம் சாற்றிடுமே (97)

‡இடுமே இனிய சுவர்க்கத்தில்⋆ இன்னும் நரகில் இட்டுச்
சுடுமே அவற்றை⋆ தொடர் தரு தொல்லை⋆ சுழல் பிறப்பில்
நடுமே இனி நம் இராமானுசன் நம்மை நம் வசத்தே⋆
விடுமே சரணம் என்றால்⋆ மனமே! நையல் மேவுதற்கே (98)

தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும்⋆ தாழ்சடையோன்
சொற் கற்ற சோம்பரும்⋆ சூனிய வாதரும்⋆ நான்மறையும்
நிற்கக் குறும்பு செய் நீசரும் மாண்டனர்⋆ நீள் நிலத்தே
பொற் கற்பகம்⋆ எம் இராமானுச முனி போந்த பின்னே (99)

போந்ததென் நெஞ்சென்னும் பொன் வண்டு⋆
உனதடிப் போதில் ஒண் சீர்
ஆம்⋆ தெளி தேன் உண்டமர்ந்திட வேண்டி⋆ நின்பால் அதுவே
ஈந்திட வேண்டும் இராமானுச! இதுவன்றி ஒன்றும்⋆
மாந்தகில்லாது⋆ இனி மற்றொன்று காட்டி மயக்கிடலே (100)

மயக்கும் இரு வினை வல்லியில் பூண்டு⋆ மதி மயங்கித்
துயக்கும் பிறவியில்⋆ தோன்றிய என்னை⋆ துயர் அகற்றி
உயக்கொண்டு நல்கும் இராமானுச! என்றதுன்னை உன்னி⋆
நயக்கும் அவர்க்கிதிழுக்கென்பர்⋆ நல்லவர் என்று நைந்தே (101)

நையும் மனம் உன் குணங்களை உன்னி⋆ என் நா இருந்தெம்
ஐயன் இராமானுசன் என்றழைக்கும்⋆ அருவினையேன்
கையும் தொழும் கண் கருதிடும் காணக் கடல் புடை சூழ்⋆
வையம் இதனில்⋆ உன் வண்மை என்பால் என் வளர்ந்ததுவே (102)

வளர்ந்த வெங்கோப மடங்கல் ஒன்றாய்⋆ அன்று வாள் அவுணன்
கிளர்ந்த⋆ பொன் ஆகம் கிழித்தவன்⋆ கீர்த்திப் பயிர் எழுந்து
விளைந்திடும் சிந்தை இராமானுசன் என்தன் மெய்வினை நோய்⋆
களைந்து நன் ஞானம் அளித்தனன்⋆ கையில் கனி என்னவே (103)

கையில் கனி என்னக்⋆ கண்ணனைக் காட்டித் தரிலும்⋆ உன்தன்
மெய்யில் பிறங்கிய⋆ சீரன்றி வேண்டிலன் யான்⋆ நிரயத்-
தொய்யில் கிடக்கிலும் சோதி விண் சேரிலும் இவ்வருள் நீ⋆
செய்யில் தரிப்பன்⋆ இராமானுச! என் செழுங்கொண்டலே! (104)

செழுந்திரைப் பாற்கடல் கண் துயில் மாயன்⋆ திருவடிக்கீழ்
விழுந்திருப்பார் நெஞ்சில்⋆ மேவு நன் ஞானி⋆ நல் வேதியர்கள்
தொழும் திருப் பாதன் இராமானுசனைத் தொழும் பெரியோர்⋆
எழுந்திரைத்தாடும் இடம்⋆ அடியேனுக்கிருப்பிடமே (105)

‡இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம்⋆ மாலிருஞ்சோலை என்னும்
பொருப்பிடம்⋆ மாயனுக்கென்பர் நல்லோர்⋆
அவை தம்மொடும் வந்
திருப்பிடம் மாயன் இராமானுசன் மனத்து⋆ இன்றவன் வந்
திருப்பிடம்⋆ என்தன் இதயத்துள்ளே தனக்கின்புறவே (106)

‡இன்புற்ற சீலத்திராமானுச⋆ என்றும் எவ்விடத்தும்
என்புற்ற நோய்⋆ உடல் தோறும் பிறந்திறந்து⋆ எண் அரிய
துன்புற்று வீயினும் சொல்லுவதொன்றுண்டு⋆ உன் தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும் படி⋆ என்னை ஆக்கி அங்காட்படுத்தே (107)

‡அங்கயல் பாய் வயல் தென் அரங்கன்⋆ அணி ஆகமன்னும்
பங்கய மாமலர்⋆ பாவையைப் போற்றுதும்⋆ பத்தி எல்லாம்
தங்கியதென்னத் தழைத்து நெஞ்சே! நம் தலைமிசையே⋆
பொங்கிய கீர்த்தி⋆ இராமானுசன் அடிப் பூ மன்னவே (108)

॥ திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வாரணமாயிரம் ॥

## மாயவன் தன்னை மணஞ்செய்யக் கண்ட தூயநற் கனைவைத் தோழிக் குரைத்தல்

‡வாரணம் ஆயிரம்⋆ சூழ வலஞ்செய்து⋆
நாரண நம்பி⋆ நடக்கின்றான் என்றெதிர்⋆
பூரண பொற்குடம்⋆ வைத்துப் புறம் எங்கும்⋆
தோரணம் நாட்டக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (1)

நாளை வதுவை⋆ மணம் என்று நாள் இட்டு⋆
பாளை கமுகு⋆ பரிசுடைப் பந்தற் கீழ்⋆
கோளரி மாதவன்⋆ கோவிந்தன் என்பான் ஓர்⋆
காளை புகுதக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (2)

இந்திரன் உள்ளிட்ட⋆ தேவர் குழாம் எல்லாம்⋆
வந்திருந்தென்னை⋆ மகட்பேசி மந்திரித்து⋆
மந்திரக் கோடி உடுத்தி⋆ மண மாலை⋆
அந்தரி சூட்டக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (3)

நால் திசைத் தீர்த்தம் கொணர்ந்து⋆ நனி நல்கி⋆
பார்ப்பனச் சிட்டர்கள்⋆ பல்லார் எடுத்தேத்தி⋆
பூப் புனை கண்ணிப்⋆ புனிதனோடென் தன்னை⋆
காப்பு நாண் கட்டக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (4)

கதிரொளி தீபம்⋆ கலசம் உடன் ஏந்தி⋆
சதிரிள மங்கையர் தாம்⋆ வந்தெதிர் கொள்ள⋆
மதுரையார் மன்னன்⋆ அடிநிலை தொட்டெங்கும்⋆
அதிரப் புகுதக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (5)

மத்தளம் கொட்ட⋆ வரி சங்கம் நின்றூத⋆
முத்துடைத் தாமம்⋆ நிரை தாழ்ந்த பந்தற் கீழ்⋆

www.prapatti.com

மைத்துனன் நம்பி⋆ மதுசூதன் வந்தென்னைக்⋆
    கைத்தலம் பற்றக்⋆ கனாக்கண்டேன் தோழீ! நான் (6)

வாய் நல்லார்⋆ நல்ல மறை ஓதி மந்திரத்தால்⋆
    பாசிலை நாணல் படுத்துப்⋆ பரிதி வைத்து⋆
காய் சின மாகளிறன்னான்⋆ என் கைப்பற்றி⋆
    தீ வலஞ்செய்யக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (7)

இம்மைக்கும்⋆ ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்⋆
    நம்மை உடையவன்⋆ நாராயணன் நம்பி⋆
செம்மை உடைய⋆ திருக்கையால் தாள் பற்றி⋆
    அம்மி மிதிக்கக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (8)

வரிசிலை வாள் முகத்து⋆ என்னைமார் தாம் வந்திட்டு⋆
    எரிமுகம் பாரித்து⋆ என்னை முன்னே நிறுத்தி⋆
அரிமுகன் அச்சுதன்⋆ கைம்மேல் என் கை வைத்து⋆
    பொரிமுகந்தட்டக்⋆ கனாக்கண்டேன் தோழீ! நான் (9)

குங்குமம் அப்பிக்⋆ குளிர் சாந்தம் மட்டித்து⋆
    மங்கல வீதி⋆ வலஞ்செய்து மண நீர்⋆
அங்கவனோடும்⋆ உடன் சென்றங்கானை மேல்⋆
    மஞ்சனம் ஆட்டக்⋆ கனாக் கண்டேன் தோழீ! நான் (10)

‡ஆயனுக் காகத்⋆ தான் கண்ட கனாவினை⋆
    வேயர் புகழ்⋆ வில்லி புத்தூர்க் கோன் கோதை சொல்⋆
தூய தமிழ் மாலை⋆ ஈரைந்தும் வல்லவர்⋆
    வாயுநன் மக்களை பெற்று⋆ மகிழ்வரே (11)

‖ ஆண்டாள் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நாலாயிர திவ்யப் பிரபந்தத் தனியன்கள் ॥

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாத$_2$ார்யம் வந்தே$_3$ வேத$_3$ாந்ததே$_3$ஶிகம் ॥ 1 ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்ப$_4$ாம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மத$_3$ாசார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ 2 ॥

யோ நித்யமச்யுதபத$_3$ாம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம-
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ருணாயமேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தே$_4$ா:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ 3 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ 4 ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹத$_3$ாஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மிநித்யம் ॥ 5 ॥

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேத$_3$ாந் அஶேஷாந்
நரபதிபரிக்லுப்தம் ஶுல்கமாத$_3$ாதுகாம: ।
ஶ்வஶுரம் அமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥ 6 ॥

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்றொருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம் - முன்னாள்

www.prapatti.com

கிழியறுத்தான் என்றுரைத்தோம் கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து ‖ 7 ‖

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று
ஈண்டிய சங்கம் எடுத்தூத - வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று ‖ 8 ‖

நீளாதுங்க$_3$ ஸ்தநகி$_3$ரிதடீ ஸுப்தமுத்$_3$போ$_3$த்$_4$ய க்ருஷ்ணம்
பாரார்த்$_2$யம் ஸ்வம் ஶ்ருதிஶதஶிரஸ்ஸித்$_3$த$_4$மத்$_4$யாபயந்தீ ।
ஸ்வோச்$_2$சி$_2$ஷ்டாயாம் ஸ்ரஜிநிக$_3$ளிதம் யா ப$_3$லாத்க்ருத்ய பு$_4$ங்க்தே
கோ$_3$தா$_3$ தஸ்யை நம இத$_3$மித$_3$ம் பூ$_4$ய ஏவாஸ்து பூ$_4$ய: ‖ 9 ‖

அன்னவயல் புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம் - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு ‖ 10 ‖

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே! தொல்பாவை
பாடி அருளவல்ல பல்வளையாய்! நாடிநீ
வேங்கடவற்கென்னை விதி என்ற இம்மாற்றம்
நாம்கடவா வண்ணமே நல்கு ‖ 11 ‖

அல்லிநாள் தாமரைமேல் ஆரணங்கின் இன் துணைவி
மல்லிநாடாண்ட மடமயில் மெல்லியலாள்
ஆயர் குலவேந்தன் ஆகத்தாள் தென் புதுவை
வேயர் பயந்த விளக்கு ‖ 12 ‖

இன்னமுதம் ஊட்டுகேன் இங்கேவா பைங்கிளியே!
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள் - பொன்னம்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோன் எங்கள்
குலசேகரன் என்றே கூறு ‖ 13 ‖



www.prapatti.com

ஆரம் கெடப்பரன் அன்பர் கொள்ளார் என்று அவர்களுக்கே
வாரங்கொடுகுடப் பாம்பில் கையிட்டவன் மாற்றலரை
வீரங்கெடுத்த செங்கோல் கொல்லி காவலன் வில்லவர் கோன்
சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகாமணியே ॥ 14 ॥

தருச்சந்தப் பொழில் தழுவு தாரணியின் துயர்தீர
திருச்சந்த விருத்தம் செய் திருமழிசைப் பரன்வருமூர்
கருச்சந்தும் காரகிலும் கமழ்கோங்கும் மணநாறும்
திருச்சந்தத் துடன்மருவு திருமழிசை வளம் பதியே ॥ 15 ॥

உலகும் மழிசையும் உள்ளுணர்ந்து தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க - உலகு தன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது ॥ 16 ॥

மற்றொன்றும் வேண்டா மனமே! மதிளரங்கர்
கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ் - உற்ற
திருமாலை பாடும் சீர்த் தொண்டரடிப் பொடி எம்
பெருமானை எப்பொழுதும் பேசு ॥ 17 ॥

தமேவமத்வா பரவாஸுதே₃வம்
ரங்கே₃ஶயம் ராஜவத₃ர்ஹணீயம் ।
ப்ராபே₃ாத₄கீம் யோऽக்ருத ஸூக்திமாலாம்
ப₄க்தாங்க்₄ரி ரேணும் ப₄க₃வந்தமீடே₃ ॥ 18 ॥

மண்டங்குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்த்
தொண்டரடிப்பொடித் தொன்னகரம் - வண்டு
திணர்த்தவயல் தென்னரங்கத்தம்மானைப் பள்ளி
உணர்த்தும் பிரானுதித்த வூர் ॥ 19 ॥

ஆபாத₃சூடா₃மநுபூ₄ய ஹரிம் ஶயாநம்
மத்₄யே கவேரது₃ஹிதுர்முதி₃தாந்தராத்மா ।



www.prapatti.com

அத்$_3$ரஷ்ட்ருதாம் நயநயோர்விஷயாந்தராணாம்
    யோ நிஶ்சிகாய மநவை முநிவாஹநம் தம் ‖ 20 ‖

காட்டவே கண்ட பாத கமலம் நல்லாடையுந்தி
    தேட்டரும் உதரபந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனி புகுந்து
    பாட்டினால் கண்டு வாழும் பாணர்தாள் பரவினோமே ‖ 21 ‖

அவிதி$_3$தவிஷயாந்தரஶ்ஶட$_2$ாரே:
    உபநிஷத$_3$ாமுபக$_3$ாநமாத்ரபே$_4$ாக$_3$: ।
அபி ச கு$_3$ணவஶாத் ததே$_3$கஶேஷீ
    மது$_4$ரகவிர்ஹ்ருத$_3$யே மமாவிரஸ்து ‖ 22 ‖

வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ்செய்த
    மாறன் சடகோபன் வண்குருகூர் - ஏறெங்கள்
வாழ்வாம் என்றேத்தும் மதுரகவியார் எம்மை
    ஆள்வார் அவரே அரண் ‖ 23 ‖

கலயாமி கலித்$_4$வம்ஸம் கவிம் லோகதி$_3$வாகரம் ।
யஸ்ய கோ$_3$பி$_4$: ப்ரகாஶாபி$_4$ராவித்$_3$யம் நிஹதம் தம: ‖ 24 ‖

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
    வாழி குறையலூர் வாழ் வேந்தன் - வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்
    தூயோன் சுடர்மான வேல் ‖ 25 ‖

நெஞ்சுக்கிருள்கடி தீபம் அடங்கா நெடும் பிறவி
    நஞ்சுக்கு நல்லவமுதம் தமிழ் நன்னூல் துறைகள்
அஞ்சுக்கிலக்கியம் ஆரண சாரம் பரசமயப்
    பஞ்சுக்கனலின் பொறி பரகாலன் பனுவல்களே ‖ 26 ‖

எங்கள் கதியே! இராமாநுச முநியே!
    சங்கை கெடுத்தாண்டதவராசா - பொங்கு புகழ்

மங்கையர்கோனீந்த மறையாயிரம் அனைத்தும்
    தங்குமனம் நீயெனக்குத் தா ॥ 27 ॥

ப$_4$க்தாம்ருதம் விஶ்வஜநாநுமோத$_3$நம்
    ஸர்வார்த$_2$த$_3$ம் ஶ்ரீஶட$_2$கோபவாங்மயம் ।
ஸஹஸ்ரஶாகோ$_2$பநிஷத்ஸமாக$_3$மம்
    நமாம்யஹம் த்$_3$ராவிட$_3$வேத$_3$ஸாக$_3$ரம் ॥ 28 ॥

திருவழுதி நாடென்றும் தென் குருகூர் என்றும்
    மருவினிய வண்பொருநல் என்றும் - அருமறைகள்
அந்தாதி செய்தான் அடியிணையே எப்பொழுதும்
    சிந்தியாய் நெஞ்சே! தெளிந்து ॥ 29 ॥

மனத்தாலும் வாயாலும் வண் குருகூர் பேணும்
    இனத்தாரையல்லா திறைஞ்சேன் - தனத்தாலும்
ஏதும் குறைவிலேன் எந்தை சடகோபன்
    பாதங்கள் யாமுடைய பற்று ॥ 30 ॥

ஏய்ந்தபெருங் கீர்த்தி இராமாநுசமுனி தன்
    வாய்ந்தமலர்ப் பாதம் வணங்குகின்றேன் - ஆய்ந்த பெரும்
சீரார் சடகோபன் செந்தமிழ் வேதம் தரிக்கும்
    பேராத உள்ளம் பெற ॥ 31 ॥

வான் திகழும் சோலை மதிளரங்கர் வண் புகழ்மேல்
    ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும் - ஈன்ற
முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
    இதத்தாய் இராமானுசன் ॥ 32 ॥

மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும்
    தக்க நெறியும் தடையாகித் - தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர் கோன்
    யாழினிசை வேதத் தியல் ॥ 33 ॥

www.prapatti.com

கைதைசேர் பூம் பொழில் சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான் கவிஞர் போரேறு - வையத்து
அடியவர்கள் வாழ அருந்தமிழ் நூற்றந்தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து ॥ 34 ॥

என்பிறவி தீர இறைஞ்சினேன் இன்னமுதா
அன்பே தகளி அளித்தானை - நன் புகழ் சேர்
சீதத்தார் முத்துக்கள் சேரும் கடல் மல்லைப்
பூதத்தார் பொன்னங்கழல் ॥ 35 ॥

சீராரும் மாடத் திருக்கோவலூர் அதனுள்
காரார் கருமுகிலைக் காணப்புக்கு - ஓராத்
திருக்கண்டேன் என்றுரைத்த சீரான் கழலே
உரைக்கண்டாய் நெஞ்சே! உகந்து ॥ 36 ॥

நாராயணன் படைத்தான் நான்முகனை நான்முகனுக்-
கேரார் சிவன் பிறந்தான் என்னும் சொல் - சீரார்
மொழிசெப்பி வாழலாம் நெஞ்சமே! மொய்பூ
மழிசைப் பரன் அடியே வாழ்த்து ॥ 37 ॥

கருவிருத்தக்குழி நீத்தபின் காமக் கடுங்குழிவீழ்ந்து
ஒருவிருத்தம் புக்குழலுறுவீர்! உயிரின் பொருள்கட்கு
ஒருவிருத்தம் புகுதாமல் குருகையர் கோனுரைத்த
திருவிருத்தத்தோர் அடி கற்றிரீர் திரு நாட்டகத்தே ॥ 38 ॥

காசினியோர் தாம் வாழக் கலியுகத்தே வந்துதித்து
ஆசிரியப் பாவதனால் அரு மறை நூல் விரித்தானை
தேசிகனைப் பராங்குசனைத் திகழ் வகுளத் தாரானை
மாசடையா மனத்து வைத்து மறவாமல் வாழ்த்துதுமே ॥ 39 ॥

முந்துற்ற நெஞ்சே! முயற்றி தரித்துரைத்து
வந்தித்து வாயார வாழ்த்தியே - சந்த



www.prapatti.com

முருகூரும் சோலைசூழ் மொய் பூம் பொருநல்
    குருகூரன் மாறன் பேர் கூறு॥ 40॥

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
    வாழி குறையலூர் வாழ்வேந்தன் வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர் கோன்
    தூயோன் சுடர்மான வேல்!॥ 41॥

முள்ளிச் செழுமலரோ தாரான் முளைமதியம்
    கொள்ளிக்கென் உள்ளம் கொதியாமே - வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியை வெட்டி
    மருவாளன் தந்தான் மடல்॥ 42॥

பொன்னுலகில் வானவரும் பூமகளும் போற்றி செய்யும்
    நன்னுதலீர் நம்பி நறையூரர் - மன்னுலகில்
என்னிலைமை கண்டும் இரங்காரேயாமாகில்
    மன்னுமடலூர் வன்வந்து॥ 43॥

முன்னை வினை அகல மூங்கிற் குடி அமுதன்
    பொன்னம் கழற்கமலப் போதிரண்டும் - என்னுடைய
சென்னிக்கணி ஆகச் சேர்த்தினேன் தென்புலத்தார்க்கு
    என்னுக் கடவுடையேன் யான்॥ 44॥

நயந்தரு பேரின்பம் எல்லாம் பழுதின்றி நண்ணினர்பால்
    சயந்தரு கீர்த்தி இராமானுச முனி தாள் இணைமேல்
உயர்ந்த குணத்துத் திருவரங்கத் தமுதோங்கும் அன்பால்
    இயம்பும் கலித்துறை அந்தாதி ஓத இசை நெஞ்சமே!॥ 45॥

சொல்லின் தொகை கொண்டுனதடிப் போதுக்குத் தொண்டு செய்யும்
    நல்லன்பர் ஏத்தும் உன் நாமம் எல்லாம் என்றன் நாவினுள்ளே
அல்லும் பகலும் அமரும் படி நல்கறுசமயம்
    வெல்லும் பரம இராமானுச! இதென் விண்ணப்பமே॥ 46॥



www.prapatti.com

॥ ஸ்ரீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ॥ அடைக்கலப்பத்து ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡பத்தி முதலாம் அவற்றில்⋆ பதி எனக்குக் கூடாமல்⋆
எத்திசையும் உழன்றோடி⋆ இளைத்துவிழும் காகம் போல்⋆
முத்திதரு நகரேழில்⋆ முக்கியமாம் கச்சிதனில்⋆
அத்திகிரி அருளாளர்க்கு⋆ அடைக்கலம் நான் புகுந்தேனே (1)

சடைமுடியன் சதுர்முகனென்று⋆ இவர்முதலாம் தரமெல்லாம்⋆
அடைய வினைப்பயனாகி⋆ அழிந்துவிடும் படி கண்டு⋆
கடி மலராள் பிரியாத⋆ கச்சிநகர் அத்திகிரி⋆
இடமுடைய அருளாளர்⋆ இணையடிகள் அடைந்தேனே (2)

தந்திரங்கள் வேறின்றித்⋆ தமது வழி அழியாது⋆
மந்திரங்கள் தம்மாலும்⋆ மற்றுமுள்ள உரையாலும்⋆
அந்தரம் கண்டடிபணிவார்⋆ அனைவர்க்கும் அருள்புரியும்⋆
சிந்துர வெற்பிறையவனார்⋆ சீலம் அல்லதறியேனே (3)

காகம் இராக்கதன் மன்னர்⋆ காதலி கத்திரபந்து⋆
நாகம் அரன் அயன் முதலா⋆ நாகநகரார் தமக்கும்⋆
போகமுயர் வீடுபெறப்⋆ பொன்னருள் செய்தமை கண்டு⋆
நாகமலை நாயகனார்⋆ நல்லடிப் போதடைந்தேனே (4)

உகக்கும் அவை உகந்து⋆ உகவாவனைத்தும் ஒழிந்து⋆ உறவுகுணம்-
மிகத் துணிவு பெறவுணர்ந்து⋆ வியன் காவலென வரித்துச்⋆
சகத்தில் ஒரு புகலில்லாத்⋆ தவம் அறியேன் மதிட்கச்சி⋆
நகர்க் கருணை நாதனை⋆ நல்லடைக்கலமாய் அடைந்தேனே (5)

www.prapatti.com

அளவுடையார் அடைந்தார்க்கும்⋆ அதன் உரையே கொண்டவர்க்கும்⋆
வளவுரை தந்தவன் அருளே⋆ மன்னிய மாதவத்தோர்க்கும்⋆
களவொழிவார் எமரென்ன⋆ இசைந்தவர்க்கும் காவலராம்⋆
துளவ முடி அருள் வரதர்⋆ துவக்கிலெனை வைத்தேனே (6)

உமதடிகள் அடைகின்றேன் என்று⋆ ஒரு கால் உரைத்தவரை⋆
அமையுமினி என்பவர் போல்⋆ அஞ்சலெனக் கரம் வைத்து⋆
தமதனைத்தும் அவர் தமக்கு⋆ வழங்கியும் தாம் மிக விளங்கும்⋆
அமைவுடைய அருளாளர்⋆ அடியிணையை அடைந்தேனே (7)

திண்மை குறையாமைக்கும்⋆ நிறைகைக்கும் தீவினையால்⋆
உண்மை மறவாமைக்கும்⋆ உளமதியில் உகக்கைக்கும்⋆
தண்மை கழியாமைக்கும்⋆ தரிக்கைக்கும் தணிகைக்கும்⋆
வண்மையுடை அருளாளர்⋆ வாசகங்கள் மறவேனே (8)

சுருதி நினைவிவையறியும்⋆ துணிவுடையார் தூமொழிகள்⋆
பரிதிமதி ஆசிரியர்⋆ பாசுரம் சேர்ந்தருக்கணங்கள்⋆
கருதியொரு தெளிவாளால்⋆ கலக்கம் அறுத்தத்திகிரிப்⋆
பரிதிமதி நயனமுடைப்⋆ பரமன் அடி பணிந்தேனே (9)

‡திருமகளும் திருவடிவும்⋆ திருவருளும் தெள்ளறிவும்⋆
அருமை இலாமையும் உறவும்⋆ அளப்பரிய வடியரசும்⋆
கருமம் அழிப்பளிப்பமைப்பும்⋆ கலக்கம் இலா வகைநின்ற⋆
அருள் வரதர் நிலை இலக்கில்⋆ அம்பென நான் அமிழ்ந்தேனே (10)

‡ஆறு பயன் வேறில்லா⋆ அடியவர்கள் அனைவர்க்கும்⋆
ஆறும் அதன் பயனும் இவை⋆ ஒருகாலும் பலகாலும்⋆
ஆறு பயன் எனவே கண்டு⋆ அருளாளர் அடியிணைமேல்⋆
கூறிய நற்குண உரைகள்⋆ இவை பத்தும் கோதிலவே (11)

‖ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ மும்மணிக்கோவை ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡அருள் தரும் அடியவர்பால் மெய்யை வைத்துத்⋆
தெருள் தர நின்ற தெய்வநாயக!⋆ நின்
அருளெனும் சீரோர் அரிவையானதென⋆
இருள் செக எமக்கோர் இன்னொளி விளக்காய்⋆
மணிவரை அன்ன நின் திருவுருவில்⋆
அணியமர் ஆகத்தலங்கலாய் இலங்கி⋆
நின்படிக்கெல்லாந் தன்படி ஏற்க⋆
அன்புடன் நின்னோடவதரித்தருளி⋆
வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்து⋆
ஈண்டிய வினைகள் மாண்டிட முயன்று⋆
தன்னடி சேர்ந்த தமருனை அணுக⋆
நின்னுடன் சேர்ந்து நிற்குநின் திருவே (1)

திருமால் அடியவர்க்கு மெய்யனார்⋆ செய்ய
திருமாமகள் என்றும் சேரும்⋆ திருமார்பில்
இம் மணிக்கோவை⋆ உடன் ஏற்கின்றார்⋆ என்றன் இம்
மும்மணிக்கோவை மொழி (2)

மொழிவார் மொழிவன மும்மறையாகும்⋆ அயிந்தையில் வந்து⋆
இழிவார் இழிகவென்று⋆ இன்னமுதக் கடலாகி நின்ற⋆
விழிவார் அருள் மெய்யர் மெல்லடி வேண்டிய⋆ மெல்லியல் மேல்⋆
பொழிவார் அனங்கர் தம்⋆ பூங்கரும்புந்திய பூ மழையே (3)

www.prapatti.com

மழையில் எழுந்த மொக்குள் போல் வையம்⋆
    அழியவொன்றழியா அடியவர் மெய்ய⋆
    அருமறையின் பொருள் ஆய்ந்தெடுக்குங்கால்⋆
    திருவுடன் அமர்ந்த தெய்வநாயக⋆
நின் திருத் தனக்கு நீ திருவாகி⋆
    இந்து தன் நிலவுடன் இலங்கு தன்மையினை⋆
    நந்துதல் இல்லா நல் விளக்காகி⋆
    அந்தமில் அமுத ஆழியாய் நிற்றி⋆
பாற்கடல் தன்னில் பன்மணி அன்ன⋆
    சீர்க்கணம் சேர்ந்த சீலம் எல்லையிலை⋆
    அடியவர் பிழைகள் நின் கருத்தடையாது⋆
    அடைய ஆண்டருளும் அரசனும் நீயே⋆
உயர்ந்த நீ உன்னை எம்முடன் கலந்தனை⋆
    அயிந்தை மாநகரில் அமர்ந்தனை எமக்காய்ச்⋆
    சித்திர மணியெனத் திகழுமன்னுருவில்⋆
    அத்திரம் அணியென அனைத்தும் நீ அணுகி⋆
விண்ணுள் அமர்ந்த வியன் உருவதனால்⋆
    எண்ணிய ஈரிரண்டுருக்களும் அடைதி⋆
    பன்னிரு நாமம் பலபல உருவாய்⋆
    இன்னுருவெங்கும் எய்தி நீ நிற்றி⋆
மீனோடாமை கேழல் கோளரியாய்⋆
    வானோர் குறளாய் மழுப்படை முனியாய்ப்⋆
    பின்னும் இராமர் இருவராய்ப் பாரில்⋆
    துன்னிய பரம் தீர் துவரை மன்னனுமாய்க்⋆
கலி தவிர்த்தருளும் கற்கியாய் மற்றும்⋆
    மலிவதற்கெண்ணும் வல்வினை மாற்ற⋆
    நானா உருவம் கொண்டு நல் அடியோர்⋆
    வானார் இன்பமிங்குறவருதி⋆
ஓருயிர் உலகுக்கென்னு நீ திருவோடு⋆
    ஏர் உயிரெல்லாம் ஏந்தி இன்புறுதி⋆
    யாவரும் அறியாதெங்கு நீ கரந்து⋆
    மேவுருச் சூழ்ந்து வியப்பினால் மிகுதி⋆



www.prapatti.com

கொண்டிட எம்மை அடைக்கலம் உலகில்⋆
    கண்டிலம் கதி உனையன்றி மற்றொன்றும்⋆
    பல்வகை நின்ற நின்படி அனைத்தினும்⋆
    தொல்வகை காட்டும் துணிந்து தூமறையே (4)

தூமறையின் உள்ளம்⋆ துளங்காத் துணிவு தரும்⋆
    ஆமறிவால் ஆர்ந்தடிமை ஆகின்றோம்⋆ பூமறையோன்
பாராயணத்தில் பணியும்⋆ அயிந்தை நகர்⋆
    நாராயணனார்க்கே நாம் (5)

ஆர்க்கும் கருணை பொழிவான்⋆ அயிந்தையில் வந்தமர்ந்த⋆
    கார்க்கொண்டலைக் கண்ட காதல்⋆ புனமயில் கண்பனியா⋆
வேர்க்குமுகிழ்க்கும் விதிர்விதிர்க்கும்⋆ வெள்கி வெவ்வுயிர்க்கும்⋆
    பார்க்கின்றவர்க்கிது நாம் என்கொல் என்று⋆ பயிலுவமே (6)

பயின் மதி நீயே பயின் மதி தருதலின்⋆
    வெளியும் நீயே வெளியுற நிற்றலின்⋆
தாயும் நீயே சாயை தந்துகத்தலின்⋆
    தந்தையும் நீயே முந்தி நின்றளித்தலின்⋆
உறவும் நீயே துறவாதொழிதலின்⋆
    உற்றதும் நீயே சிற்றின்பம் இன்மையின்⋆
ஆறும் நீயே ஆற்றுக்கருள் தலின்⋆
    அறமும் நீயே மறநிலை மாய்த்தலின்⋆
துணைவனும் நீயே இணை இலையாதலின்⋆
    துய்யனும் நீயே செய்யாள் உறைதலின்

காரணம் நீயே நாரணன் ஆதலின்⋆
    கற்பகம் நீயே நற்பதம் தருதலின்⋆
இறைவனும் நீயே குறை ஒன்றிலாமையின்⋆
    இன்பமும் நீயே துன்பம் துடைத்தலின்⋆
யானும் நீயே யென்னுள் உறைதலின்⋆
    எனதும் நீயே உனதன்றி இன்மையின்⋆
நல்லாய் நீயே பொல்லாங்கிலாமையின்⋆
    வல்லாய் நீயே வையமுண்டுமிழ்தலின்⋆

எங்ஙனமாகுமெய்ய நின் இயல்பெ⋆
அங்ஙனேயொக்க அறிவதாரணமே (7)

ஆரணங்கள் தேட⋆ அயிந்தைநகர் வந்துதித்த⋆
காரணராய் நின்ற கடல்வண்ணர்⋆ நாரணனார்
இப்படிக்குமிக்கன்றெடுத்த⋆ பாதம் கழுவ⋆
மெய்ப்படிக்கம் ஆனது பொன் வெற்பு (8)

‡வெற்புடனொன்றி⋆ அயிந்தையில் வெவ்வினை தீர் மருந்தொன்று⋆
அற்புதமாக அமர்ந்தமை கேட்டு⋆ அருள் வேண்டி நிற்கப்⋆
பற்பில் அமர்ந்த செய்யாள்⋆ படிகாட்டிய பண்புடை⋆ எம்
வில் புருவக்கொடிக்கோர்⋆ விலங்கா மயல் பெற்றனமே (9)

‡பெற்றனை நீயே மற்றுளதெல்லாம்⋆
பெறுவது நின்னை உறுவது கொள்வார்⋆
நின்னால் அன்றி மன்னார் இன்பம்⋆
நின் பொருட்டு நீ என் பொருட்டிலை⋆
நின் உருநின்று மின் உருத்தோன்றும்⋆
நின் தனக்கு நிகர் நின்னடி அடைவார்⋆
நின் பால் அன்றி அன்பால் உய்யார்⋆
வாரணம் அழைக்க வந்த காரணனே (10)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ॥ நவமணிமாலை ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡ஒருமதி அன்பர் உளம் கவர்ந்தன⋆
உலகம் அடங்க வளர்ந்தளந்தன⋆
ஒருசடை ஒன்றிய கங்கை தந்தன⋆
உரக படங்கள் அரங்கு கொண்டன⋆
தருமம் உயர்ந்ததிதென்ன நின்றன⋆
தருமன் இரந்ததிசைந்து சென்றன⋆
சகடம் உடைந்து கலங்க வென்றன⋆
தமர்கள் அருந்துமருந்திதென்பன⋆
திருமகள் செய்ய கரங்கள் ஒன்றின⋆
திகழ் துளவுந்து மணம் கமழ்ந்தன⋆
செழுமணி கொண்ட சிலம்பிலங்கின⋆
சிலைதனில் அன்றோர் அணங்குமிழ்ந்தன⋆
அருமறையந்தம் அமர்ந்த பண்பின⋆
அயன் முடி தன்னில் அமர்ந்துயர்ந்தன⋆
அருள் தரவெண்ணி அயிந்தை வந்தன⋆
அடியவர் மெய்யர் மலர்ப் பதங்களே (1)

மகரம் வளரும் அளவில் பௌவம் அடைய உற்றலைத்தனை⋆
வடிவு கமடமென அமர்ந்து கிரிதனைத் தரித்தனை⋆
மலியும் அசுரன் உரம் இடந்து வசுதையைப் பெயர்த்தனை⋆
வலிகொள் அவுணன் உடல் பிளந்து மதலை மெய்க்குதித்தனை⋆
பகரும் உலகம் அடி அளந்து தமர்களுக்களித்தனை⋆
பரசு முனிவன் வடிவு கொண்டு பகைவரைத் துணித்தனை⋆

www.prapatti.com

பணிய விசைவில் தசமுகன் தன் முடிகள் பத்துதிர்த்தனை⋆
படியும் உருவில் வரு பிலம்ப அசுரனைத் தகர்த்தனை⋆
நகரிதுவரையென உகந்து வரை கரத்தெடுத்தனை⋆
நடமொடியலு பரியில் வந்து நலிவறுக்கவுற்றனை⋆
நலியும் வினைகள் செகுமருந்தின் நலமுறைந்த வெற்பினை⋆
நணுகு கருட நதி கிளர்ந்த புனல் உகப்பில் வைத்தனை⋆
அகர முதல வுரைகொள் மங்கை கணவனுக்களித்தனை⋆
அடையும் வினதை சிறுவனுய்ய அருள் கொடுத்துயர்த்தினை⋆
அடியும் அணையும் எனும் அனந்தன் அடிதொழக் களித்தனை⋆
அவனி மருவு திருவயிந்தை அடியவர்க்கு மெய்யனே (2)

புரம் உயர்த்த அசுரர்கட்கோர்⋆ புறம் உரைத்த பொய்யினான்⋆
வரை எடுத்து மழை தடுத்த⋆ மழையொடொத்த மெய்யினான்⋆
திரை நிரைத்த கடலெரித்த⋆ சிலைவளைத்த கையினான்⋆
அருள் கொடுத்து வினை தவிர்க்கும்⋆ அடியவர்க்கு மெய்யனே (3)

தேசொத்தார் இல்லை எனும்⋆ தெய்வ நாயகனார்⋆
வாசக் குழல் மாமலராள்⋆ மணவாளர்⋆
வாசித்தெழுமன்மதனார்⋆ மணல் தோப்பில்⋆
மாசிக் கடலாடி⋆ மகிழ்ந்து வருவாரே (4)

உருளும் சகடம் ஒன்றுதைத்தாய்⋆
உலகம் ஏழும் உண்டுமிழ்ந்தளந்தாய்⋆
பொருளும் அழலும் இறையாகப்
பூண்டேன்⋆ அடிமையினில் மீண்டேன்⋆
இருளும் மருளும் தரும் அந்நாள்⋆
எழிலார் ஆழி சங்கேந்தி⋆
அருளும் தெருளும் தர என்பால்⋆
அடியோர் மெய்ய! வந்தருளே (5)

வஞ்சனைசெய் பூதனையை மலியும் சாட்டை⋆
மல்லரையோர் மதகளிற்றை வானோர் அஞ்சும்⋆
கஞ்சனை முன் கடிந்தவனி பாரம் தீர்த்த⋆
காவலனே! கோவலனாய் நின்ற கோவே⋆

அஞ்சனமும் காயாவும் அனைய மேனி⋆
அடியவர்க்கு மெய்யனே அயிந்தை வாழும்⋆
மஞ்செனவே அருள் பொழியும் வள்ளலே⋆ நின்
வடிவழகு மறவாதார் பிறவாதாரே (6)

மையுமா கடலும் மயிலும் மாமழையும்⋆
மணிகளும் குவளையும் கொண்ட
மெய்யனே⋆ அடியோர் மெய்யனே விண்ணோர்
ஈசனே⋆ நீசனேன் அடைந்தேன்⋆
கையும் ஆழியுமாய்க் களிறு காத்தவனே⋆
காலனார் தமரெனைக் கவராது⋆
ஐயனே! வந்தன்றஞ்சல் என்றருள்⋆ தென்
அயிந்தை மாநகர் அமர்ந்தானே (7)

‡மஞ்சுலாவு சோலைசூழ் அயிந்தை மன்னு மன்னுசீர்⋆
வரையெடுத்து நிரையளித்த மாசில் வாசுதேவனே⋆
செஞ்சொலன்பர் சிந்தை கொண்டு தீதிலாத தூதனாய்த்⋆
தேருமூர்ந்து தேசுயர்ந்த செல்வ தெய்வ நாயக⋆
வெஞ்சொலாளர் கால தூதர் வீசு பாசம் வந்தென்மேல்⋆
விழுந்தழுந்தி யான் அயர்ந்து வீழ்வதற்கு முன்ன நீ⋆
அஞ்சல் அஞ்சல் அஞ்சல் என்றளிக்க வேண்டும் அச்சுதா⋆
அடியவர்க்கு மருளியக்கும் அடியவர்க்கு மெய்யனே (8)

‡பொருத்தம் பொருந்தலும்⋆
போகும் தவற்றுடன் பொய்ம் மதிமேல்⋆
விருத்தம் கலித்துறை⋆ மேவும்
அழல் மதம் வேறினியென்⋆
திருத்தமனத்தினில்⋆ சேரா
எமைத் தெய்வநாயக⋆ நின்
வருத்தம் பொறா அருளால்⋆
மன் அடைக்கலம் கொண்டருளே (9)

‡அந்தமில்சீர் அயிந்தைநகர் அமர்ந்த நாதன்⋆
அடியிணைமேல் அடி உரையால் ஐம்பதேத்திச்⋆



www.prapatti.com

சிந்தை கவர் பிராகிருதம் நூறு கூறிச்⋆
செழுந்தமிழ் மும்மணிக்கோவை செறியச் சேர்த்துப்⋆
பந்து கழல் அம்மானை ஊசல் ஏசல்⋆
பரவு நவமணிமாலை இவையும் சொன்னேன்⋆
முந்தை மறை மொழிய வழி மொழி நீயென்று⋆
முகுந்தன் அருள் தந்த பயன் பெற்றேன் நானே (10)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ அதிகாரசங்கிரகம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡பொய்கை முனி பூதத்தார் பேயாழ்வார்⋆ தண்
பொருநல்வரும் குருகேசன் விட்டுசித்தன்⋆
துய்ய குலசேகரன் நம் பாணநாதன்⋆
தொண்டரடிப்பொடி மழிசை வந்த சோதி⋆
வையமெல்லாம் மறைவிளங்க வாள்வேல் ஏந்தும்⋆
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடும்⋆
செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளியவோதித்⋆
தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே (1)

இன்பத்தில் இறைஞ்சுதலில் இசையும் பேற்றில்⋆
இகழாத பல்லுறவில் இராகமாற்றில்⋆
தன்பற்றில் வினை விலக்கில் தகவோக்கத்தில்⋆
தத்துவத்தை உணர்த்துதலில் தன்மையாக்கில்⋆
அன்பர்க்கே அவதரிக்கும் ஆயன் நிற்க⋆
அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு⋆
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்⋆
தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே (2)

‡என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கு⋆
யான் அடைவே அவர்குருக்கள் நிரை வணங்கிப்⋆
பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்⋆
பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி⋆
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார்⋆
நாதமுனி சடகோபன் சேனை நாதன்⋆

www.prapatti.com

இன்னமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு⋆
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே (3)

ஆரணநூல் வழிச் செவ்வை⋆ அழித்திடும் ஐதுகர்க்கு⋆ ஓர்
வாரணமாய்⋆ அவர் வாதக் கதலிகள் மாய்த்த பிரான்⋆
ஏரணி கீர்த்தி⋆ இராமாநுசமுனி இன்னுரைசேர்⋆
சீரணி சிந்தையினோம்⋆ சிந்தியோம் இனித் தீவினையே (4)

நீள வந்தின்று விதிவகையால்⋆ நினைவொன்றிய நாம்⋆
மீள வந்தின்னும் வினையுடம் பொன்றி⋆ விழுந்துழலாது⋆
ஆளவந்தார் என வென்று⋆ அருள் தந்து விளங்கிய சீர்⋆
ஆளவந்தார் அடியோம்⋆ படியோமினி அல்வழக்கே (5)

காளம் வலம்புரியன்ன⋆ நற்காதல் அடியவர்க்குத்⋆
தாளம் வழங்கித்⋆ தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல்⋆
மூளும் தவநெறி மூட்டிய⋆ நாதமுனி கழலே⋆
நாளும் தொழுதெழுவோம்⋆ நமக்கார் நிகர் நானிலத்தே (6)

‡ஆளும் அடைக்கலம் என்றெம்மை⋆ அம்புயத்தாள் கணவன்⋆
தாளிணை சேர்ந்து⋆ எமக்கும் அவை தந்த தகவுடையார்⋆
மூளும் இருட்கள் விள்ள⋆ முயன்றோதிய மூன்றின் உள்ளம்⋆
நாளும் உகக்கவிங்கே⋆ நமக்கோர் விதி வாய்க்கின்றதே (7)

‡திருவுடன் வந்த செழுமணிபோல்⋆ திருமால் இதயம்⋆
மருவிடம் என்ன மலரடி சூடும்⋆ வகைபெறுநாம்⋆
கருவுடன் வந்த கடு வினையாற்றில்⋆ விழுந்தொழுகாது⋆
அருவுடன் ஐந்தறிவார்⋆ அருள் செய்ய அமைந்தனரே (8)

அமையாவிவை எனும் ஆசையினால்⋆ அறு மூன்றுலகில்⋆
சுமையான கல்விகள் சூழவந்தாலும்⋆ தொகை இவை என்று⋆
இமையா இமையவர் ஏத்திய⋆ எட்டிரண்டெண்ணிய⋆ நம்
சமயாசிரியர்⋆ சதிர்க்கும் தனி நிலை தந்தனரே (9)

நிலை தந்த தாரகனாய்⋆ நியமிக்கும் இறைவனுமாய்⋆
இலதொன்றெனாவகை எல்லாம்⋆ தனதெனும் எந்தையுமாய்த்⋆

துலையொன்றிலையென நின்ற⋆ துழாய் முடியான் உடம்பாய்⋆
விலையின்றி நாம் அடியோம் என்னும்⋆ வேதியர்
மெய்ப்பொருளே (10)

பொருளொன்றென நின்ற⋆ பூமகள் நாதன் அவன் அடி சேர்ந்து⋆
அருள் ஒன்றும் அன்பன்⋆ அவன்கொள் உபாயம் அமைந்தபயன்⋆
மருளொன்றிய வினை வல் விலங்கென்று⋆ இவையைந்தறிவார்⋆
இருள் ஒன்றிலாவகை⋆ எம்மனம் தேறவியம்பினரே (11)

தேற வியம்பினர்⋆ சித்தும் அசித்தும் இறையும் என⋆
வேறுபடும் வியன் தத்துவ மூன்றும்⋆ வினையுடம்பில்⋆
கூறுபடும் கொடு மோகமும்⋆ தான் இறையாம் குறிப்பும்⋆
மாற நினைந்தருளால்⋆ மறை நூல் தந்த வாதியரே (12)

வாதியர் மன்னும் தருக்கச் செருக்கின்⋆ மறை குலையச்⋆
சாது சனங்கள் அடங்க நடுங்கத்⋆ தனித்தனியே⋆
ஆதியெனாவகை⋆ ஆரண தேசிகர் சாற்றினர்⋆ நம்
போதமரும் திருமாதுடன்⋆ நின்ற புராணனையே (13)

நின்ற புராணன் அடியிணை ஏந்தும்⋆ நெடும் பயனும்⋆
பொன்றுதலே நிலையென்றிடப்⋆ பொங்கும் பவக்கடலும்⋆
நன்றிது தீயதிதென்று⋆ நவின்றவர் நல் அருளால்⋆
வென்று புலன்களை⋆ வீடினை வேண்டும் பெரும் பயனே (14)

வேண்டும் பெரும் பயன்⋆ வீடென்றறிந்து விதி வகையால்⋆
நீண்டும் குறுகியும் நிற்கும்⋆ நிலைகளுக்கேற்கும் அன்பர்⋆
மூண்டொன்றில் மூல வினை மாற்றுதலில்⋆ முகுந்தன் அடி
பூண்டன்றி⋆ மற்றோர் புகலொன்றிலை என நின்றனரே (15)

நின்ற நிலைக்குற நிற்கும் கருமமும்⋆ நேர் மதியால்⋆
நன்றென நாடிய ஞானமும்⋆ நல்கும் உட்கண் உடையார்⋆
ஒன்றிய பத்தியும்⋆ ஒன்றுமிலா விரைவார்க்கருளால்⋆
அன்று பயன் தரும்⋆ ஆறும் அறிந்தவர் அந்தணரே (16)

அந்தணர் அந்தியர்⋆ எல்லையில் நின்ற அனைத்துலகும்⋆
நொந்தவரே முதலாக⋆ நுடங்கி அனன்னியராய்⋆
வந்தடையும் வகை⋆ வன் தகவேந்தி வருந்திய⋆ நம்
அந்தமில் ஆதியை⋆ அன்பர் அறிந்தறிவித்தனரே (17)

அறிவித்தனர் அன்பர்⋆ ஐயம் பறையும் உபாயமில்லாத்⋆
துறவித் துனியில்⋆ துணையாம் பரனை வரிக்கும் வகை⋆
உறவித்தனையின்றி⋆ ஒத்தார் என நின்ற உம்பரை நாம்⋆
பிறவித் துயர் செகுப்பீரென்று⋆ இரக்கும் பிழையறவே (18)

அறவே பரமென்று⋆ அடைக்கலம் வைத்தனர் அன்று நம்மைப்⋆
பெறவே கருதிப்⋆ பெரும் தகவுற்றபிரான் அடிக்கீழ்⋆
உறவே இவனுயிர் காக்கின்ற⋆ ஓருயிர் உண்மையை⋆ நீ
மறவேல் என⋆ நம்மறை முடி சூடிய மன்னவரே (19)

மன்னவர் விண்ணவர்⋆ வானோர் இறையொன்றும் வான் கருத்தோர்⋆
அன்னவர் வேள்வி⋆ அனைத்தும் முடித்தனர் அன்புடையார்க்கு⋆
என்ன வரம் தரவென்ற⋆ நம் அத்திகிரித் திருமால்⋆
முன்னம் வருந்தி⋆ அடைக்கலம் கொண்ட நம் முக்கியரே (20)

முக்கிய மந்திரம் காட்டிய⋆ மூன்றில் நிலையுடையார்⋆
தக்கவையன்றித்⋆ தகாதவையொன்றும் தமக்கிசையார்⋆
இக்கருமங்கள்⋆ எமக்குளவென்னும் இலக்கணத்தால்⋆
மிக்கவுணர்த்தியர்⋆ மேதினி மேவிய விண்ணவரே (21)

விண்ணவர் வேண்டி விலக்கின்றி மேவும்⋆ அடிமையெலாம்⋆
மண் உலகத்தில்⋆ மகிழ்ந்தடைகின்றனர்⋆ வண் துவரைக்
கண்ணன் அடைக்கலம் கொள்ளக்⋆ கடன்கள் கழற்றிய⋆ நம்
பண்ணமரும்⋆ தமிழ் வேதம் அறிந்த பகவர்களே (22)

வேதம் அறிந்த பகவர்⋆ வியக்க விளங்கிய சீர்⋆
நாதன் வகுத்த வகை பெறுநாம்⋆ அவன் நல் அடியார்க்கு⋆
ஆதரமிக்க அடிமை இசைந்து⋆ அழியா மறை நூல்⋆
நீதி நிறுத்த⋆ நிலை குலையாவகை நின்றனமே (23)

நின்றனம் அன்புடை வானோர்⋆ நிலையில் நிலமளந்தான்⋆
நன்றிது தீயதிதென்று⋆ நடத்திய நான் மறையால்⋆
இன்று நமக்கிரவாதலின்⋆ இம்மதியின் நிலவே⋆
அன்றி அடிக்கடி⋆ ஆரிருள் தீர்க்க அடியுளதே (24)

உளதான வல் வினைக்கு⋆ உள்ளம் வெருவி உலகளந்த⋆
வளர் தாமரையிணை⋆ வன் சரணாக வரித்தவர் தாம்⋆
களைதான் எனவெழும்⋆ கன்மம் துறப்பர் துறந்திடிலும்⋆
இளைதா நிலை செக⋆ எங்கள் பிரானருள் தேன் எழுமே (25)

‡தேனார் கமலத் திருமகள் நாதன்⋆ திகழ்ந்துறையும்⋆
வானாடுகந்தவர்⋆ வையத்திருப்பிடம்⋆ வன் தருமக்-
கானார் இமயமும்⋆ கங்கையும் காவிரியும் கடலும்⋆
நானா நகரமும்⋆ நாகமும் கூடிய நன்னிலமே (26)

நன்னிலமாம் அது நற்பகலாம் அது⋆ நன் நிமித்தம்⋆
என்னலுமாம் அது⋆ யாதானும் ஆமங்கடியவர்க்கு⋆
மின்னிலை மேனி விடும் பயணத்து⋆ விலக்கிலதோர்⋆
நன்னிலையாம் நடு நாடி வழிக்கு⋆ நடைபெறவே (27)

நடைபெற அங்கிப் பகல் ஒளிநாள்⋆ உத்தராயணம் ஆண்டு⋆
இடை வருகாற்றிரவி⋆ இரவின் பதி மின் வருணன்⋆
குடையுடை வானவர் கோமான்⋆ பிரசாபதி என்றிவரால்⋆
இடையிடை போகங்கள் எய்தி⋆ எழிற்பதம் ஏறுவரே (28)

ஏறி எழிற்பதம்⋆ எல்லா உயிர்க்கும் இதமுகக்கும்⋆
நாறு துழாய் முடி⋆ நாதனை நண்ணி அடிமையில் நம்⋆
கூறு கவர்ந்த⋆ குருக்கள் குழாங்கள் குரை கழற்கீழ்⋆
மாறுதல் இன்றி⋆ மகிழ்ந்தெழும் போகத்து மன்னுவமே (29)

‡மன்னும் அனைத்துறவாய்⋆ மருள் மாற்றருள் ஆழியுமாய்த்⋆
தன் நினைவால் அனைத்தும்⋆ தரித்தோங்கும் தனி இறையாய்⋆
இன் அமுதத்தமுதால்⋆ இரங்கும் திருநாரணனே⋆
மன்னியவன் சரண்⋆ மற்றோர் பற்றின்றி வரிப்பவர்க்கே (30)

வரிக்கின்றனன் பரன்⋆ யாவரை என்று மறையதனில்⋆
விரிக்கின்றதும் குறியொன்றால்⋆ வினையரை ஆதலின் நாம்⋆
உரைக்கின்ற நன்னெறி⋆ ஓரும் படிகளில் ஓர்ந்து⋆ உலகம்
தரிக்கின்ற தாரகனார்⋆ தகவால் தரிக்கின்றனமே (31)

தகவால் தரிக்கின்ற⋆ தன் அடியார்களைத் தன் திறத்தில்⋆
மிகவாதரம் செய்யும்⋆ மெய்யருள் வித்தகன் மெய்யுரையின்⋆
அகவாய் அறிந்தவர்⋆ ஆரண நீதி நெறி குலைதல்⋆
உகவாரென⋆ எங்கள் தேசிகர் உண்மை உரைத்தனரே (32)

உண்மை உரைக்கும் மறைகளில் ஓங்கிய⋆ உத்தமனார்⋆
வண்மை அளப்பரிதாதலின்⋆ வந்து கழல் பணிவார்⋆
தண்மை கிடக்கத்⋆ தரமளவென்ற வியப்பிலதாம்⋆
உண்மை உரைத்தனர்⋆ ஓரம் தவிர உயர்ந்தனரே (33)

உயர்ந்தனன் காவலன் அல்லார்க்கு⋆ உரிமை துறந்துயிராய்⋆
மயர்ந்தமை தீர்ந்து⋆ மற்றோர் வழியின்றி அடைக்கலமாய்ப்⋆
பயந்தவன் நாரணன்⋆ பாதங்கள் சேர்ந்து பழவடியார்⋆
நயந்த குற்றேவல் எல்லாம்⋆ நாடு நன் மனுவோதினமே (34)

ஓதுமிரண்டை இசைந்து⋆ அருளால் உதவும் திருமால்⋆
பாதம் இரண்டும் சரணெனப் பற்றி⋆ நம் பங்கயத்தாள்⋆
நாதனை நண்ணி⋆ நலந்திகழ் நாட்டில் அடிமையெல்லாம்⋆
கோதில் உணர்த்தியுடன்⋆ கொள்ளுமாறு குறித்தனமே (35)

குறிப்புடன் மேவும் தருமங்களின்றி⋆ அக்கோவலனார்⋆
வெறித்துளவக் கழல்⋆ மெய்யரணென்று விரைந்தடைந்து⋆
பிரித்த வினைத்திரள்⋆ பின் தொடராவகை அப்பெரியோர்⋆
மறிப்புடை மன்னருள் வாசகத்தால்⋆ மருளற்றனமே (36)

மருளற்ற தேசிகர்⋆ வான் உகப்பால் இந்த வையமெல்லாம்⋆
இருளற்றிறையவன்⋆ இணையடி பூண்டுயவெண்ணுதலால்⋆
தெருளற்ற செந்தொழில்⋆ செல்வம் பெருகிச் சிறந்தவர்பால்⋆
அருளூற்ற சிந்தையினால்⋆ அழியா விளக்கேற்றினரே (37)

ஏற்றி மனத்தெழில் ஞான விளக்கை⋆ இருள் அனைத்தும்⋆
மாற்றினவர்க்கொரு கைம்மாறு⋆ மாயனும் காணகில்லான்⋆
போற்றி உகப்பதும்⋆ புந்தியில் கொள்வதும் பொங்கு புகழ்⋆
சாற்றி வளர்ப்பதும்⋆ சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே (38)

முன் பெற்ற ஞானமும்⋆ மோகம் துறக்கலும் மூன்றுரையில்⋆
தன் பற்ற தன்மையும்⋆ தாழ்ந்தவர்க்கீயும் தனித்தகவும்⋆
மன் பற்றி நின்ற வகை⋆ உரைக்கின்ற மறையவர்பால்⋆
சின்பற்றி என்பயன்⋆ சீர் அறிவோர்க்கிவை செப்பினமே (39)

‡செப்பச் செவிக்கமுதென்னத் திகழும்⋆ செழும் குணத்துத்⋆
தப்பற்றவருக்குத்⋆ தாமே உகந்து தரும் தகவால்⋆
ஓப்பற்ற நான்மறை⋆ உள்ளக்கருத்தில் உறைத்துரைத்த⋆
முப்பத்திரண்டிவை⋆ முத்தமிழ் சேர்ந்த மொழித்திருவே (40)

(திருவுடன் வந்த செழுமணி போல்⋆ திருமாலிதயம்⋆
மருவிடம் என்ன மலரடி சூடும்⋆ வகைபெறுநாம்⋆
கருவுடன் வந்த கடுவினையாற்றில்⋆ விழுந்தொழுகாது⋆
அருவுடன் ஐந்தறிவார்⋆ அருள் செய்ய அமைந்தனரே)

‡புருடன் மணிவரமாகப் பொன்றா மூலப்
பிரகிருதி மறுவாக⋆ மான் தண்டாகத்⋆
தெருள் மருள் வாளுறையாக ஆங்காரங்கள்
சார்ங்கம் சங்காக⋆ மனம் திகிரியாக⋆
இருடிகங்கள் ஈரைந்தும் சரங்களாக⋆
இருபூத மாலை வனமாலையாகக்⋆
கருடன் உருவாம் மறையின் பொருளாம் கண்ணன்⋆
கரிகிரி மேல் நின்றனைத்தும் காக்கின்றானே (41)

‡ஆராதவருள் அமுதம் பொதிந்த கோயில்⋆
அம்புயத்தோன் அயோத்தி மன்னற்களித்த கோயில்⋆
தோலாத தனிவீரன் தொழுத கோயில்⋆
துணையான வீடணற்குத் துணையாம் கோயில்⋆

சேராத பயனெல்லாம் சேர்க்கும் கோயில்⋆
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயில்⋆
தீராத வினையனைத்தும் தீர்க்கும் கோயில்⋆
திருவரங்கம் எனத் திகழும் கோயில் தானே (42)

‡கண்ணன் அடியிணை எமக்குக் காட்டும் வெற்பு⋆
கடு வினையர் இரு வினையும் கடியும் வெற்பு⋆
திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு⋆
தெளிந்த பெரும் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு⋆
புண்ணியத்தின் புகல் இதெனப் புகழும் வெற்பு⋆
பொன்னுலகில் போகமெல்லாம் புணர்க்கும் வெற்பு⋆
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு⋆
வேங்கட வெற்பென விளங்கும் வேத வெற்பே (43)

‡உத்தமவமர்த்தலம் அமைத்ததோர்
எழில் தனு⋆ உய்த்த கணையால்⋆
அத்திரவரக்கன் முடி பத்தும்
ஒரு கொத்தென⋆ உதிர்த்த திறலோன்⋆
மத்துறு மிகுத்த தயிர் மொய்த்த வெணெய்
வைத்ததுணும்⋆ அத்தனிடமாம்⋆
அத்திகிரி பத்தர் வினை தொத்தற
அறுக்கும்⋆ அணி அத்திகிரியே (44)

எட்டு மா மூர்த்தியெண் கணன்⋆ எண் திக்-
கெட்டிறை எண் பிரகிருதி⋆
எட்டுமா வரைகள் ஈன்றவெண் குணத்தோன்⋆
எட்டெணுமெண் குணமதியோர்க்கு⋆
எட்டு மா மலர் எண் சித்தி எண் பத்தி⋆
எட்டு யோகாங்கம் எண் செல்வம்⋆
எட்டு மா குணம் எட்டெட்டெணும் கலை⋆
எட்டிரத மேலதுவும் எட்டினவே (45)

ஒண்டொடியாள் திருமகளும் தானுமாகி⋆
ஒருநினைவால் ஈன்ற உயிரெல்லாம் உய்ய⋆

வண் துவரை நகர் வாழ வசுதேவற்காய்⋆
    மன்னவற்குத் தேர்ப் பாகனாகி நின்ற⋆
தண் துளவ மலர் மார்பன் தானே சொன்ன⋆
    தனித்தருமம் தான் எமக்காய்த் தன்னையென்றும்⋆
கண்டு களித்தடி சூட விலக்காய் நின்ற⋆
    கண்புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே (46)

மூண்டாலும் அரியதலில் முயல வேண்டா⋆
    முன்னம் அதில் ஆசைதனை விடுகை திண்மை⋆
வேண்டாது சரணநெறி வேறோர் கூட்டு⋆
    வேண்டில் அயன் அத்திரம் போல் வெள்கிநிற்கும்⋆
நீண்டாகுநிறை மதியோர் நெறியில் கூடா⋆
    நின் தனிமை துணையாக என்தன் பாதம்
பூண்டால்⋆ உன் பிழைகளெல்லாம் பொறுப்பனென்ற⋆
    புண்ணியனார் புகழ் அனைத்தும் புகழுவோமே (47)

சாதனமும் நற்பயனும் நானேயாவன்⋆
    சாதகனும் என் வசமாய் என்னைப்பற்றும்⋆
சாதனமும் சரணநெறியன்றுமக்குச்⋆
    சாதனங்கள் இந்நிலைக்கோர் இடையில் நில்லா⋆
வேதனை சேர் வேறங்கமிதனில் வேண்டா⋆
    வேறெல்லாம் நிற்கு நிலை நானே நிற்பன்⋆
தூதனுமாம் நாதனுமாம் என்னைப் பற்றிச்⋆
    சோகம் தீரென உரைத்தான் சூழ்கின்றானே (48)

தன் நினைவில் விலக்கின்றித் தன்னை நண்ணார்⋆
    நினைவனைத்தும் தான் விளைத்தும் விலக்கு நாதன்⋆
என் நினைவை இப்பவத்தில் இன்று மாற்றி⋆
    இணையடிக்கீழ் அடைக்கலம் என்றெம்மைவைத்து⋆
முன் நினைவால் யாம் முயன்ற வினையால் வந்த⋆
    முனிவயர்ந்து முத்திதர முன்னே தோன்றி⋆
நன் நினைவால் நாம் இசையும் காலம்⋆ இன்றோ
    நாளையோ என்று நகை செய்கின்றானே (49)

‡பாட்டுக்குரிய பழையவர் மூவரைப்⋆ பண்டொருகால்⋆
மாட்டுக்கருள் தரு மாயன்⋆ மலிந்து வருத்துதலால்⋆
நாட்டுக்கிருள் செக⋆ நான்மறை அந்தி நடை விளங்க⋆
வீட்டுக்கிடைகழிக்கே⋆ வெளிக்காட்டும் அம்மெய்விளக்கே (50)

‡உறு சகடம் உடையவொரு காலுற்றுணர்ந்தன⋆
உடன் மருதம் ஒடிய ஒரு போதில் தவழ்ந்தன⋆
உறி தடவும் அளவில் உரலோடுற்று நின்றன⋆
உறுநெறியோர் தருமன் விடு தூதுக்குகந்தன⋆
மறநெறியர் முறிய பிருதானத்து வந்தன⋆
மலர்மகள் கை வருட மலர் போதில் சிவந்தன⋆
மறுபிறவி அறுமுனிவர் மாலுக்கிசைந்தன⋆
மனு முறையில் வருவதோர் விமானத்துறைந்தன⋆
அறமுடைய விசயன் அமர் தேரில் திகழ்ந்தன⋆
அடலுரக படமடிய ஆடிக் கடிந்தன⋆
அறு சமயம் அறிவரிய தானத்தமர்ந்தன⋆
அணி குருகை நகர் முனிவர் நாவுக்கமைந்தன⋆
வெறியுடைய துளவமலர் வீறுக்கணிந்தன⋆
விழுகரியோர் குமரன் என மேவிச் சிறந்தன⋆
விறலசுரர் படையடைய வீயத் துரந்தன⋆
விடலரிய பெரிய பெருமாள் மெய்ப் பதங்களே (51)

மறை உரைக்கும் பொருளெல்லாம் மெய்யென்றோர்வார்⋆
மன்னிய கூர்மதி உடையார் வண் குணத்தில்⋆
குறை உரைக்க நினைவில்லார் குருக்கள் தம்பால்⋆
கோதற்ற மனம் பெற்றார் கொள்வார் நன்மை⋆
சிறை வளர்க்கும் சில மாந்தர் சங்கேதத்தால்⋆
சிதையாத திண் மதியோர் தெரிந்ததோரார்⋆
பொறை நிலத்தின் மிகும் புனிதர் காட்டும்⋆ எங்கள்
பொன்றாத நன்னெறியில் புகுதுவாரே (52)

இது வழியின் அமுதென்றவர்⋆ இன்புலன் வேறிடுவார்⋆
இதுவழியாம் அலவென்றறிவார்⋆ எங்கள் தேசிகரே⋆

www.prapatti.com

இதுவழி எய்துகவென்று⋆ உகப்பால் எம் பிழை பொறுப்பார்⋆
இது வழியா மறையோர் அருளால்⋆ யாம் இசைந்தனமே (53)

எட்டுமிரண்டும் அறியாத எம்மை⋆ இவை அறிவித்து⋆
எட்டவொண்ணாத இடம் தரும்⋆ எங்கள் அம்மாதவனார்⋆
முட்ட வினைத்திரள் மாள⋆ முயன்றிடும் அஞ்சலென்றார்⋆
கட்டெழில் வாசகத்தால்⋆ கலங்கா நிலை பெற்றனமே (54)

‡வானுள் அமர்ந்தவர்க்கும்⋆ வருந்த வரு நிலைகள்⋆
தான் உளனாய் உகக்கும்⋆ தரம் இங்கு நமக்குளதே⋆
கூனுள நெஞ்சுகளால்⋆ குற்றமெண்ணி இகழ்ந்திடினும்⋆
தேனுள பாத மலர்த்⋆ திருமாலுக்குத் தித்திக்குமே (55)

‡வெள்ளைப் பரிமுகர் தேசிகராய்⋆ விரகால் அடியோம்⋆
உள்ளத்தெழுதியதோலையில் இட்டனம்⋆ யாம் இதற்கென்⋆
கொள்ளத் துணியினும் கோதென்றிகழினும்⋆ கூர் மதியீர்⋆
எள்ளத்தனையுகவாதிகழாது⋆ எம்மெழில் மதியே (56)

॥ *சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்* ॥

www.prapatti.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ॥ ப்ரபந்தசாரம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

ஆரண நான்கின் பொருளை ஆழ்வார்கள் ஆய்ந்தடைவே
அன்புடனே அம்புவியோர் அனைவரும் ஈடேறவென்று
நாரணனார் தாள்களிலே நாலாயிரம் தமிழால்
நண்ணியுரை செய்தவற்றை நாடி வகை தொகை செய்தாய்
பூரண மாஞானியர் சேர் பொங்கு புகழ்த் தூப்புல் வரும்
புனிதனென்றும் பிள்ளையென்றும் புவியோர் புகழ் வேங்கடவா
தாரணியோர் இங்குகக்கச் சாற்றிய நல் ப்ரபந்தசாரம்
தனை உரைத்து வாழுமனம் தந்தருளாய் என்றனக்கே

ஆதிமறையோதி மகிழ் அயக்கிரிவர் தம்மருளால்
அன்புடனே தூப்புல் நகர் அவதரித்தே இங்கு வந்த
வாதியரை வென்று வந்து வன்புவிமேல் எதிராசர்
வாழ்வுறு நல் தரிசனத்தை வண்மையுடனே வளர்த்து
நீதிநெறி தவறாமல் நிறுத்தியிடும் வேங்கடவா
நேசமுடன் ஆழ்வார்கள் நிலைகளையெல்லாம் உணர்ந்து
சாதுசனம் வாழவென்று சாற்றிய நல் ப்ரபந்தசாரம்
தனை உரைத்து வாழுமனம் தந்தருளாய் என்றனக்கே

‡ஆழ்வார்கள் அவதரித்த நாளூர் திங்கள்⋆
அடைவு திருநாமங்கள் அவர் தாம் செய்த⋆
வாழ்வான திருமொழிகள் அவற்றுள் பாட்டின்⋆
வகையான தொகை இலக்கம் மற்றுமெல்லாம்⋆
வீழ்வாக மேதினிமேல் விளங்க நாளும்⋆
விரித்துரைக்கும் கருத்துடனே மிக்கோர் தங்கள்⋆

www.prapatti.com

நீள் பாதம் நிரந்தரமும் தொழுது வாழ்த்தும்⋆
நேசமுடன் அடியேன் தன் நெஞ்சு தானே (1)

அருள் மிகுத்த ஒரு வடிவாய்க் கச்சிதன்னில்⋆
ஐப்பசீ மாதத் திருவோணத்து நாளில்⋆
பொருள் மிகுத்த மறை விளங்கப் புவியோர் உய்யப்⋆
பொய்கைதனில் வந்துதித்த புனிதா! முன்னாள்⋆
இருளதனில் தண் கோவல் இடைகழிச் சென்று⋆
இருவருடன் நிற்கவும் மால் இடை நெருக்கத்⋆
திருவிளக்காம் எனும் வையந்தகளி நூறும்⋆
செழும் பொருளா எனக்கருள் செய் திருந்த நீயே (2)

கடன்மல்லைக் காவலனே! பூதவேந்தே⋆
காசினிமேல் ஐப்பசியில் அவிட்ட நாள் வந்து⋆
இடர்கடியும் தண் கோவல் இடைகழிச் சென்று⋆
இணையில்லா மூவருமாய் இசைந்தே நிற்க⋆
நடுவில் இவர் ஒருவரும் என்றறியாவண்ணம்⋆
நள்ளிருளில் மால் நெருக்க நந்தா ஞானச்-
சுடர் விளக்கேற்றிய⋆ அன்பே தகளியான
தொடைனூறும்⋆ எனக்கருள் செய் துலங்க நீயே (3)

மாமயிலைப் பதியதனில் துலா மாதத்தில்⋆
வரும் சதயத்தவதரித்துக் கோவலூரில்⋆
தூமுனிவர் இருவருடன் துலங்க நின்று⋆
துன்னிய பேரிருள் நீங்கச் சோதி தோன்றச்⋆
சேமமுடன் நெடுமாலைக் காணப்புக்குத்⋆
திருக்கண்டேன் என உரைத்த தேவே⋆ உன் தன்
பாமருவு தமிழ்மாலை நூறு பாட்டும்⋆
பழவடியேனுக்கருள் செய் பரம நீயே (4)

தைம்மகத்தில் வரும் மழிசைப்பரனே!⋆ மற்றைச்
சமயங்கள் பல தெரிந்து⋆ மாயோன் அல்லால்
தெய்வம் மற்றில்லை என உரைத்த⋆ வேதச்
செழும் பொருள் நான்முகன் தொண்ணூற்றாறு பாட்டும்⋆

மெய்ம்மிகுத்த திருச்சந்தவிருத்தப் பாடல்⋆
    விளங்கிய நூற்றிருபதும் தப்பாமல்⋆ மெய்யே
வையகத்தில் மறவாமல் உரைத்து வாழும்
    வகை⋆ அடியேனுக்கருள் செய் மகிழ்ந்து நீயே (5)

‡முன் உரைத்த திருவிருத்தம் நூறு பாட்டும்⋆
    முறையில் வரும் ஆசிரியம் ஏழு பாட்டும்⋆
மன்னிய நற்பொருள் பெரிய திருவந்தாதி⋆
    மறவாதபடி எண்பத்தேழு பாட்டும்⋆
பின் உரைத்ததோர் திருவாய்மொழி⋆ எப்போதும்
    பிழையற ஆயிரத்தொரு நூற்றிரண்டு பாட்டும்⋆
இந்நிலத்தில் வைகாசி விசாகம் தன்னில்⋆
    எழில் குருகை வருமாறா! இரங்கு நீயே (6)

தேறிய மாஞானமுடன் திருக்கோளூரில்⋆
    சித்திரையில் சித்திரைநாள் வந்து தோன்றி⋆
ஆறிய நல் அன்புடனே குருகூர் நம்பிக்கு⋆
    அனவரதம் அந்தரங்க அடிமை செய்து⋆
மாறனை அல்லால் என்று மறந்தும்⋆ தேவு
    மற்றறியேன் எனும் மதுரகவியே⋆ நீ முன்
கூறிய கண்ணிநுண் சிறுத்தாம்பதனில் பாட்டுக்⋆
    குலவு பதினொன்றும் எனக்குதவு நீயே (7)

பொன் புரையும் வேல் குலசேகரனே!⋆ மாசிப்
    புனர்பூசத்தெழில் வஞ்சிக் களத்துத் தோன்றி⋆
அன்புடனே நம்பெருமாள் செம்பொற்கோயில்⋆
    அனைத்துலகின் பெருவாழ்வும் அடியார் தங்கள்⋆
இன்ப மிகு பெருங்குழுவும் காண⋆ மண்மேல்
    இருளிரிய என்றெடுத்த இசையில் சொன்ன⋆
நன் பொருள் சேர் திருமொழி நூற்றைந்து பாட்டும்⋆
    நன்றாக எனக்கருள் செய் நல்கி நீயே (8)

பேர் அணிந்த வில்லிபுத்தூர் ஆனி தன்னில்⋆
    பெருஞ்சோதி தனில் தோன்றும் பெருமானே!⋆ முன்

சீர் அணிந்த பாண்டியன் தன் நெஞ்சு தன்னில்⋆
    தியக்கற மால் பரத்துவத்தைத் திறமாச் செப்பி⋆
வாரணமேல் மதுரை வலம் வரவே⋆ வானில்
    மால் கருட வாகனனாய்த் தோன்ற வாழ்த்தும்⋆
ஏரணி பல்லாண்டு முதல் பாட்டு⋆ நானூற்று
    எழுபத்தொன்றிரண்டும் எனக்குதவு நீயே (9)

‡வேயர் புகழ் வில்லிபுத்தூர் ஆடிப்பூரம்⋆
    மேன்மேலும் மிக விளங்க விட்டுசித்தன்⋆
தூய திருமகளாய் வந்தரங்கனார்க்குத்⋆
    துழாய் மாலை முடிசூடிக் கொடுத்த மாதே⋆
நேயமுடன் திருப்பாவைப் பாட்டாறைந்தும்⋆
    நீ உரைத்த தையொரு திங்கள் பாமாலை⋆
ஆய புகழ் நூறுடன் நாற்பத்து மூன்றும்⋆
    அன்புடனே அடியேனுக்கருள் செய் நீயே (10)

மன்னு மதிள் திருமண்டங்குடி தான் வாழ⋆
    மார்கழி மாதக் கேட்டை நாளில் வந்து⋆
துன்னு புகழ்த் தொண்டரடிப்பொடியே!⋆ நீ முன்
    துழாய் மாலை பணியடிமை செய்து நாளும்⋆
தென்னரங்க மணவாளற்கன்பு மிக்குச்
    செப்பிய⋆ நல் திருமாலை நாற்பத்தைந்தும்⋆
பன்னிய நல் திருப்பள்ளியெழுச்சி பத்தும்⋆
    பழவடியேனுக்கருள் செய் பரிந்து நீயே (11)

உலகறிய மலி புகழ்க் கார்த்திகை மாதத்தில்⋆
    உரோகிணி நாள் உறந்தை வளம் பதியில் தோன்றித்⋆
தலம் அளந்த தென்னரங்கர் பால்⋆ உலோக
    சாரங்க மாமுனி தோள் தனிலே வந்து⋆
பலமறையின் பொருளால் பாண் பெருமாளே!⋆ நீ
    பாதாதி கேசமதாய்ப் பாடித் தந்த⋆
சொலவமலனாதிபிரான் பத்துப் பாட்டும்⋆
    சோராமல் எனக்கருள் செய் துலங்க நீயே (12)


www.prapatti.com

‡அறிவு தரும் பெரிய திருமொழி தப்பாமல்⋆
ஆயிரத்தோடெண்பத்துநாலு பாட்டும்⋆
குறியதொரு தாண்டகம் நாலைந்து⋆ ஆறைந்தும்
குலா நெடுந்தாண்டகம் எழுகூற்றிருக்கை ஒன்றும்⋆
சிறிய மடல் பாட்டு முப்பத்தெட்டிரண்டும்⋆
சீர் பெரிய மடல் தனில் பாட்டெழுபத்தெட்டும்⋆
இறையவனே! கார்த்திகையில் கார்த்திகை நாள்⋆
எழில் குறையல் வரு கலியா இரங்கு நீயே (13)

‡தேசமெலாம் உகந்திடவே பெரும்பூதூரில்⋆
சித்திரையில் ஆதிரைநாள் வந்து தோன்றிக்⋆
காசினிமேல் வாதியரை வென்று⋆ அரங்கர்
கதியாக வாழ்ந்தருளும் எதிராசா!⋆ முன்
பூசுரர்கோன் திருவரங்கத்தமுதனார்⋆ உன்
பொன்னடிமேல் அந்தாதியாகப் போற்றிப்
பேசிய⋆ நற்கலித்துறை நூற்றெட்டுப் பாட்டும்⋆
பிழை அறவே எனக்கருள் செய் பேணி நீயே (14)

எண்ணின் முதலாழ்வார்கள் மூன்று நூறும்⋆
எழில் மழிசைப்பிரான் இருநூற்றொரு பத்தாறும்⋆
உண்மைமிகு மாறன் மறை ஆயிரத்தோ-
டுற்ற⋆ இருநூற்றுத் தொண்ணூறுமாறும்⋆
வண்மையுடை மதுரகவி பத்தும் ஒன்றும்⋆
வஞ்சியர்கோன் நூற்றைந்தும்⋆ பட்டநாதன்
பண்ணியல் நானூற்றேழு பத்து மூன்றும்⋆
பார்க்கோதை நூற்றேழு பத்து மூன்றே (15)

‡பத்தரடிப்பொடி பாடல் ஐம்பத்தைந்தும்⋆
பாணர் புகழ் பத்துடனே பரகாலன் சொல்⋆
அத்தன் உயர் வேங்கடமாற்காயிரத்தோ
டான⋆ இருநூற்றோர் ஐம்பத்து மூன்றும்⋆
முத்தி தரும் எதிராசர் பொன்னடிக்கே
மொழிந்த⋆ அமுதர் பாடல் நூறும் எட்டும்⋆

எத்திசையும் வாழ இவர் பாடி வைத்த
இவை⋆ நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே (16)

‡வையகமெண் பொய்கை பூதம் பேயாழ்வார்⋆
மழிசையர்கோன் மகிழ் மாறன் மதுரகவி⋆
பொய்யில் புகழ்க் கோழியர்கோன் விட்டுசித்தன்⋆
பூங்கோதை தொண்டரடிப்பொடி பாணாழ்வார்⋆
ஐயன் அருள் கலியன் எதிராசர் தம்மோடு⋆
ஆறிருவர் ஓரொருவர் அவர் தாம் செய்த⋆
துய்ய தமிழ் இருபத்து நான்கின் பாட்டின்
தொகை⋆ நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே (17)

‡அந்தமிலா ஆரணங்கள் நாலாகி நின்ற⋆
அதன் கருத்தை ஆழ்வார்கள் ஆய்ந்தெடுத்துச்⋆
செந்தமிழால் அருள் செய்த வகை தொகையும்⋆
சிந்தாமல் உலகங்கள் வாழவென்று⋆
சந்த மிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும்⋆
வேதாந்தகுரு மொழிந்த ப்ரபந்தசாரம்⋆
சிந்தையினால் அனு தினமும் சிந்திப்போர்க்குச்⋆
சேமமதாம் திருமால் தன் கருணை யாலே (18)

‖ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ॥ பிள்ளையந்தாதி ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

சீரார் தூப்புல் பிள்ளை அந்தாதியென்று செழுந்தமிழால்
நேராக வேதாந்த தேசிகர் தாளிணைக்கீழ் மொழிந்தான்
ஏரார் மறைப்பொருள் எல்லாம் எடுத்திவ்வுலகுய்யவே
சீராகிய வரதாரியன் பாதம் துணை நமக்கே

‡மாமலர் மன்னிய மங்கை⋆ மகிழ்ந்துறை மார்பினன் தாள்⋆
தூமலர் சூடிய தொல்லருள்⋆ மாறன் துணை அடிக்கீழ்
வாழ்வை உகக்கும்⋆ இராமானுசமுனி வண்மை போற்றும்
சீர்மையன்⋆ எங்கள் தூப்புல் பிள்ளை பாதம் என் சென்னியதே (1)

சென்னி வணங்கச்⋆ சிறு பனி சோரவெங்கண் இணைகள்⋆
வெந்நரகங்களும் வீய வியன் கதி இன்பமேவ⋆
துன்னு புகழுடைத் தூப்புல் துரந்தரன் தூமலர்த் தாள்
மன்னிய⋆ நாள்களும் ஆகுங்கொல்⋆ மாநிலத்தீர் நமக்கே (2)

மாநிலத்தோதிய⋆ மாமறை மன்னிய நற்கலைகள்⋆
ஆனவை செய்யும் அரும் பொருள் அத்தனையே அருளும்⋆
தூநெறி காட்டும் இராமானுசமுனித் தோத்திரம் செய்⋆
ஊனமில் தூப்புல் அய்யன்⋆ ஓர் புகழன்றி உய்வில்லையே (3)

உய்யும் வகை இல்லை⋆ உத்தரவேதியுள் வந்துதித்த⋆
செய்யவள் மேவிய சீர் அருளாளரைச்⋆ சிந்தை செய்யும்
மெய்யவன் எந்தை⋆ இராமானுசன் அருள் மேவி வாழும்
ஐயன்⋆ இலங்கு தூப்புல் பிள்ளை ஆய்ந்த பொருளன்றியே (4)

www.prapatti.com

அன்றிவ்வுலகினை ஆக்கி⋆ அரும் பொருள் நூல் விரித்து⋆
நின்று தன் நீள் புகழ் வேங்கட மாமலை மேவி⋆ பின்னும்
வென்றிப் புகழ் திருவேங்கடநாதன் எனும் குருவாய்⋆
நின்று நிகழ்ந்து⋆ மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே (5)

வித்தகன் வேதியன்⋆ வேதாந்த தேசிகன் எங்கள் தூப்புல்⋆
மெய்த்தவன் உத்தமன் வேங்கடநாதன் வியன் கலைகள்⋆
மொய்த்திடு நாவின் முழக்கொடு வாதியர் மூலமறக்⋆
கைத்தவன் என்றுரைத்தேன்⋆ கண்டிலேன் என் கடுவினையே (6)

வினைகாள் உமக்கு⋆ இனி வேறோரிடம் தேடவேண்டும்⋆ எனைச்-
சினமேவி முன் போல் சிதைக்கும் வகை இங்கரிது கண்டீர்⋆
எனெனில் இராமானுசமுனி இன்னுரை சேரும்⋆ தூப்புல்
புனிதன்⋆ என் புந்தி புகுந்து திகழ்ந்து பொருந்தினரே (7)

பொருந்திப் புவிதனில்⋆ பொய் வாழ்க்கை பூண்கின்ற பூரியர்காள்⋆
இருந்து நரகின் இடர் கெடும் ஆற்றை அறிகின்றிலீர்⋆
பொருந்தும் பொருளொன்று கேளீர்⋆ பொங்கும் இவ்விடர்க் கடற்கு
வருந்தாது⋆ தூப்புல் மாபூருடன் பாதம் வணங்குமினே (8)

வணக்கம் ஒடுக்கம்⋆ வழக்கம் ஒழுக்கம் இரக்கம் சேரும்⋆
இணக்கம் உறக்கம் இழுக்கும் அழுக்கும் இகந்து நிற்கும்⋆
குணக்குலம் ஓங்கும் இராமானுசன் குணம் கூறும்⋆ தூப்புல்
அணுக்கனைப் பிள்ளைதனை⋆ அரணாக அடைபவர்க்கே (9)

அடைபவர் தீவினை மாற்றி⋆ அருள் தரும் தூப்புல் ஐயா⋆
இடர் தரும் இப்பிறவிக் கடல் தன்னில் அமிழ்ந்த என்னைக்⋆
கடையறப் பாசம் கழற்றி நின் தாளிணை காணும் வண்ணம்⋆
உடையவனே! அருளாய்⋆ உணர்ந்தார் தங்கள் கற்பகமே (10)

கற்பகமே என்று⋆ காசினியோரைக் கதிக்க மாட்டேன்⋆
வெற்பிடையே நின்று வெந்தவத் தீயிலும் வேவமாட்டேன்⋆
பற்பல கலைவல்ல பாவலனே பத்தர் ஏத்தும் தூப்புல்⋆
அற்புதனே அருளாய்⋆ அடியேனுக்கரும் பொருளே (11)

www.prapatti.com

பொருளானதொன்றும்⋆ என்னில் பொருந்தாததும் அன்றி அந்தோ⋆
மருளே மிகுத்து மறையவர் நல்வழி மாற்றி நின்றேன்⋆
தெருளார் மறைமுடித் தேசிகனே⋆ எங்கள் தூப்புல் தேவே!
அருளாய்⋆ இனி எனக்குன் அருளே அன்றி ஆறில்லையே (12)

ஆறாகவெண்ணும்⋆ அருங்கருமம் ஞானம் காதல் கொண்டு⋆
வேறாக நிற்கும் விரகெனக்கில்லை விரத்தி இல்லை⋆
தேறாது திண்மதி சீரார் கதியிலும் செம்பொன் மேனி⋆
மாறாத தூப்புல் மாலே!⋆ மறவேன் இனி நின் பதமே (13)

நின் பதம் தன்னிலும்⋆ நேரே எனக்கில்லை அன்பு கண்டாய்⋆
நின் பதம் ஒன்றியவன் பரிலும் நேசமில்லை அந்தோ⋆
என் படி கண்டினி என்பயன் ஏதமில் தூப்புல் எந்தாய்!⋆
உன் படியே அருளாய்⋆ உதவாய் எனக்குன்னருளே (14)

உன்னருள் அன்றி⋆ எனக்கொரு நற்றுணை இன்மையினால்⋆
என்னிரு வல்வினை நீயே விலக்கி இதம் கருதி⋆
மன்னிய நல் திருமந்திரம் ஓதும் பொருள் நிலையே⋆
பொன் அருளால் அருளாய்⋆ புகழ் தூப்புல் குலவிளக்கே (15)

விளக்காகி⋆ வேங்கட வெற்பினில் வாழும் விரை மலராள்⋆
வளக்காதல் கொண்டுறை மார்பன் திறத்தும் உனதடியார்⋆
துளக்காதல் இல்லவர் தங்கள் திறத்திலும் தூய்மை எண்ணிக்⋆
களக்காதல் செய்யும் நிலை கடியாய்⋆ தூப்புல் காவலனே (16)

‡காவலர் எங்கள்⋆ கிடாம்பிக் குலபதி அப்புளார் தம்⋆
தேமலர்ச் சேவடி சேர்ந்து பணிந்து⋆ அவர் தம் அருளால்
நாவலரும் தென் வடமொழி நற்பொருள் பெற்ற⋆ நம்பி
காவல தூப்புல் குலத்தரசே!⋆ எம்மைக் காத்தருளே (17)

அருள் தரும் ஆரண தேசிகனே!⋆ எங்கள் தூப்புல் தேவே⋆
வருகவி தார்க்கிகசிங்கமே!⋆ வாதியர் வாழ்வறுத்தாய்⋆
இரு கையும் கூப்பி உரைக்கும் இவ்விண்ணப்பம் ஒன்று கேளாய்⋆
உருவவெனக்கருளாய்⋆ எண்ணும் உள்ளம் உன் தொண்டரையே (18)

‡தொண்டர் உகக்கும் துணையடி வாழி!⋆ நின் தூமுறுவல்
கொண்ட முகம் வாழி!⋆ வாழி வியாக்கியா முத்திரைக்கை⋆
வண் திருநாமமும் வாழி⋆ மணிவட முப்புரி நூல்
கொண்டசீர்த் தூப்புல் குலமணியே!⋆ வாழி நின் வடிவே (19)

‡வடிவழகார்ந்த⋆ வண் தூப்புல் வள்ளல் மென்மலர் அடிமேல்⋆
அடியவர் ஓத அந்தாதி இருபதும் ஆய்ந்துரைத்தேன்⋆
திடமுடன் ஈதைத் தினந்தொறும் ஆதரித்தோதும் அன்பர்⋆
முடியிடை நேர்படும்⋆ தூப்புல் அம்மான் பத மாமலரே (20)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சாற்றுமுறை ॥

ஸர்வதே3ஶத3ஶாகாலேஷ்வவ்யாஹதபராக்ரமா ।
ராமாநுஜார்யதி3வ்யாஜ்ஞா வர்த4தாமபி4வர்த4தாம் ॥

ராமாநுஜார்யதி3வ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா ।
தி3க3ந்தவ்யாபிநீ பூ4யாத்ஸா ஹி லோகஹிதைஷிணீ ॥

ஶ்ரீமந் ஶ்ரீரங்க3ஶ்ரியமநுபத்3ரவாமநுதி3நம் ஸம்வர்த4ய ।
ஶ்ரீமந் ஶ்ரீரங்க3ஶ்ரியமநுபத்3ரவாமநுதி3நம் ஸம்வர்த4ய ॥

நமோ ராமாநுஜார்யாய வேத3ாந்தார்த2ப்ரத3ாயிநே ।
ஆத்ரேயபத்3மநாப4ார்யஸுதாய கு3ணஶாலிநே ॥

ராமாநுஜத3யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்3யபூ4ஷணம் ।
ஶ்ரீமத்3வேங்கடநாத2ார்யம் வந்தே3 வேத3ாந்ததே3ஶிகம் ॥

வாழி இராமநுசப் பிள்ளான் மாதகவால்
வாழும்⋆ அணிநிகமாந்தகுரு - வாழியவன்⋆
மாறன் மறையும் இராமானுசன் பாஷியமும்
தேறும் படியுரைக்கும் சீர்

வஞ்சப் பரசமயம் மாற்றவந்தோன் வாழியே⋆
மன்னுபுகழ்ப் பூதூரான் மனமுகப்போன் வாழியே⋆
கஞ்சத் திருமங்கை உகக்கவந்தோன் வாழியே⋆
கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே⋆
செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே⋆
திருமலைமால் திருமணியாய்ச் சிறக்கவந்தோன் வாழியே⋆
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே⋆
செந்தமிழ்த் தூப்புல் திருவேங்கடவன் வாழியே

www.prapatti.com

நானிலமுந் தான்வாழ நான்மறைகள் தாம்வாழ⋆
மாநகரின் மாறன் மறைவாழ⋆ - ஞானியர்கள்
சென்னியணி சேர் தூப்புல் வேதாந்த தேசிகனே
இன்னுமொரு நூற்றாண்டிரும்

வாழியணி தூப்புல் வரு நிகமாந்தாசிரியன்⋆
வாழியவன் பாதாரவிந்தமலர்⋆ - வாழியவன்
கோதிலாத் தாண்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்
தீதிலா நல்லோர் திரள்

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஸ்வாமி நிகமாந்தமஹாதேஶிகந் திருநாள் பாட்டு ॥

வாதாசனவர ரிவரென வருமா பாடியம் வகைபெறுநாள்⋆
வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசி அறிந்திடுநாள்⋆
பேதா பேதம் பிரமமெனாவகை பிரமந் தெளிவுறுநாள்⋆
பேச்சொன்றுக்குச் சததூஷணியைப் பேசிய தேசிகநாள்⋆
தீதாகிய பலமாயக் கலியைச் சிக்கென வென்றிடுநாள்⋆
திக்கெட்டும் புகழ் ஶ்ரீபாஷ்யத்தைத் தெளியவுரைத் திடுநாள்⋆
ஓதாதோதும் வேதாந்தாரியன் உதயம் செய்திடுநாள்⋆
உத்தமமான புரட்டாசித் திருவோணம் எனுநாளே

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com

www.prapatti.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

# ॥ ஸ்ரீதேஶிகமங்களம் ॥

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம் ।
விஶ்வாமித்ரகுலோத்பூதம் வரதார்யமஹம் பஜே ॥

ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ராய ஸிம்ஹாய கவிவாதிநாம் ।
வேதாந்தாசார்ய வர்யாய வேங்கடேஶாய மங்களம் ॥ 1 ॥

நபஸ்யமாஸி ஶ்ரோணாயாம் அவதீர்ணாய ஸூரயே ।
விஶ்வாமித்ராந்வயாயாஸ்து வேங்கடேஶாய மங்களம் ॥ 2 ॥

பிதா யஸ்யாநந்தஸூரி: புண்டரீகாக்ஷ யஜ்வந: ।
பௌத்ரோ யஸ்தநயஸ்தோதாரம்பாயாஸ்தஸ்ய மங்களம் ॥ 3 ॥

வேங்கடேஶாவதாரோऽயம் தத்கண்டாம்ஶோऽதவா பவேத் ।
யதீந்த்ராம்ஶோऽதவேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்களம் ॥ 4 ॥

ஸ்ரீபாஷ்யகார: பந்தாநம் ஆத்மநா தர்ஶிதம் புந: ।
உத்தர்துமாகதோ நூநம் இத்யுக்தாயாஸ்து மங்களம் ॥ 5 ॥

யோ பால்யே வரதார்யஸ்ய ப்ராசார்யஸ்ய பராம் தயாம் ।
அவாப்ய வ்ருத்திம் கமித: தஸ்மை யோக்யாய மங்களம் ॥ 6 ॥

ராமாநுஜார்யாதாத்ரேயாத் மாதுலாத் ஸகலா: கலா: ।
அவாப விம்ஶத்யப்தே ய: தஸ்மை ப்ராஜ்ஞாய மங்களம் ॥ 7 ॥

ஶ்ருதப்ரகாஶிகா பூமௌ யேநாதௌ பரிரக்ஷிதா ।
ப்ரவர்திதா ச பாத்ரேஷு தஸ்மை ஶ்ரேஷ்டாய மங்களம் ॥ 8 ॥

www.prapatti.com

ஸாம்ஸ்க்ருதீபிர்த்ராமிடீபி: பஹ்வீபி: க்ருதிபிர்ஜநாந் ।
யஸ்ஸமுஜ்ஜீவயாமாஸ தஸ்மை ஸேவ்யாய மங்களம் ॥ 9 ॥

ய: க்யாதி லாப பூஜாஸு விமுகோ வைஷ்ணவே ஜநே ।
க்ரயணீய தஶாம் ப்ராப்த: தஸ்மை பவ்யாய மங்களம் ॥ 10 ॥

யஸ்மாதேவ மயா ஸர்வம் ஶாஸ்த்ரமக்ராஹி நாந்யத: ।
தஸ்மை வேங்கடநாதாய மம நாதாய மங்களம் ॥ 11 ॥

பித்ரே ப்ரஹ்மோபதேஷ்ட்ரே மே குரவே தைவதாய ச ।
ப்ராப்யாய ப்ராபகாயாஸ்து வேங்கடேஶாய மங்களம் ॥ 12 ॥

ய: க்ருதம் வரதார்யேண வேதாந்தாசார்ய மங்களம் ।
ஆஶாஸ்தே஽நுதிநம் ஸோ஽பி பவேந் மங்கள பாஜநம் ॥ 13 ॥

கவிதார்கிகஸிம்ஹாய கல்யாணகுணஶாலிநே ।
ஸ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்த குரவே நம: ॥ 13 ॥

வாதித்விப ஶிரோபங்க பஞ்சாநந பராக்ரம: ।
ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: சிரம் விஜயதாம் புவி ॥ 13 ॥